بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

தொகுதி 8

இதழ் 30-31

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரி கமரி 1445 முஹர்ரம் 08-15★ ஹிஜ்ரி ஷம்ஸி-1402 வஃபா 27-03 ஸஹுர் ★27 ஜுலை - 03 ஆகஸ்ட் 2023


**அல்லாஹ்வின் கட்டளை**

مَا كَانَ مُحَمَّدٌ اَبَآ اَحَدٍ مِّنۡ رِّجَالِكُمۡ وَلٰكِنۡ رَّسُوۡلَ اللّٰهِ وَخَاتَمَ النَّبِيّٖنَ ؕ وَكَانَ اللّٰهُ بِكُلِّ شَىۡءٍ عَلِيۡمًا ﴿۴۱﴾

**பொருள் :**
முஹம்மது உங்களுள் எந்த ஆணுக்கும் தந்தை இல்லை. ஆனால் (அவர்) அல்லாஹ்வின் தூதராகவும், நபிமார்களுக்கெல்லாம் கா(த்)தம் ஆகவும் விளங்குகின்றார். மேலும் அல்லாஹ் எல்லாவற்றையும் நன்கறிந்தவனாவான்.
(அல் அஹ்ஸாப் : 41)


**அஹ்மதிய்யா செய்திகள்**

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸுர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸுர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

# சீரத்துன்நபி சிறப்பிதழ்

**அனைத்து தூதர்களுக்கும் தலைவரான முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் மீதும் அன்னாரின் குடும்பத்தினரின் மீதும் ஸஹாபிகள் மீதும் அருளும் சாந்தியும் உண்டாகட்டுமாக!**
**இறைவன் அன்னார் மூலம் வழிதவறிய ஓர் உலகை நேர்வழியில் வழிநடத்தினான்**
**அவர் மறதியில் ஆழ்ந்து கிடந்த படைப்பினத்தை மீண்டும் நேரான பாதைக்கு கொண்டு வந்த ஆன்மிக பராமரிப்பாளரும், பயனளிக்கக் கூடியவரும் ஆவார்**

## ஸய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் உறுதி மொழி வழங்கப்பட்ட மஹ்தி(அலை) அவர்களின் மேற்கோள்



இறைவா! உனக்கு ஆயிரமாயிரம் நன்றிகள். ஏனெனில், உன்னை அடையாளம் கண்டு கொள்வதற்கு நீ! சுயமே எங்களுக்கு வழியை கூறிவிட்டாய். மேலும் நீ! உனது தூய வேதங்களை இறக்கி சிந்தனை மற்றும் அறிவின் தவறுகளிலிருந்தும், பிழைகளிலிருந்தும் எங்களை காப்பாற்றி விட்டாய்! மேலும் அனைத்து தூதர்களுக்கும் தலைவரான முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் மீதும் அன்னாரின் குடும்பத்தினரின் மீதும் ஸஹாபிகள் மீதும் அருளும் சாந்தியும் உண்டாகட்டுமாக! இறைவன் அவர் மூலம் வழிதவறிய ஓர் உலகை நேர்வழியில் வழிநடத்தினான். மேலும் அவர் மறதியில் ஆழ்ந்து கிடந்த படைப்பினத்தை மீண்டும் நேரான பாதைக்கு கொண்டு வந்த ஆன்மிக பராமரிப்பாளரும், பயனளிக்கக் கூடியவரும் ஆவார். அவர் மக்களை இணை வைத்தல் மற்றும் சிலைகளின் தீங்கிலிருந்து காப்பாற்றிய கருணையாளரும், பேருபகாரம் செய்தவரும் ஆவார். மேலும், அவர் ஒளியாவார். மேலும், அவர் ஏகத்துவத்தின் ஒளியை உலகில் பரப்பிய ஒளிக்கதிர் ஆவார். மேலும், அவர் சீர்கெட்ட உள்ளங்களை நேர்வழியில் நிலைபெறச் செய்த வைத்தியரும், காலத்தின் மருத்துவரும் ஆவார். அவர் கண்ணியத்திற்குரியவரும், மரணித்தவர்களுக்கு வாழ்வளிக்கும் நீரை பருகச் செய்யக்கூடிய அற்புதங்களை நிகழ்த்தியவரும் ஆவார். அவர் சமுதாயத்திற்காக வேதனையுற்றவரும், மீண்டும் மீண்டும் கருணை காட்டக் கூடியவரும், பரிவு மிக்கவரும் ஆவார். அவர் வேதனைகளை சுமந்தார். நம்மை மரணத்தின் வாயிலிருந்து நம்மை வெளியேற்றிய வீரரும், பயில்வானும் ஆவார். மேலும், அவர் மிக மென்மையானவர் ஆவார். அவர் தன்னலமற்ற அடியார் ஆவார். மேலும், தமது இருப்பை மண்ணோடு கலந்துவிட்டவர் ஆவார். மேலும், முழுமையான ஏகத்துவவாதி ஆவார். மேலும் அவர் இறைவனின் கம்பீரம் அனுப்பிய ஞானக் கடல் ஆவார். மேலும் அந்நியர்களை அவர் தமது பார்வையால் வீழ்த்தினார். மேலும், அவர் எழுதப்படிக்கத் தெரியாதவராக இருந்து அனைத்து உண்மையான ஞானங்களிலும் வெற்றிக் கொண்டவரும், அனைத்து சமுதாயங்களின் தவறுகளையும், பிழைகளையும் சுட்டிக் காட்டிய அளவற்ற அருளாளனின் வல்லமையின் அற்புதமும் ஆவார்.

எனது உள்ளத்தில் எத்தகைய ஒரு தலைவரின் புகழ் குடிகொண்டுள்ளது என்றால்
அவரது சிறப்புகளுக்கு நிகரானவர் வேறு எவரும் இல்லை
அவர் எல்லா இடத்திற்கும், எல்லா காலத்திற்கும் ஒளிதரும் கதிரவன் ஆவார்
மேலும் அனைத்து கருப்பர்களுக்கும், வெள்ளையர்களுக்கும் வழிகாட்டி ஆவார்

(பராஹீனே அஹ்மதிய்யா, பாகம் 1, ரூஹானீ கஸாயீன் தொகுதி 1, பக்கம்-17)


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰهِ

பதர் வார இதழ் காதியான்

சிறப்பிதழ்

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு

## இந்த இதழில்


| | இந்த இதழில் | பக்கம் |
|---|---|---|
| 1 | தலையங்கம் | 2 |
| 2 | ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் ஜுமுஆ பேருரை (ஜுன் 23, 2023) | 3 |
| 3 | அமைதியை நிலைநாட்டுதல் என்ற அம்சத்தின் ஒளியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை | 12 |
| 4 | உலகத்திற்கு சுதந்திரம் வழங்கக் கூடியவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் | 18 |
| 5 | நபித்தோழர்களின் வரலாறு | 22 |


# ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மீது கண்ணியத்திற்குரிய ஸஹாபிகளின் நேசம்

அன்பிற்குரிய நமது எஜமானர் ஸய்யிதுனா ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் இருப்பானது அன்ஸார் மற்றும் முஹாஜிர்களுக்கு மத்தியில் ஓர் ஒளி விளக்கு விட்டில் பூச்சிகளுக்கு மத்தியில் இருப்பதைப் போன்று இருந்தது. ஸஹாபிகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது உள்ளத்தாலும், உயிராலும் தங்களை மாய்த்துக் கொண்டிருந்தனர். அன்னாருடைய எல்லாக் கட்டளைகளுக்கும் செவிமடுத்தார்கள். அன்னாரை ஸஹாபிகள் நிழலைப் போன்று பின்தொடர்ந்து வந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இறை ஞானம், மதிப்பச்சம், ஒளிமயமான அருளுக்குரிய முகம் ஆகியவற்றின் காரணமாக சில ஸஹாபிகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நேர்கொண்டு பார்க்க முடியாமல் இருந்தனர். அன்னாரிடம் கேள்வி கேட்பதற்கு நாணம் கொண்டிருந்தார்கள். மேலும், யாராவது ஒரு கிராமவாசி வந்து கேள்வி கேட்டால் நாமும் கேட்டுக் கொள்ளலாம் என்று காத்திருந்தார்கள். அந்த ஸஹாபிகளின் பார்வையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உலகின் எல்லா விஷயங்களையும் விட மதிப்பு மிக்கவர்களாக இருந்தார்கள். ஸஹாபிகள் எந்நிலையிலும் அன்னாரை விட்டு விலகியிருப்பதையும், அன்னாரை இழப்பதையும் விரும்பவில்லை. மேலும், ஆணோ, பெண்ணோ, முதியவரோ, குழந்தையோ எவருமே அன்னாரை விட்டுப் பிரிவதை ஒருபோதும் விரும்பியிருக்கவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்தின்போது ஸஹாபிகள் அனைவரும் துக்கத்தின் காரணமாக பித்துப் பிடித்தவர்களைப் போன்று ஆகிவிட்டனர்.ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் போன்ற வீர மிக்க மனிதரும் எப்படி ஆகிவிட்டார்கள் என்றால், அன்னாருக்கு எழுந்து நிற்கக் கூட ஆற்றல் இல்லாமல் போனது. மேலும், அன்னாரால் ஓர் அடி கூட எடுத்து வைக்கமுடியாமல் போனது. இறைத் தூதரின் கவிஞர் ஹஸ்ஸான் பின் ஸாபித் (ரலி) அவர்களின் இந்தக் கவிதை ஸஹாபிகளின் நிலைமைகளை சரியாக வெளிப்படுத்துகின்றது:

كُنْتَ السَّوَادَ لِنَاظِرِىْ فَعَمِىَ عَلَيْكَ النَّاظِرُ

مَنْ شَاءَ بَعْدَكَ فَلْيَمُتْ فَعَلَيْكَ كُنْتُ اُحَاذِرُ

பொருள்: முஹம்மத் ((ஸல்) அவர்களே)! நீர் எனது கண்ணின் கருவிழியாக இருந்தீர்! நீர் மரணமடைந்து விட்டதால் எனது கண் குருடாகிவிட்டது. இனி யார் வேண்டுமானாலும் மரணிக்கட்டும். எனக்கோ உமது மரணத்தைக் குறித்த அச்சமே இருந்தது!

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒருமுறை மஸ்ஜித் முபாரக்கில் இங்கும் அங்கும் நடந்துக் கொண்டிருந்தார்கள். மேலும், ஹஸ்ரத் ஹஸ்ஸான் பின் ஸாபித் (ரலி) அவர்களின் இந்தக் கவிதையைப் படித்தவாறு தமது எஜமானர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களை நினைத்து தொடர்ந்து கண்ணீர் சிந்திக் கொண்டிருந்தார்கள். ஒருவர் அது குறித்து விசாரித்தபோது, இந்தக் கவிதை எனது நாவிலிருந்து வெளிப்பட்டிருக்க வேண்டுமே! என்று அன்னார் (அலை) கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஸஹாபிகள் கொண்டிருந்த அன்பு மற்றும் நேசத்தின் (காலத்தால்) அழியாத சில சம்பவங்களை கீழே வாசகர்களின் பார்வைக்கு நாங்கள் சமர்ப்பிக்கின்றோம்:

ஸஃபர் மாதம், ஹிஜ்ரீ 4ஆம் ஆண்டு அஸ்ல் மற்றும் காரா கோத்திரங்களைச் சேர்ந்த சில மக்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜராகி இவ்வாறு வேண்டினர்: அதாவது, எங்களது கோத்திரங்களைச் சேர்ந்த ஏராளமான நபர்கள் இஸ்லாத்தின் பக்கம் ஈர்க்கப்பட்டுள்ளனர். எனவே சில நபர்களை தாங்கள் (ஸல்) எங்களுடன் அனுப்பி வையுங்கள்; அவர்கள் எங்களை முஸ்லிம்களாக ஆக்கட்டும்;மேலும் இஸ்லாத்தின் போதனைகளைக் கற்றுக் கொடுக்கட்டும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த மக்களின் இந்த விருப்பத்தை அறிந்து மகிழ்ச்சியடைந்தார்கள். மேலும், பத்து ஸஹாபிகளைக் கொண்ட ஒரு குழுவினரை அவர்களுடன் அனுப்பி வைத்தார்கள். ஆனால், உள்ளபடியே அந்த நபர்கள் பொய்யர்களாக இருந்தனர் என்பது பின்னர் தெரிய வந்தது. மேலும், பனூலஹ்யானின் தூண்டுதலின் பேரில் அவர்கள் மதீனாவிற்கு வந்திருந்தனர். பனூ லஹ்யான் தனது கோத்திரத்தின் தலைவர் ஸுஃப்யான் பின் காலித் கொலை செய்யப்பட்டதற்கு பழிவாங்குவதற்காக இந்தத் திட்டத்தை தீட்டியிருந்தது. அதாவது, இந்த சாக்குப்போக்குடன் மதீனாவிலிருந்து முஸ்லிம்களை வெளியேற்றி அவர்கள் மீது தாக்குதல் நடத்த வேண்டும் என்பது அவர்களின் சதித்திட்டமாக இருந்தது. மேலும் பனூலஹ்யான் கோத்திரம் அஸ்ல் மற்றும் காரா கோத்திரங்களைச் சேர்ந்த இந்த மக்களுக்கு இந்த சேவைக்கு பகரமாக ஏராளமான ஒட்டகங்களை அன்பளிப்பாக வழங்குவதாக நிர்ணயித்திருந்தது. மேலும், அஸ்ல் மற்றும் காரா கோத்திரத்தைச் சேர்ந்த இந்த துரோகிகள் அஸ்ஃபான் மற்றும் மக்காவிற்கு இடையே சென்றடைந்தபோது அவர்கள் பனூ லஹ்யான் கோத்திரத்தாருக்கு இரகசியமாக இந்த தகவலைக் கொடுத்தனர். அதாவது, முஸ்லிம்கள் எங்களுடன் வருகின்றனர்; நீங்கள் வந்து விடுங்கள் என்று தகவல் கொடுத்தனர். அதனால் பனூ லஹ்யான் கோத்திரத்தின் இருநூறு இளைஞர்கள் வந்தனர். அவர்களில் நூறு நபர்கள் அம்பு எய்யும் வீரர்களாக இருந்தனர். அவர்கள் முஸ்லிம்களை பிடிப்பதற்காக புறப்பட்டிருந்தார்கள். மேலும் ரஜீஃ என்ற இடத்தில் வந்து அவர்களை பிடித்தனர். ஸஹாபிகள் ஒரு குன்றின் மீது ஏறிவிட்டார்கள். மேலும், போரிட்டார்கள். பத்தில் ஏழு பேர் ஷஹீதாகிவிட்டனர். நாங்கள் உங்களை ஒன்றும் செய்ய மாட்டோம் என்று அவர்கள் பொய்யுரைத்து ஹஸ்ரத் ஹுபைப் பின் அதீ (ரலி), ஹஸ்ரத் ஸைத் பின் வஸ்னா (ரலி), மற்றும் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் தாரிக் (ரலி) ஆகிய மூன்று ஸஹாபிகளை குன்றிலிருந்து கீழே இறங்கி வரச் செய்துவிட்டார்கள். ஆனால் அவர்கள் கீழே இறங்கி வந்த உடனேயே அவர்களை கைது செய்துவிட்டார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் உடன் செல்வதற்கு மறுத்துவிட்டார்கள். எனவே அவர்கள் ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) அவர்களை வழியிலேயே கொன்றுவிட்டார்கள். பனூ லஹ்யானின் பழிவாங்குதல் முழுமையடைந்திருந்தது. தற்போது அவர்கள் குறைஷியர்களை மகிழ்ச்சிப்படுத்துவதற்காகவும், பணத்திற்கான பேராசையாலும் ஹஸ்ரத் ஹுபைப் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் ஸைத் (ரலி) ஆகியோரை அழைத்துக் கொண்டு மக்காவை நோக்கி புறப்பட்டுவிட்டார்கள். மேலும், அங்கு சென்றடைந்து குறைஷியர்களிடம் அவர்களை விற்றுவிட்டார்கள். எனவே ஹஸ்ரத் ஹுப்பாப் (ரலி) அவர்களை ஹாரிஸ் பின் ஆமிர் பின் நவ்ஃபல் என்பவனின் மகன்கள் விலைக்கு வாங்கினர்.

ஏனெனில், பத்ர்ப் போரில் ஹஸ்ரத் ஹுபைப் (ரலி) அவர்கள் அவனை கொலை செய்திருந்தார்கள். மேலும் ஹஸ்ரத் ஸைத் (ரலி) அவர்களை ஸஃப்வான் பின் உமைய்யா வாங்கினான். ஹஸ்ரத் ஹுபைப் (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஸைது (ரலி) ஆகிய இரு ஸஹாபிகளின் ஷஹாதத் சம்பவம் மிகவும் ஈமானை வலுவூட்டக் கூடிய சம்பவம் ஆகும். ஸஃப்வான் பின் உமைய்யா தனது கைதியான ஸைது பின் வஸ்னா (ரலி) அவர்களை தன்னுடன் அழைத்துக் கொண்டு புனிதமாக்கப்பட்ட பகுதிக்கு வெளியில் சென்றான். குறைஷிய தலைவர்களின் ஒருக் கூட்டம் அவனுடன் இருந்தது. வெளியில் சென்று, ஸைதை கொலை செய்து விடு என்று ஸஃப்வான் பின் உமைய்யா தனது அடிமையான நஸ்தாஸ் என்பவனுக்கு கட்டளையிட்டான். நஸ்தாஸ் முன்னேறிச் சென்று வாளை உயர்த்தினான். உண்மையைக் கூறு; உனது இடத்தில் எங்களது பிடியில் முஹம்மது இருந்து நாங்கள் அவரை கொன்றிருக்க வேண்டும்; மேலும் நீ உயிர் பிழைத்திருக்க வேண்டும்; மேலும், உமது குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக வாழ்க்கையை கழித்திருக்க வேண்டும்! என்று உனது உள்ளம் விரும்பவில்லையா? என அந்நேரத்தில் பார்வையாளர்களில் ஒருவராக இருந்த மக்கத்து தலைவரான அபூஸுஃப்யான் பின் ஹர்ப் முன்னால் சென்று கூறினார்.

ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்களின் கண்களில் இரத்தம் வந்துவிட்டது. மேலும் கோபம் பொங்கக் கூறினார்கள்:

அபூஸுஃப்யான் நீ என்ன கூறுகின்றாய்? இறைவன் மீது ஆணையாக! நான் உயிர் பிழைப்பதற்கு பகரமாக இறைத் தூதர் (ஸல்) அவர்களின் பாதங்களில் ஒரு முள் தைப்பதைக் கூட நான் விரும்ப மாட்டேன்.

அப்போது அபூஸுஃப்யான் தன்னிலை மறந்து இவ்வாறு கூறினார்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! முஹம்மத் (ஸல்) அவர்களின் தோழர்கள் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது நேசம்

இதன் தொடர்ச்சி : 21ஆம் பக்கம்

# ஜுமுஆ பேருரை

**பத்ர் போருக்கான ஆயத்தங்களின் நிலைமைகள் மற்றும் சம்பவங்கள் - ஸஹாபா பெருமக்கள் தமது எஜமானர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த நேசம் மற்றும் கட்டுப்படுதல் ஆகியவற்றைக் குறித்த குத்பா பேருரை**

**உங்களுக்கு நற்செய்தி உண்டாகட்டுமாக. அல்லாஹ் இரண்டு கூட்டத்தினர்களில் ஒரு கூட்டத்தினரின் மீது வெற்றிக்கான வாக்குறுதியை வழங்கியுள்ளான். இறைவன் மீது ஆணையாக! எங்கு எதிரியின் ஆட்கள் கொலையுண்டு மடிவார்களோ அந்த இடத்தை நான் தற்போது கண்டு கொண்டிருக்கின்றேன்**

**அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தற்போது தங்களின் உண்மைத்துவம் எங்கள் மீது மிகவும் தெளிவாகிவிட்டது; தங்களின் அந்தஸ்தும் எங்களுக்கு தெளிவாகியுள்ளது.தற்போது எந்த உடன்படிக்கை குறித்தும் எந்தக் கேள்வியும் இல்லை. (எங்களுக்கு) முன்னால் கடல் உள்ளது. தாங்கள் கட்டளையிடுங்கள்; நாங்கள் எங்கள் குதிரைகளை கடலில் வீசுவதற்கு தயாராக உள்ளோம். மேலும் போர் நிகழ்ந்தால், இறைவன் மீது ஆணையாக! நாங்கள் தங்களின் வலப்புறமும் போரிடுவோம்; இடப்புறமும் போரிடுவோம். முன்னாலும் போரிடுவோம். பின்புறமிருந்தும் போரிடுவோம். மேலும், எதிரிகள் எங்களின் பிணங்களை மிதித்து தாண்டிய பிறகு தான் தங்களை வந்தடைய முடியும்**

**அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நாங்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை தங்களின் பாதுகாப்பிற்காக நியமித்து விட்டோம். மேலும் மிகவும் வேகமாக ஓடக் கூடிய ஓர் ஒட்டகத்தை தங்களுக்கு அருகில் கட்டி வைத்து விட்டோம். இறைவன் நாடாமல் இருக்கட்டும். ஒருவேளை நாங்கள் ஒவ்வொருவராக இங்கு மடிந்துவிட்டால் அல்லாஹ்வின் தூதல் (ஸல்) அவர்களே! இதோ ஒட்டகம் உள்ளது. இதில் சவாரி செய்து கொள்ளுங்கள். மேலும் மதீனாவை சென்றடைந்து விடுங்கள்**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 23 ஜூன் 2023** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1402 ஆண்டு இஹ்ஸான் மாதம் **23ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ○

கடந்த குத்பாவில் கூறப்பட்டிருந்தது போன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் அனுப்பப்பட்டிருந்த ஒற்றர்கள் திரும்பி வந்து ஒரு வணிகக் குழு அல்லது படை வருவதாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தகவல் கொடுத்தார்கள். (அந்த) வணிகக் குழுவின் பாதுகாப்பிற்காக குறைஷியர்களின் படை முன்னேறி வந்து கொண்டிருக்கின்றது என்ற தகவல் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கிடைத்தபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸஹாபிகளிடம் ஆலோசனைக் கேட்டார்கள். மேலும், அவர்களுக்கு குறைஷியர்களின் நிலைமைகளைக் குறித்து எடுத்துரைத்தார்கள். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எழுந்து நின்று மிகவும் அழகிய உரையாடலை நிகழ்த்தினார்கள். பின்னர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எழுந்தார்கள். அன்னாரும் அழகிய வடிவில் உரையாடல் நிகழ்த்தினார்கள். பின்னர், ஹஸ்ரத் மிக்தாத் பின் அம்ர் (ரலி) எழுந்தார்கள். மேலும், கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அல்லாஹ் எங்கு செல்வதற்கு கட்டளை வழங்கியுள்ளானோ அங்கு தாங்கள் புறப்பட்டுச் செல்லுங்கள்: நாங்கள் தங்களுடன் இருக்கின்றோம்.

فَاذْهَبْ أَنْتَ وَرَبُّكَ فَقَاتِلَآ اِنَّا هَاهُنَا قَاعِدُوْنَ

(அல்மாயிதா: 25) நீரும் உமது இறைவனும் சென்று போரிடுங்கள்; நாங்கள் இங்கேயே அமர்ந்திருப்போம் என்று பனீ இஸ்ராயீல் ஹஸ்ரத் மூஸா(அலை) அவர்களுக்கு வழங்கிய பதிலை, இறைவன் மீது ஆணையாக! நாங்கள் தங்களுக்கு கொடுக்க மாட்டோம். மாறாக, நாங்கள் இவ்வாறே கூறுவோம். அதாவது தாங்களும், தங்களது இறைவனும் (எங்களை) அழைத்து செல்லுங்கள்; மேலும் போரிடுங்கள்; நாங்களும் தங்களுடன் இணைந்து போரிடுவோம் என்று கூறுவோம்.

தங்களை உண்மையுடன் அனுப்பியுள்ள அந்த இறைவன் மீது ஆணையாக! தாங்கள் எங்களை பர்குல் கமாத் வரை அழைத்துச் சென்றாலும் கூட நாங்கள் தங்களுடன் செல்வோம். பர்குல் கமாதைக் குறித்து இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: அதாவது, இந்த இடம் ஏமனில் உள்ளது. மேலும் மக்காவிலிருந்து 5 மன்ஸில் தொலைவில் உள்ளது. அரேபியர்களைப் பொறுத்த வரை மிக அதிகபட்ச தூரத்திற்கு இதுவும் ஒரு விளக்கமாக இருந்தது. பின்னர் அன்னார் (ரலி) இவ்வாறு கூறினார்கள்: தாங்கள் அங்கு சென்றடைந்து விடும் வரை நாங்கள் தங்களுடன் இணைந்து எதிரிகளுடன் போர் புரிந்து கொண்டே செல்வோம்.

இறைத் தூதர் (ஸல்) அவர்கள் அன்னாருக்கு நன்மையான வார்த்தைகளை கூறினார்கள். மேலும் அன்னாருக்காக துஆ செய்தார்கள். (அஸ்ஸீரத்துன்னபவிய்யா, லி இப்னி ஹஷ்ஷாம், பக்கம் 420 - 421, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் 2001)

ஒரு நூலாசிரியர் இவ்வாறு எழுதியுள்ளார்: அதாவது பர்குல் கமாத் என்பது மக்காவின் தெற்கே சுமார் 430 கிலோ மீட்டர் தொலைவில் பொதுவான நெடுஞ்சாலையை விட்டு விலகி தொலைதூரப் பகுதியில் இருந்தது. அது பயணத்தின் தூரம் மற்றும் கடினத்தை உணர்த்துவதற்காக ஒரு பழமொழியாக கூறப்பட்டு வந்தது. உதாரணமாக, தொலைதூரம் என்ற பொருளை உணர்த்துகின்ற காஃப் என்ற சொல்லை கூறுவது போன்று அந்த வாக்கியம் கூறப்பட்டு வந்தது. அதன் பொருள், எவ்வளவு தொலைவு தாங்கள் அழைத்துச் சென்றாலும் நாங்கள் தங்களுடன் இருப்போம். (தாயிரா மஆருஃப் ஸீரத் முஹம்மதே ரஸூல் (ஸல்) தொகுதி 6, பக்கம் 139, ஏப்ரல் 2022)

இது தொடர்பாக ஒரு விளக்கமும் உள்ளது. அதாவது, ஹஸ்ரத் மிக்தாத் (ரலி) அவர்கள் அந்த சந்தர்ப்பத்தில் ஓதிய வசனம் சூரா மாயிதாவின் வசனம் ஆகும். மேலும், இந்த சூரா மிகவும் பிற்காலத்தில் இறங்கக் கூடிய சூரா ஆகும். எனவே அந்த சந்தர்ப்பத்தில் இந்த வசனத்தை ஓதுவது சாத்தியமற்றதாகும் என்ற இந்தக் கேள்வியை சில வாழ்க்கை வரலாற்றாசிரியர்கள் எழுப்பியுள்ளனர். ஆனால், பின்னர் சுயமே இந்த திருக்குர்ஆன் விரிவுரையாளர்களே அதற்கான பல்வேறு வாய்ப்புகளையும் முன்வைத்துள்ளனர். உதாரணமாக, அவர்கள் பனீ இஸ்ராயீலின் அந்தக் கூற்றை யூதர்களிடமிருந்து கேட்டிருக்கலாம் அல்லது பிற்காலத்து ஓர் அறிவிப்பாளர் இந்த வசனத்தை சேர்த்து இருக்கக் கூடும் என்று கூறுகின்றனர். எவ்வாறு இருப்பினும், இந்த ஆட்சேபனை அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது அல்ல. ஏனெனில், வாழ்க்கை வரலாற்று நூல்களில் அதிகமாக இந்த அறிவிப்பு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. மேலும்,

இப்னு ஹிஜ்ருடைய புகாரியின் ஒரு விளக்கவுரையான ஃபத்ஹுல்பாரியில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: சூரா மாயிதா எனும் முழு அதிகாரமும் ஹஜ்ஜத்துல் விதா சந்தர்ப்பத்தின்போது இறங்கியது என்ற விஷயம் சரியானதல்ல. அதனுடைய சில வசனங்கள் சில காலத்திற்கு முன்னரே இறங்கியிருந்தன. அவற்றில் ஒரு வசனத்தைத் தான் ஹஸ்ரத் மிக்தாத் (ரலி) அவர்கள் பத்ர் போர் சந்தர்ப்பத்தின்போது திலாவத் செய்தார்கள். ஆயினும், எவ்வாறு இருப்பினும் யூதர்களிடமிருந்தும் இதே விஷயங்களை கேட்டிருந்தனர். அதுவும் சரியானதாக இருக்கக் கூடும்.

பின்னர் எடுத்துரைக்கப்பட்டுள்ளது: இந்த மூவரும் அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), ஹஸ்ரத் உமர் (ரலி), மற்றும் ஹஸ்ரத் மிக்தாத் (ரலி) ஆகியோர் முஹாஜிர்களைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். எனவே, அன்ஸார் சகோதரர்களின் கருத்தை அறிய வேண்டும் என்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விருப்பம் கொண்டிருந்தார்கள்.

(மவ்லானா ஸஃபிய்யுர் ரஹ்மான் முபாரக்பூரீ அவர்களின் அர்ரஹீகுல் மக்தூம் என்ற நூல் - பக்கம் 285, அல்மக்தபத்துஸ் ஸலஃபீயா, லாஹூர்) (ஃபத்ஹுல் பாரீ, தொகுதி 2, பக்கம் 201, தாயிரா மஆரிஃபே ஸீரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்), தொகுதி 6, பக்கம் 139, ஏப்ரல் 2022)

ஆக, இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மக்களே! எனக்கு ஆலோசனை வழங்குங்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியதன் பொருள் அன்ஸார் சகோதரர்களாக இருந்தனர். மேலும், அநேகமாக அதன் ஒரு காரணம் இதுவாகவும் இருக்கக் கூடும். அதாவது, பைஅத்தே உக்பாவின் நேரத்தில் அவர்கள் இவ்வாறு கூறினார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் எங்களது நகரத்திற்கு வருகை தருவதற்கு முந்தைய காலம் வரை நாங்கள் தங்களின் பொறுப்பிலிருந்து விலகியிருந்தோம். ஆனால், தாங்கள் மதீனாவிற்கு வருகை தந்துவிடும்போது நாங்கள் தங்களுக்கு பொறுப்பாளர்களாக இருப்போம். நாங்கள் எந்த விஷயங்களின் மூலமாக எல்லாம் எங்களது பிள்ளைகள் மற்றும் பெண்களை பாதுகாக்கின்றோமோ அந்த அனைத்து விஷயங்களின் மூலமும் நாங்கள் தங்களை பாதுகாப்போம். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த சந்தேகத்தை வெளிப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

அதாவது, மதீனாவின் மீது திடீரென தாக்குதல் நடத்துகின்ற அந்த எதிரியிடமிருந்துதான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பாதுகாப்போம்;மேலும் நகரத்திற்கு வெளியே சென்று எதிரிகளுடன் போரிடுவது தங்களுக்கு கடமையல்ல என்று அவர்கள் புரிந்திருக்கக்கூடும் என்ற ஐயத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வெளிப்படுத்திக் கொண்டிருந்தார்கள். ஆனால், இந்த விஷயத்தைக் கூறியபோது ஹஸ்ரத் ஸஅத் பின் முஆஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! ஹுஸுர் (ஸல்) அவர்கள் எங்களது கருத்தைக் கேட்கின்றீர்கள் என்றே எங்களுக்கு தோன்றுகிறது.

அதற்கு, நிச்சயமாக! என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் ஸஅத் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நிச்சயமாக நாங்கள் தங்கள் மீது ஈமான் கொண்டுள்ளோம். நாங்கள் தங்களை உண்மைப்படுத்தியுள்ளோம். மேலும், தாங்கள் கொண்டு வந்துள்ள மார்க்கம் உண்மையாகும் என்று நாங்கள் சாட்சியம் பகர்ந்துள்ளோம். மேலும், அதனால் நாங்கள் தங்களிடம் உடன்படிக்கை செய்துள்ளோம். மேலும், நாங்கள் தங்களது கட்டளைகளை செவியேற்பதாகவும், அதன்படி செயல்படுவதாகவும் உறுதியான உடன்படிக்கை செய்துள்ளோம். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எங்கு செல்வதற்கு தாங்கள் எண்ணம் கொண்டுள்ளீர்களோ அங்கு செல்லுங்கள்; நாங்கள் தங்களுடன் இருக்கின்றோம். தங்களை உண்மையுடன் அனுப்பியுள்ள அந்த இறைவன் மீது ஆணையாக! தாங்கள் எங்களை கடலுக்கு அருகில் அழைத்துச் சென்று தாங்கள் சுயமே அதில் நுழைந்து விட்டாலும் நாங்களும் தங்களுடன் கடலில் குதித்து விடுவோம். எங்களில் ஒருவர் கூட பின்தங்க மாட்டார். தாங்கள் நாளை எங்களை தங்களுடன் அழைத்துக் கொண்டு எதிரிகளை எதிர்கொள்வதை நாங்கள் விரும்புகின்றோம். நாங்கள் போரில் பொறுமை செய்யக் கூடியவர்கள் ஆவோம். எதிரியுடன் மோதும் நேரத்தில் நாங்கள் விசுவாசத்தை வெளிப்படுத்தக் கூடியவர்கள் ஆவோம். எந்த சிறப்பான பணிகளின் மூலமாக தங்களின் கண்கள் குளிர்ந்துவிடுமோ அதனை அல்லாஹ் எங்களின் மூலமாக தங்களுக்கு காட்டுவான். எனவே அல்லாஹ்வின் அருளினால் தாங்கள் எங்களை அழைத்துக் கொண்டு புறப்படுங்கள்.

ஸஹீஹ் முஸ்லிம் ஹதீஸ் நூலின் ஓர் அறிவிப்பில் இந்த சொற்கள் ஹஸ்ரத் ஸஅத் பின் உபாதா (ரலி) அவர்களின் சொற்களாக கூறப்பட்டுள்ளன. ஆனால், பெரும்பாலான அறிவிப்புகளுக்கு ஏற்ப ஹஸ்ரத் ஸஅத் பின் உபாதா (ரலி) அவர்கள் பத்ர் போரில் கலந்து கொண்டிருக்கவில்லை. எனவே வாழ்க்கை வரலாற்றாசிரியர்கள் இதற்கு இவ்வாறு விளக்கம் கொடுத்துள்ளார்கள். அதாவது, இரண்டு முறை ஸஹாபிகளிடம் ஆலோசனை செய்யப்பட்டிருக்கக் கூடும். முதல் முறை, மதீனாவில் வணிகக் குழுவின் வருகை தொடர்பான செய்தி கிடைத்தபோது மதீனாவில் ஹஸ்ரத் உபாதா (ரலி) அவர்கள் இந்த சொற்பொழிவை நிகழ்த்தியிருக்கக் கூடும். இரண்டாவது முறை, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பயணத்தில் இருந்தபோது ஆலோசனை செய்திருப்பார்கள். எனவே அந்த நேரத்தில் ஸஅத் பின் மஆஸ் (ரலி) அவர்கள் இந்த உரையாடலை நிகழ்த்தியிருக்கக் கூடும்.

எவ்வாறு இருப்பினும், பல்வேறு விரிவுரையாளர்கள் தங்களுக்கு ஏற்ப இந்த விளக்கத்தை எழுதி வந்துள்ளனர். ஆனால், அசல் விஷயம் இதுவே ஆகும். அதாவது ஹஸ்ரத் ஸஅத் பின் முஆஸ் (ரலி) அவர்களே இதனை கூறியிருந்தார்கள். ஹஸ்ரத் ஸஅத் பின் மஆஸ் (ரலி) அவர்களின் இந்த கூற்றை கேட்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள். மேலும் கூறினார்கள்: புறப்படுங்கள்; மேலும் உங்களுக்கு நற்செய்தி உண்டாகட்டுமாக. அல்லாஹ் இரண்டு கூட்டத்தினர்களில் ஒரு கூட்டத்தினரின்மீது வெற்றிக்கான வாக்குறுதியை வழங்கியுள்ளான். இறைவன் மீது ஆணையாக! எங்கு எதிரியின் ஆட்கள் கொலையுண்டு மடிவார்களோ அந்த இடத்தை நான் தற்போது கண்டு கொண்டிருக்கின்றேன்.

(அஸ்ஸீரத்துன்னபவிய்யா லி இப்னு ஹஷ்ஷாம், பக்கம் 421, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் 2001)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த சொற்களைக் கேட்டு ஸஹாபிகள் மிகவும் மகிழ்ச்சியடைந்தனர். ஆனால், அத்துடன் ஆச்சரியமடைந்தவாறு

هَلَّا ذَكَرْتَ لَنَا الْقِتَالَ فَنَسْتَعِدَّ

என்று கூறினார்கள். பொருள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தங்களுக்கு முன்னரே குறைஷியர்களின் படையைக் குறித்த தகவல் இருந்தது. அவ்வாறிருக்க தாங்கள் எங்களிடம் மதீனாவில் போருக்கான வாய்ப்பு இருக்கின்றது என்று ஏன் குறிப்பிடவில்லை? அவ்வாறு செய்திருந்தால் நாங்கள் சில ஆயத்தங்களை செய்து புறப்பட்டிருப்போம்.

ஆனால், இந்த தகவலுக்கு மத்தியிலும், இந்த ஆலோசனைக்கு மத்தியிலும் மேலும் அந்த இரு பிரிவினர்களில் ஒரு பிரிவின் மீது முஸ்லிம்களுக்கு நிச்சயமாக வெற்றி கிடைக்கும் என்ற நற்செய்தி இறைவன் புறமிருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கிடைத்திருந்தபோதிலும் எந்தக் கூட்டத்தினருடன் தங்களுக்கு மோதல் நிகழும்? என்பதை முஸ்லிம்கள் தெளிவாக அறியாதவர்களாக இருந்தனர். மேலும், முஸ்லிம்களாகிய அவர்கள் அந்த இரண்டு கூட்டத்தினரில் ஒரு கூட்டத்துடன் மோதல் நிகழுவதற்கான வாய்ப்பு இருக்கின்றது என்றே கருதியிருந்தார்கள். மேலும், அவர்கள் இயல்பாக பலவீனமான கூட்டத்தினருடன் அதாவது வணிகக் குழுவினருடன் மோதுவதற்கே அதிக விருப்பம் கொண்டிருந்தார்கள். ( ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் (ரலி) அவர்களின் ஸீரத் காத்தமுன்னபிய்யீன் என்ற நூல் - பக்கம் 355, 1996 ஆம் ஆண்டு பதிப்பு)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இது தொடர்பாக எடுத்துரைக்கின்றார்கள். பத்ர் போர் சந்தர்ப்பத்தில் மதீனாவிற்கு வெளியில் போர் நடைபெற இருந்தது. அப்போது இறைத் தூதர்

(ஸல்) அவர்கள் அனைத்து ஸஹாபிகளையும் ஒன்றுகூட்டினார்கள். மேலும், கூறினார்கள்: மக்களே! எனக்கு ஆலோசனை வழங்குங்கள். ஏனெனில், வணிகக் குழுவுடன் நமக்கு மோதல் நிகழாது; மாறாக, மக்காவின் படையுடன் நமக்கு போர் நிகழும் என்று எனக்கு தெரிய வந்துள்ளது. அப்போது, ஒருவர் பின் ஒருவராக முஹாஜிர்கள் எழுந்து நின்றார்கள். மேலும், அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் நிச்சயமாக போரிடுங்கள்; நாங்கள் தங்களுடன் இருக்கின்றோம். ஆனால், ஒவ்வொரு முறையும் ஒரு முஹாஜிர் ஸஹாபி தமது எண்ணங்களை வெளிப்படுத்தி விட்டு அமர்ந்து விட்ட பிறகும் மக்களே! எனக்கு ஆலோசனை வழங்குங்கள் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறிவந்தார்கள். முஹாஜிர்களோ ஆலோசனை வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள்; ஆனால், அசல் கேள்வி என்பது அன்ஸார் ஸஹாபிகளைக் குறித்தானது ஆகும் என்ற விஷயம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் எண்ணத்தில் இருந்தது. போரிடக் கூடியவர்கள் மக்கத்தினராக இருந்தனர் என்பதாலேயே அன்ஸார் ஸஹாபிகள் அமைதியாக இருந்தனர். மக்கா வாசிகளுடன் போரிடுவதற்கு நாங்கள் ஆயத்தமாக இருக்கின்றோம் என்று நாம் கூறினால் அதனை நமது முஹாஜிர் சகோதரர்கள் தீயதாகக் கருதக் கூடும்; மேலும், இந்த மக்கள் நமது சகோதர பந்தங்களின் கழுத்தை வெட்டுவதற்கு போட்டி போட்டுக் கொண்டு பேசிக் கொண்டிருக்கின்றனரே என்று முஹாஜிர் சகோதரர்கள் புரிந்து கொள்வார்கள் என்று அன்ஸார் ஸஹாபிகள் கருதியிருந்தனர். ஆனால், மக்களே! எனக்கு ஆலோசனை வழங்குங்கள் என்று மீண்டும், மீண்டும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியபோது, ஓர் அன்ஸாரி ஸஹாபி எழுந்து நின்றார்: மேலும், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தங்களுக்கு ஆலோசனை கிடைத்துக் கொண்டிருக்கின்றது; ஒருவருக்கு பிறகு மற்றொரு முஹாஜிர் எழுகின்றார்; மேலும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! போரிடுங்கள் என்று கூறுகின்றார். ஆயினும், மக்களே! எனக்கு ஆலோசனை வழங்குங்கள் என்றே தாங்கள் மீண்டும், மீண்டும் கூறி வருகின்றீர்கள். இதிலிருந்து தங்களின் பொருள் அநேகமாக அன்ஸார் சகோதரர்களாகிய நாங்களாக இருக்கின்றோம் என்று நான் கருதுகிறேன். அதற்கு இறைத் தூதர் (ஸல்) அவர்கள், ஆம்! என்று கூறினார்கள். அவர் கூறினார்: இறைத் தூதர் (ஸல்) அவர்களே! எங்களது முஹாஜிர் சகோதரர்களின் உள்ளம் வேதனையடைந்து விடக் கூடாது என்பதற்காகவே நாங்கள் அமைதியாக இருந்தோம்.

நாங்கள் போரிடுவதற்கு தயாராக இருக்கின்றோம் என்று நாங்கள் கூறியிருந்தால், இவர்கள் நமது சகோதரர்கள் மற்றும் உறவினர்களைக் கொல்வதற்கு ஆலோசனை வழங்கிக் கொண்டிருக்கின்றனர் என்ற எண்ணம் அவர்களின் உள்ளங்களில் தோன்றி விடக் கூடாதே என்று நாங்கள் அஞ்சிக் கொண்டிருந்தோம்.

பின்னர் அவர் கூறினார்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அநேகமாக தங்களின் சைகை பைஅத்தே உக்பாவின் பக்கம் இருக்கின்றது. மதீனாவில் ஓர் எதிரி தாக்குதல் நடத்தினால் நாங்கள் தங்களுக்கு ஆதரவாக இருப்போம்; ஆனால், மதீனாவிலிருந்து வெளியில் சென்று போரிட நேரிட்டால் அந்நிலையில் எங்கள் மீது எந்த கட்டுப்பாடும் இருக்காது என்று நாங்கள் அதில் கூறியிருந்தோம்.

இறைத் தூதர் (ஸல்) அவர்கள், ஆம், இதே விஷயம் தான் என்று கூறினார்கள். அதற்கு அந்த ஸஹாபி கூறினார்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நாங்கள் எந்த நேரத்தில் அந்த உடன்படிக்கை செய்திருந்தோமோ அந்தக் காலத்தில் தங்களின் அந்தஸ்து என்ன? என்பதை நாங்கள் சரியான முறையில் அறியாதவர்களாக இருந்தோம். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தற்போதோ தங்களின் உண்மைத்துவம் எங்கள் மீது மிகவும் தெளிவாகிவிட்டது; தங்களின் அந்தஸ்தும் எங்களுக்கு தெளிவாகியுள்ளது. தற்போது எந்த உடன்படிக்கை குறித்தும் எந்தக் கேள்வியும் இல்லை. (எங்களுக்கு) முன்னால் கடல் உள்ளது. தாங்கள் கட்டளையிடுங்கள்; நாங்கள் எங்கள் குதிரைகளை கடலில் வீசுவதற்கு தயாராக உள்ளோம். மேலும் போர் நிகழ்ந்தால், இறைவன் மீது ஆணையாக! நாங்கள் உங்களின் வலப்புறமும் போரிடுவோம்; இடப்புறமும் போரிடுவோம். முன்னாலும் போரிடுவோம். பின்புறமிருந்தும் போரிடுவோம். மேலும், எதிரிகள் எங்களின் பிணங்களை மிதித்து தாண்டாத வரை தங்களை வந்தடைய முடியாது.

(ஸேரே ரூஹானீ, எண்: 4, அன்வாருல் உலூம் - 19, பக்கம் 532 -533)

இந்த ஆலோசனைக்குப் பிறகு இறைத் தூதர் (ஸல்) அவர்கள் அங்கிருந்து புறப்பட்டு விட்டார்கள். மேலும், பல்வேறு சாலைகளை கடந்தவாறு பத்ருக்கு அருகில் சென்றடைந்தார்கள்.

பத்ரின் விளக்கம் முன்னரும் எடுத்துரைக்கப்பட்டு விட்டது. ஆயினும், (தற்போதும்) எடுத்துரைத்து விடுகின்றேன். மதீனாவிற்கு தென்மேற்கில் நூற்று ஐம்பது கிலோ மீட்டர் தொலைவில் (பத்ர்ப் போர் மைதானம்) அமைந்துள்ளது. இது ஒரு முட்டை வடிவில் அமைந்துள்ள ஐந்தரை மைல் நீளமும், நான்கு மைல் அகலமும் கொண்ட பரந்த பாலைவன மைதானம் ஆகும். அதனைச் சுற்றிலும் உயரமான மலைகள் உள்ளன. அதில் பல கிணறுகளும், தோட்டங்களும் உள்ளன. அங்கு பொதுவாக வணிகக் குழுக்கள் முகாமிட்டு வந்தன. பத்ர்ப் போர் மைதானத்திற்கு அருகில் சென்றடைந்ததற்கு சிறிது நேரம் கழித்து, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் சவாரி செய்து புறப்பட்டனர். எது வரை என்றால், ஓர் அரேபிய முதியவரிடம் சென்றடைந்து நின்று விட்டனர். மேலும், தாங்கள் யார் என்று அவரிடம் கூறாமல் குறைஷியர்களைக் குறித்தும், முஹம்மது (ஸல்) அவர்களைக் குறித்தும் அவரிடம் விசாரித்தனர். அதற்கு, நீங்கள் எந்த கோத்திரத்தைச் சேர்ந்தவர் என்று என்னிடம் நீங்கள் கூறும்போதுதான் நான் உங்களுக்கு (அது குறித்து) கூறுவேன் என அந்த முதியவர் கூறினார். அதற்கு, நீர் எங்களுக்கு கூறினால் பின்னர் நாங்களும் எங்களைக் குறித்து உமக்கு கூறுவோம் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். பதிலுக்கு பதிலா? என்று அவர் கேட்டார். ஆம்! என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். முஹம்மது (ஸல்) அவர்களும், அவரது தோழர்களும் இன்ன இன்ன நாட்களில் புறப்பட்டு விட்டார்கள் என்பது எனக்கு தெரியும்; எனக்கு (தகவல்) கூறியவர் சரியாக கூறியிருந்தால் இன்று அவர்கள் இந்த இடத்தில் இருப்பார்கள் என்று அந்த முதியவர் கூறினார்.

எங்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சென்றடைந்திருந்தார்களோ அந்த இடத்தின் பெயரை அந்த முதியவர் குறிப்பிட்டார். பின்னர், அவர் கூறினார்: குறைஷியர்கள் இன்ன நாளில் புறப்பட்டுள்ளார்கள் என்றும் எனக்கு தெரிய வந்துள்ளது. எனக்கு (தகவல்) கூறியவர் சரியாக கூறியிருந்தால் இன்று அவர்கள் இந்த இடத்தில் இருப்பார்கள். குறைஷியர்கள் வந்தடைந்திருந்த அந்த இடத்தின் பெயரையும் அவர் குறிப்பிட்டார்.

இரண்டு விஷயங்களையும் அவர் சரியாக கூறியிருந்தார். அவர் தனது தகவலைக் கூறி முடித்த உடன் நீங்கள் எதிலிருந்து (வந்துள்ளீர்கள்)? என்று கேட்டார். அப்போது, நாங்கள் தண்ணீரிலிருந்து வந்துள்ளோம் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். பின்னர், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரிடமிருந்து புறப்பட்டுச் சென்று விட்டார்கள். அதற்கு அவர் தண்ணீரிலிருந்தா? அதன் பொருள் என்ன? நீங்கள் ஈராக்கின் தண்ணீரிலிருந்தா? என்று அவர் கேள்வி கேட்டார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவருக்கு வழங்கிய பதில் மிகவும் ஆழமான பொருள் கொண்டதாக இருந்தது எனத் தெரிகின்றது. இது குறித்தும் வரலாற்றாசிரியர்கள் விவாதித்துள்ளனர். சான்றுகளை சேகரிக்கக் கூடிய நம்மவர்கள் இது குறித்த பல்வேறு வரலாற்றாசிரியர்களின் விளக்கங்களையும் முன் வைத்துள்ளனர். அதனை சுருக்கமாக நான் முன்வைக்கின்றேன்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வாக்குறுதி வழங்கியதற்கேற்ப சரியான பதில் அளிக்கவில்லை என்று வெளிப்படையில் தோன்றுகின்றது. ஆம்! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவருக்கு ஆழமான பொருள் கொடுக்கும் வடிவில் அவருக்கு பதில் அளித்தார்கள். அவரிடம் பொய்யும் கூறவில்லை. மேலும் அந்த

அபாயகரமான போரின் சூழ்நிலையில் சரியான இடத்தைப் பற்றியும் தகவல் கூறவில்லை. ஏனெனில், நாங்கள் தண்ணீரிலிருந்து வந்துள்ளோம் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியிருந்தார்கள். அதன் பொருள் திருக்குர்ஆன் கூறுகின்ற கருத்தின் பக்கம் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. அதாவது, நாம் ஒவ்வொரு உயிரையும் தண்ணீரிலிருந்து படைத்துள்ளோம் என்று திருக்குர்ஆன் கூறியுள்ளது. இதனை ஒரு வாழ்க்கை வரலாற்றாசிரியர் எழுதியுள்ளார். அவர் அபூபக்ர் ஜாபிருல் ஜஸாயிரீ ஆவார். மற்றொருவர் கூறுகின்றார்: இது அரேபியர்களின் நடைமுறையாக இருந்தது. அதாவது அவர்கள் எங்கு வசித்து வந்தார்களோ அதன் முகவரி தண்ணீராக இருந்தது. அதாவது நீரூற்று போன்றவற்றின் பெயரை குறிப்பிட்டு நாங்கள் இன்ன தண்ணீர் அல்லது இந்தப் பகுதியின் தண்ணீரைச் சார்ந்தவர்களாக இருக்கின்றோம் என்று கூறி வந்தார்கள். இவ்வாறு கூறுபவர் அல்லாமா புர்ஹான் ஜலபீ ஆவார். அன்னார் இவ்வாறு எழுதியுள்ளார்கள்.

இதில் ஒரு விளக்கம் இவ்வாறு இருக்கக் கூடும். அதாவது, ஏற்கனவே அந்த முதியவர் கூறியிருந்தது போன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பத்ர் போர் மைதானத்தின் எந்த நீரூற்றிற்கு அருகில் தங்கியிருந்தார்களோ அதன் தண்ணீரைக் குறித்தும் கூறியிருக்கக் கூடும். ஆனால், அந்த முதியவர் ஈராக்கின் திசையை புரிந்து கொள்ளும் வடிவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சைகையாக குறிப்பிட்டிருந்தார்கள். அந்த நீரூற்றும் ஈராக்கும் ஒரே திசையின் பக்கமே அமைந்திருந்தது. எவ்வாறு இருப்பினும் அல்லாஹ் நன்கறிவான்.

பின்னர், இறைத் தூதர் (ஸல்) அவர்கள் ஸஹாபா பெருமக்களிடம் திரும்பி வந்துவிட்டார்கள். மாலைப் பொழுது வந்ததும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி), ஹஸ்ரத் ஸுபைர் பின் அவ்வாம் (ரலி), ஹஸ்ரத் ஸஅத் பின் அபீ வகாஸ் (ரலி) ஆகியோரை இன்னும் சில ஸஹாபிகளுடன் அங்குள்ள செய்திகளை சேகரித்து வருவதற்காக பத்ர் மைதானத்தின் நீரூற்றின் பக்கம் அனுப்பி வைத்தார்கள். அந்த ஸஹாபிகளுக்கு, குறைஷியர்களுக்கு தண்ணீர் எடுத்துச் செல்லக் கூடிய இரண்டு அடிமைகள் கிடைத்தனர். அவர்களை அந்த ஸஹாபிகள் பிடித்துக் கொண்டு வந்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொழுது கொண்டிருந்தபோது அந்த ஸஹாபிகள் அவர்களிடம் கேள்விகள் கேட்டுக் கொண்டிருந்தனர். அதற்கு, நாங்கள் குறைஷியர்களுக்காக தண்ணீர் எடுத்துச் செல்லக் கூடியவர்கள் ஆவோம்; குறைஷியர்கள் எங்களை தண்ணீர் எடுத்து வருவதற்காக அனுப்பி வைத்துள்ளனர் என்று அவர்கள் கூறினர். அவர்களின் கூற்றை ஸஹாபிகள் ஏற்கவில்லை. மேலும், அவர்கள் அபூ ஸுஃப்யானின் வேலையாட்களாக இருப்பார்கள் என்று அவர்கள் கருதினர். எனவே அவர்களை ஸஹாபிகள் வலுவாக அடித்தனர். மேலும், அவர்களை மிகவும் துன்புறுத்தியபோது நாங்கள் அபூ ஸுஃப்யானின் வேலையாட்கள் என்று அவர்கள் கூறிவிட்டனர். அப்போது அவர்களை ஸஹாபா பெருமக்கள் விட்டு விட்டனர்.

இறைத் தூதர் (ஸல்) அவர்கள் (தொழுது முடித்து) ஸலாம் கொடுத்த போது, அவர்கள் இருவரும் உங்களிடம் உண்மையைக் கூறியபோது நீங்கள் அவர்களை அடித்தீர்கள். அவர்கள் உங்களிடம் பொய்யுரைத்தபோது நீங்கள் அவர்களை விட்டு விட்டீர்கள் என்று கூறினார்கள். இறைவன் மீது ஆணையாக! அவர்கள் உண்மையை கூறியிருந்தார்கள். நிச்சயமாக, அவர்கள் குறைஷிகளின் அடிமைகள் ஆவர். பின்னர் அவர்கள் இருவரின் பக்கமும் முகம் திருப்பியவாறு, எனக்கு குறைஷியர்களைக் குறித்து கூறுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள்.

அதற்கு, இறைவன் மீது ஆணையாக! குறைஷிகள் இந்த குன்றுக்கு பின்னால் இருக்கும் பள்ளத்தாக்கின் மற்றொரு கரையில் முகாமிட்டுள்ளனர் என்று அந்த இருவரும் கூறினர். பின்னர், அவர்கள் எத்தனை நபர்கள் உள்ளனர்? என்று இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். ஏராளமானவர்கள் உள்ளனர் என்று அவர்கள் பதில் அளித்தனர். அவர்களின் எண்ணிக்கை எவ்வளவு? என்று கேட்கப்பட்டது. எங்களுக்கு தெரியாது என்று அவர்கள் கூறினர். அவர்கள் உணவிற்காக தினமும் எத்தனை ஒட்டகங்களை அறுக்கின்றனர்? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். சில நாள் ஒன்பது சில நாள் பத்து (ஒட்டகங்கள்) என்று அவர்கள் பதில் அளித்தனர். அப்போது, அவர்கள் தொல்லாயிரம் மற்றும் ஓராயிரத்திற்கு இடையில் இருப்பார்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஒட்டகங்களை உண்பதிலிருந்து அவர்களின் எண்ணிக்கையை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கணக்கிட்டார்கள். பின்னர், குறைஷியர்களின் தலைவர்களில் யார்? யார்? அவர்களுக்கு மத்தியில் இருக்கின்றனர்? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். ஏராளமான குறைஷிய தலைவர்களின் பெயர்களை அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்களில் அபூஜஹ்ல், உத்பா, ஷேபா, ஹக்கீம் பின் ஹஸாம், உமையா பின் கலஃப் போன்றவர்களும் அடங்கியிருந்தனர்.

பின்னர், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்களின் பக்கம் முகம் திருப்பினார்கள். மேலும்,

هٰذِهٖ مَكَّةُ قَدْ اَلْقَتْ اِلَيْكُمْ اَفْلَاذَ كَبِدِهَا

என்று கூறினார்கள். பொருள்: மக்கா வாசிகள் தமது இதயத்தின் துண்டுகளை உங்களுக்கு முன்னால் எடுத்து வைத்துள்ளனர்.

(அஸ்ஸீரத்துன்னபவிய்யா, லி இப்னு ஹஷ்ஷாம், பக்கம் 421- 422, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் 2001)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் அவர்களும் இது குறித்து குறிப்பு எழுதியுள்ளார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸஹாபிகளை நோக்கி

هٰذِهٖ مَكَّةُ قَدْ اَلْقَتْ اِلَيْكُمْ اَفْلَاذَ كَبِدِهَا

என்று கூறினார்கள். பொருள்: மக்கா வாசிகள் தமது இதயத்தின் துண்டுகளை உங்களுக்கு முன்னால் எடுத்து வைத்து விட்டனர்.

இவை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய நாவிலிருந்து தன்னிச்சையாக வெளிப்பட்டிருந்த மிகவும் ஞானம் மிக்க மற்றும் நுட்பம் நிறைந்த சொற்களாக இருந்தன. ஏனெனில், இவ்வளவு பெரும் பெரும் தலைவர்கள் என்று குறிப்பிடுவதால் பலவீனமான இயல்பு கொண்ட முஸ்லிம்கள் தைரியம் இழந்து விடக் கூடும். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த சொற்கள் முஸ்லிம்களின் எண்ண ஆற்றலை இதன் பக்கம் ஈர்த்து விட்டது. மேலும், அன்னார் (ஸல்) முஸ்லிம்களின் எண்ண ஓட்டத்தை இந்தப் பக்கம் ஈர்த்து விட்டார்கள். அதாவது, ஒரு வகையில் குறைஷியர்களின் இந்த தலைவர்களை இறைவன் முஸ்லிம்களின் இரையாக ஆக்குவதற்காக அனுப்பியுள்ளான் என்பதன் பக்கம் எண்ணம் திரும்பி விட்டது. (ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் (ரலி) அவர்களின் நூல் -ஸீரத் காத்தமுன்னபிய்யீன், பக்கம் 356, 1996 ஆம் ஆண்டு பதிப்பு)

இதன் பிறகு, இறைத் தூதர் (ஸல்) அவர்கள் , இணை வைப்பாளர்களுக்கு முன்னதாக பத்ர் மைதானத்தின் நீரூற்றை சென்றடையுங்கள்; மேலும், அதனை இணை வைப்பாளர்கள் ஆக்கிரமிப்பு செய்ய விட்டு விடாதீர்கள் என்று தமது படையினருக்கு கட்டளையிட்டார்கள். எனவே, இஷா வேளையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பத்ருக்கு மிகவும் அருகில் இருந்த நீரூற்றில் சென்று முகாம் அமைத்துக் கொண்டார்கள். (மவ்லானா ஸஃபீயுர் ரஹ்மான் முபாரக்பூரி அவர்களின் நூல் அர்ரஹீகுல் மக்தூம், பக்கம் 288, அல்மக்தபத்துல்ஸ் ஸலஃபீய்யா லாஹுர்)

அந்த சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் ஹுபாப் பின் முன்ஸிர் (ரலி) அவர்கள் ஒரு ஆலோசனை வழங்கினார்கள். ஹுஸுர் (ஸல்) அவர்கள் பத்ருக்கு மிக அருகாமையிலுள்ள நீரூற்றில் முகாம் அமைத்துக் கொண்ட போது, ஹஸ்ரத் ஹுபாப் பின் முன்ஸிர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நாம் இங்கிருந்து முன்னோக்கி செல்ல முடியாமல் இருக்கும் வகையிலும், பின்னால் செல்ல முடியாமல் இருக்கும் வகையிலும் தாங்கள் இறைக் கட்டளையின் அடிப்படையில் இந்த இடத்தில் தங்கியுள்ளீர்களா? அல்லது இது வெறும் தங்களின் கருத்து மற்றும் போர் தந்திரமா? ஹுஸுர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இது வெறும் ஒரு கருத்தே ஆகும். மேலும் போர்

தந்திரம் ஆகும்.

அப்போது, ஹஸ்ரத் ஹுபாப் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: இந்த இடம் உகந்தது அல்ல. இன்னும் கூறப்போனால், நீங்கள் இங்கிருந்து பின்வாங்கிச் செல்ல வேண்டும். மேலும் (பின்வாங்கி) அங்கே தங்க வேண்டும். அது எதிரியின் தண்ணீருக்கான மிக நெருங்கிய இடம் ஆகும். மேலும், அதனை தவிர்த்து எத்தனை கிணறுகள் உள்ளனவோ அவை அனைத்தும் அடைக்கப்பட்டு விட வேண்டும். மேலும் நமக்காக ஒரு தடாகத்தை சிறப்பானதாக ஆக்கிக் கொள்ள வேண்டும். மேலும் அதனை தண்ணீரால் நிரப்பி விட வேண்டும். அதன் பிறகு, நாம் எதிரியுடன் போரிட்டால் பின்னர் நமக்கு குடி தண்ணீர் கிடைக்கும். மேலும், எதிரி தண்ணீரிலிருந்து இழப்பிற்குரியவனாக இருப்பான்.

அதற்கு, உங்களது கருத்து மிகச் சரியானதாகும் என்று ஹுஸுர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். மேலும், ஹுஸுர் (ஸல்) அவர்கள் படையினருடன் குறைஷியர்களுக்கு மிக அருகில் இருந்த அந்த நீரூற்றிற்கு வந்தார்கள். மேலும், அங்கு முகாமிட்டார்கள். மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கட்டளையினால் மற்ற கிணறுகள் வெறுமையாக்கப்பட்டன. மேலும், எந்த கிணற்றுக்கு அருகில் முகாமிடப்பட்டதோ அங்கு ஒரு தடாகம் உருவாக்கி அது நீரால் நிரப்பப்பட்டது. இது ஸீரத் இப்னு ஹஷ்ஷாமின் சான்று ஆகும். (ஸீரத் இப்னு ஹஷ்ஷாம், பக்கம் 424, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத், 2001)

இடத்தை தேர்ந்தெடுத்தப் பிறகு, ஹுஸுர் (ஸல்) அவர்கள் தங்குவதற்கான இடத்தை ஆயத்தப்படுத்துவதற்கான தருணமாக இருந்தது. ஆக, அவ்ஸ் கோத்திரத்தின் தலைவர் ஹஸ்ரத் ஸஅது பின் மஆஸ் (ரலி) அவர்களின் ஆலோசனையின் படி பத்ர் மைதானத்தின் ஒரு பகுதியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காக ஒரு கூடாரத்தை ஸஹாபிகள் தயார் செய்தார்கள். ஹஸ்ரத் ஸஅது பின் மஆஸ் (ரலி) அவர்கள் ஹுஸுர் (ஸல்) அவர்களிடம் கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நாங்கள் தங்களுக்காக ஒரு கூடாரத்தை தயார் செய்யட்டுமா? ஏனெனில் தாங்கள் அதில் தங்குவதற்கு அது ஏதுவாக அமையும். (ஸீரத்துல் ஹல்பியா, தொகுதி 2, பக்கம் 213, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 2002)

இது தொடர்பாக ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் (ரலி) அவர்கள் எடுத்துரைத்துள்ள விளக்கத்தை நான் முன்னரும் எடுத்துரைத்து விட்டேன். ஆனால், இங்கு எடுத்துரைப்பதும் அவசியம் ஆகும். அவ்ஸ் கோத்திரத்தின் தலைவர் ஹஸ்ரத் ஸஅது பின் மஆஸ் (ரலி) அவர்களின் ஆலோசனையின் படி ஸஹாபிகள் பத்ர் மைதானத்தின் ஒரு பகுதியில் ஹுஸுர் (ஸல்) அவர்களுக்காக ஒரு கூடாரத்தை தயார் செய்துவிட்டார்கள். மேலும், ஹஸ்ரத் ஸஅது (ரலி) அவர்கள் ஹுஸுர் (ஸல்) அவர்களின் சவாரி விலங்கை கூடாரத்திற்கு அருகில் கட்டிப் போட்டுவிட்டுக் கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் இந்தக் கூடாரத்தில் தங்கிக் கொள்ளுங்கள். மேலும், நாங்கள் அல்லாஹ்வின் பெயரைக் கூறி எதிரிகளுடன் போரிடுவோம். இறைவன் நமக்கு வெற்றியை வழங்கி விட்டால்; அதுவே நமது விருப்பம் ஆகும். ஆனால், ஒருவேளை இதற்கு மாற்றமான ஒரு விஷயம் நிகழ்ந்துவிட்டால், மேலும் நமக்கு தோல்வி ஏற்பட்டுவிட்டால் பின்னர் தாங்கள் தங்களது சவாரி விலங்கின் மீது சவாரி செய்து எப்படியாவது மதீனா சென்றடைந்து விடுங்கள். அங்கு எங்களது சகோதர பந்தங்கள் இருக்கின்றன. அவர்கள் அன்பிலும், தூய்மையிலும் எங்களை விட குறைவானவர்கள் அல்ல. ஆனால், இந்தத் திட்டத்தில் போர் மூண்டு விடும் என்று அவர்கள் எண்ணியிருக்கவில்லை. எனவே அவர்கள் நம்முடன் வரவில்லை. இல்லையென்றால் அவர்கள் ஒருபோதும் பின்தங்கியிருக்க மாட்டார்கள். ஆனால், அவர்களுக்கு நிலைமையைக் குறித்து தெரிய வரும்போது பின்னர் அவர்கள் தங்களை பாதுகாக்கும் பொருட்டு உயிரை அர்ப்பணிப்பதற்கும் தயங்க மாட்டார்கள். இது ஹஸ்ரத் ஸஅது (ரலி) அவர்களின் தூய உத்வேகமாக இருந்தது. இது எல்லா நிலையிலும் போற்றுதலுக்குரியது ஆகும். இறைத் தூதர் போர் மைதானத்திலிருந்து ஓடுவது சாத்தியமற்ற ஒன்றாகும். அது எவ்வாறு நிகழ முடியும்?

ஆக, ஹுனைன் போர் மைதானத்தில் நாம் கண்டோம்; பனிரெண்டாயிரம் படை புறமுதுகு காட்டியது. ஆனால், ஏகத்துவத்தின் தலைமையகம் அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது இடத்திலிருந்து சற்றும் அசையவில்லை.

எவ்வாறு இருப்பினும் கூடாரம் தயார் செய்யப்பட்டது. மேலும் ஸஅது மற்றும் வேறு சில அன்ஸார் ஸஹாபிகள் அதற்கு அருகில் பாதுகாப்பு கொடுப்பதற்காக நின்று விட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) ஆகியோர் அதே கூடாரத்தில் இரவைக் கழித்தார்கள். ஓர் அறிவிப்பில் இவ்வாறும் குறிப்பு உள்ளது: அதாவது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் (அக்) கூடாரத்திற்கு வெளியே உறையிலிருந்து வாளை எடுத்து ஏந்திக் கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பாதுகாப்பிற்காக நின்று கொண்டார்கள். மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இரவு முழுவதும் இறைவனின் சன்னிதானத்தில் மன்றாடலுடன் துஆ செய்தார்கள். மேலும் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: அதாவது, முழுப் படையிலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மட்டுமே இரவில் கண்விழித்திருந்தார்கள். மற்ற அனைத்து மக்களும் முறை, முறையாக தமது தூக்கத்தை முழுமை செய்து கொண்டனர்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் எம்.ஏ. (ரலி) அவர்களின் நூல் - ஸீரத் காத்தமுன்னபிய்யீன், பக்கம் 357 - 1996-ம் ஆண்டு பதிப்பு)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இது குறித்து இவ்வாறு எடுத்துரைத்துள்ளார்கள்:

பத்ர் மைதானத்தை சென்றடைந்த உடன் ஒரு மேடான இடத்தை உருவாக்கி அங்கு ஸஹாபிகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அமரச் செய்தார்கள். மேலும், பின்னர் எல்லா ஒட்டகங்களைக் காட்டிலும் மிகவும் வேகமாக ஓடக் கூடிய ஒட்டகம் யாரிடம் உள்ளது? என்று ஒருவர் மற்றவரிடம் ஆலோசனை செய்து விசாரித்தார்கள். எனவே, மிகவும் வேகமாக ஓடக் கூடிய ஒட்டகத்தை அழைத்துக் கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருகில் ஸஹாபிகள் கட்டி வைத்து விட்டார்கள். அதைப் பார்த்ததும் இது என்ன? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அதற்கு, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நாம் சிறிய எண்ணிக்கையில் இருக்கின்றோம். எதிரிகளோ அதிகமானவர்களாக உள்ளனர். எனவே, நாம் அனைவருமே இந்த இடத்தில் ஷஹீதாகிவிடுவோமோ? என்ற அச்சம் எங்களுக்கு உள்ளது. எங்களுக்கு எங்களது மரணத்தை பற்றி எந்த துன்பமும் இல்லை. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தங்களுக்கு எந்த வேதனையும் ஏற்பட்டுவிடக் கூடாது என்று தங்களைக் குறித்தே நாங்கள் கவலை கொள்கின்றோம். நாங்கள் மரணித்து விட்டால் அதனால் இஸ்லாத்திற்கு எந்த பாதிப்பும் ஏற்படாது. ஆனால், இஸ்லாம் உயிர்ப்புடன் இருப்பது தங்களைச் சார்ந்து இருக்கின்றது. எனவே, நாங்கள் தங்களின் பாதுகாப்பிற்கான ஏற்பாட்டைச் செய்வது அவசியம் ஆகும்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்)அவர்களே! ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை நாங்கள் தங்களின்


**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

பாதுகாப்பிற்காக நியமித்திருக்கின்றோம். மேலும், மிகவும் வேகமாக ஓடக் கூடிய ஓர் ஒட்டகத்தை தங்களுக்கு அருகில் கட்டி வைத்துள்ளோம். ஒருவேளை நாங்கள் ஒவ்வொருவராக மடிந்து விட்டால் பின்னர் அல்லாஹ்வின் தூதர் (ஸல்)அவர்களே! இதோ ஒட்டகம் உள்ளது! இதன் மீது சவாரி செய்து கொள்ளுங்கள். மேலும், மதீனாவை சென்றடைந்து விடுங்கள். அங்கு எங்களது சில சகோதரர்கள் உள்ளனர். போர் நிகழ இருக்கின்றது என்பது அவர்களுக்கு தெரியாது. ஒருவேளை அவர்களுக்கு தெரிந்திருந்தால், அவர்களும் நம்முடன் இணைந்து இருப்பார்கள். தங்களிடத்தில வந்தடைந்திருப்பார்கள். அவர்கள் தங்களுக்கு பாதுகாப்பு வழங்குவார்கள். மேலும், எதிரியின் தீங்கிலிருந்து தங்களை பாதுகாப்பார்கள். (நூல் -அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுனர் எந்த புதிய மார்க்கத்தையும் கொண்டு வரவில்லை - அன்வாருல் உலூம், தொகுதி 15 - பக்கம் 244 -245)

ஆனால், எவ்வாறு இருப்பினும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த ஸஹாபிகளின் கூற்றை ஏற்கவில்லை. ஒப்புக் கொண்டிருக்கவும் முடியாது. ஆனால், இது அந்த ஸஹாபியின் உணர்வாக இருந்தது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த இடத்தில் மேலும் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் ஒரு முறை கூறினார்கள்: ஸஹாபிகளில் மிகவும் வீரம் மிக்கவர் மற்றும் தைரியசாலி ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களாக இருந்தார்கள். பின்னர், அன்னார் கூறினார்கள்: பத்ர்ப் போரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காக தனியாக ஓர் அறை தயார் செய்யப்பட்டது. அப்போது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பாதுகாப்புப் பணியை யாரிடம் ஒப்படைப்பது? என்ற கேள்வி அந்த நேரத்தில் எழுந்தது. அப்போது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் உடனடியாக வாளை ஏந்திக் கொண்டு எழுந்து நின்று விட்டார்கள். மேலும், அன்னார் (ரலி) அந்த அபாயகரமான சந்தர்ப்பத்தில் மிகவும் வீரத்துடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பாதுகாப்புப் பணியின் கடமையை நிறைவேற்றினார்கள்.

(தஃப்ஸீரே கபீர், தொகுதி 7, பக்கம் 364 -365)

எவ்வாறு இருப்பினும், காலை நேரத்தில் குறைஷியர்கள் தமது இடத்திலிருந்து முன்னோக்கிச் சென்றார்கள். அவர்களைக் கண்டபோது அல்லாஹ்வே! இந்த குறைஷியர்கள் ஆணவத்துடனும், அகங்காரத்துடனும் உன்னுடன் போரிடுவதற்காவும், உனது தூதரைப் பொய்ப்படுத்துவதற்காகவும் வந்துள்ளனர். என்னிடம் உதவிக்கான வாக்குறுதி வழங்கியுள்ள நீ அதனை முழுமை செய்வாயாக! மேலும் இன்றே நீ அவர்களை அழித்து விடுவாயாக! என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இணை வைப்பாளர்களில் உத்பா பின் ரபீஆவை ஒரு சிகப்பு ஒட்டகத்தில் சவாரி செய்திருப்பதை ஹுஸூர் (ஸல்) அவர்கள் கண்டார்கள். மேலும் ஹுஸூர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: (இணை வைப்பாளர்களான) இவர்களில் ஒருவரிடம் (ஏதேனும்) நன்மை இருக்குமென்றால் அது இந்த சிகப்பு நிற ஒட்டகத்தைக் கொண்டவரிடம் உள்ளது. இவரது கூற்றை அவர்கள் செவிமடுத்தால் அவர்கள் நேர்வழியின் கீழ் வந்துவிடுவார்கள்.

ஹுஸூர்(ஸல்) அவர்களின் தடாகத்திலிருந்து நிராகரிப்பாளர்கள் தண்ணீர் குடித்த சம்பவத்தைக் குறித்தும் குறிப்பு கிடைக்கின்றது. ஆனால், இந்த மக்கள் அதாவது, குறைஷியர்கள் பத்ர் மைதானத்தில் வந்து இறங்கிய போது அவர்களில் ஒரு கூட்டத்தினர் ஹுஸூர் (ஸல்) அவர்களின் தடாகத்தில் வந்து தண்ணீர் குடிக்கத் துவங்கினர். அவர்களில் ஒருவர் ஹக்கீம் பின் ஹஸ்ஸாமும் ஒருவராக இருந்தார். இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அவர்களை தண்ணீர் குடிக்க விடுங்கள். அந்த நாளில் எவரெல்லாம் அந்த தடாகத்திலிருந்து தண்ணீர் குடித்தாரோ அவர்களில் ஹக்கீம் பின் ஹஸ்ஸாமை தவிர மற்ற அனைவரும் கொலையுண்டார்கள். அவர் (ஹக்கீம் பின் ஹஸ்ஸாம்) பிற்காலத்தில் முஸ்லிம் ஆகிவிட்டார். அன்னார் சத்தியம் செய்யும் போது இவ்வாறு கூறுவார்கள். அதாவது பத்ர்ப் போர் நாளன்று எனக்கு இரட்சிப்பு வழங்கிய அந்த இறைவனின் மீது ஆணையாக! என்று அன்னார் கூறிவந்தார்கள்.

(ஸீரத் இப்னு ஹஷ்ஷாம் பக்கம் 424, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத்-2001)

போருக்காக படைகளின் வரிசைகளை சரி செய்வது தொடர்பாக இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: அதாவது, காலை நேரத்தில் குறைஷியர்கள் வருவதற்கு முன்னரே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸஹாபா பெருமக்களுக்கு அணி வகுத்து நிற்பதற்கு கட்டளையிட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அம்புடன் வரிசைகளை சரி செய்து கொண்டிருந்தார்கள். முன்னால் செல்லுங்கள்; பின்னால் வாருங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அம்பைக் கொண்டு சைகை செய்து கொண்டிருந்தார்கள். எதுவரை என்றால் வரிசைகள் நேராகி விட்டன.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் (ரலி) அவர்களுக்கு கொடியை வழங்கியபோது அன்னார் (ரலி), எங்கு அதனை வைப்பதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கட்டளை வழங்கியிருந்தார்களோ அங்கு வைத்துவிட்டார்கள். ஹுஸூர் (ஸல்) அவர்கள் வரிசைகளை ஆய்வு செய்யத் தொடங்கினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மேற்குப் பக்கம் நின்று கொண்டிருந்தார்கள். (ஸுபுலுல் ஹுதா வர் ரஷ்ஷாத், திக்ரே கஸ்வா பத்ருல் குப்ரா, தொகுதி 4, பக்கம் 33, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத், 1993)

இந்த முழு நேரத்திலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வரிசைகளை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் ஸவாத் பின் கஸிய்யா (ரலி) அவர்களுடைய ஒரு விநோதமான சம்பவத்தைக் குறித்தும் குறிப்பு கிடைக்கின்றது. அதன் மூலம் ஹஸ்ரத் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மீதான நேசமும் வெளிப்படுகின்றது. இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: பத்ர்ப் போரில் வரிசைகளை ஒழுங்குப்படுத்திய நேரத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸவாத் பின் கஸிய்யா (ரலி) அவர்களை கடந்து சென்றார்கள். அப்போது அன்னார் (ரலி) வரிசையிலிருந்து விலகி வெளியில் நின்றார்கள். எனவே அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாரின் வயிற்றின் மீது அம்பை வைத்து, ஸவாதே! நேராக நில்லும்! என்று சைகை செய்திருந்தார்கள்.

ஹஸ்ரத் ஸவாத் பின் கஸிய்யா (ரலி) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் எனக்கு துன்பம் கொடுத்து விட்டீர்கள். தங்களை நீதியுடனும், நேர்மையுடனும் அல்லாஹ் அனுப்பியுள்ளான். எனவே அந்த சம்பவத்திற்கு நான் தங்களை பழி தீர்க்க வேண்டும். தாங்கள் எனது வயிற்றின் மீது அம்பைக் கொண்டு அடித்துள்ளீர்கள். அப்போது ஹுஸூர் (ஸல்) அவர்கள் தமது வயிற்றிலிருந்து ஆடையை அகற்றினார்கள். மேலும், பழி தீர்த்துக் கொள்ளுங்கள் என்று ஹுஸூர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது, ஹஸ்ரத் ஸவாத் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஆரத் தழுவிக் கொண்டார்கள். மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உடலை முத்தமிட்டார்கள். ஸவாதே! நீர் ஏன் இவ்வாறு செய்தீர்? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அதற்கு, அன்னார் (ரலி) கூறினார்கள்:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இது எப்படிப்பட்ட தருணம் என்பதை தாங்கள் (ஸல்) பார்த்துக் கொண்டிருக்கின்றீர்கள். போருக்கான நேரம் ஆகும். நான் உயிர் பிழைப்பேனா? இல்லையா? என்பது எனக்கு தெரியாது. எனவே தங்களுடன் கழியும் இந்த இறுதி நேரத்தில் எனது உடல் தங்களின் அருளுக்குரிய உடலை தொட வேண்டும் என்று நான் விரும்பினேன்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாருக்காக நன்மையான துஆக்களை வேண்டினார்கள். (அஸ்ஸீரத்துல் ஹல்பியா, பாப் திக்ரே மகாஸியா ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், தொகுதி 2, பக்கம் 220 -221, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத், 2002)

ஆக, இவை (தூய) அன்பு மற்றும் நேசத்தின் காட்சிகள் ஆகும். எஞ்சியவற்றை இன்ஷாஅல்லாஹ் எதிர்வரும் நாட்களில் எடுத்துரைப்பேன்.

தற்போது நான் சில மர்ஹூம்களின் நற்குறிப்பையும் எடுத்துரைக்க விரும்புகின்றேன். அவர்களில் ஒருவர், ஜாமிஆ அஹ்மதிய்யா (ரப்வாவின்) ஆசிரியரும், ஹிஃப்ழ் மதரஸாவின் முதல்வருமாக இருந்த மதிப்பிற்குரிய காரீ முஹம்மது ஆஷிக் ஸாஹிப் ஆவார்கள். அன்னார் கடந்த நாட்களில் 85-வது வயதில் மரணமடைந்து விட்டார்கள்.

اِنَّا لِلّٰہِ وَاِنَّاۤ اِلَیۡہِ رَاجِعُوۡنَ

அல்லாஹ்வின் அருளால் அன்னார் வஸிய்யத் செய்திருந்தார்கள். காரீ ஆஷிக் ஸாஹிப் அவர்களுக்கு திருக்குர்ஆனை மனனம் செய்த பிறகும், தஜ்வீத் கற்றப் பிறகும் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொள்வதற்கு முன்னதாக பாகிஸ்தானின் பல்வேறு இடங்களில் அஹ்லே ஹதீஸ் அமைப்பின் மதரஸாக்களில் கல்வி கற்பிப்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. அன்னார் சுயமாகவே பைஅத் செய்திருந்தார்கள். காரீ ஆஷிக் ஸாஹிப் அவர்கள் பைஅத் செய்வதற்கு முன்னர் அஹ்லே ஹதீஸ் பிரிவுடன் தொடர்புடையவராக இருந்தார்கள். காரீ ஸாஹிப் அவர்கள் தம்மைக் குறித்து சுயமே எழுதியுள்ள நூலில் இவ்வாறு கூறியுள்ளார்கள். கூறுகின்றார்கள்: 1957-ம் ஆண்டு சம்பவமாகும். நான் கராச்சியில் இருந்தபோது, அங்கு சில அறிஞர் பெருமக்களான சில நண்பர்களுடன் அமர்வதற்கும், பேசுவதற்கும் வாய்ப்பு கிடைத்தது. நான் அவர்களிடம் சென்று வந்தேன். அங்கு பத்திரிகைகள் படித்து வந்தேன். மேலும், சில ஆலிம்களுடன் கலந்துரையாடல் கூட்டமும் நடைபெற்று வந்தது. ஒரு நாள் நான் அங்கு அமர்ந்து பத்திரிகை படித்துக் கொண்டிருந்தேன். அப்போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஒரு நூலை வாசித்துக் கொண்டிருந்த ஒரு நண்பர், தோழரே! மிகவும் சிறப்பு! என்று கூறினார். அப்போது நான் எது சிறப்பு? என்று கேட்டேன். அதற்கு அவர் கூறினார்: நமது ஆலிம் பெரும் மக்கள் பல்வேறு வசனங்களைக் குறித்து நாஸிக் மன்ஸூக் (ரத்து செய்யப்பட்ட வசனங்கள்) என்ற கொள்கை கொண்டவர்களாக இருக்கின்றனர். ஆனால், மிர்ஸா குலாம் அஹ்மத் ஸாஹிப் காதியானி அவர்களோ இவ்வாறு கூறுகின்றார்: அதாவது, திருக்குர்ஆனின் ஒரு புள்ளிக் கூட ரத்து செய்யப்படவில்லை.

எனவே காரீ ஸாஹிப் கூறுகின்றார்கள்: எனக்கு இந்த விஷயத்தில் வேட்கை உருவானது. இவர் உண்மையாளரா? அல்லது பொய்யரா? என்பது குறித்து ஆய்வு செய்யப்பட வேண்டும் என்று நான் எண்ணினேன்.

அன்னார் தமது சுயசரிதையில் இவ்வாறு எழுதியுள்ளார்கள்: பின்னர் நான் ஒரு நாள் அஹ்மதிய்யத்தைக் குறித்து அறிந்து கொள்வதற்காக கராச்சியில் உள்ள அஹ்மதிய்யா ஹாலுக்கு தொழுகைக்குப் பிறகு சென்றேன். ஓர் அஹ்மதியை சந்தித்தேன். கருத்து வேறுபாடுகள் உள்ள சில விவகாரங்களைக் குறித்து நான் சில விவரங்களை அறிய விரும்புகின்றேன்; அது தொடர்பாக எனக்கு உதவி செய்து வழிகாட்டுங்கள் என்று நான் அவரிடம் கூறினேன். அங்கு அமர்ந்திருந்த ஓர் அஹ்மதி நண்பர் என்னை அஹ்மதிய்யா ஹாலிலிருந்து தமது வீட்டிற்கு அழைத்துச் சென்றார். எனக்கு சில புத்தகங்களை படிப்பதற்காக கொடுத்தார். நான் அந்த புத்தகங்களை படித்தேன். மேலும், இவை முற்றிலும் இஸ்லாத்திற்கு ஏற்புடையவை ஆகும் என்று நான் அவற்றை எனது அதே அறிஞர்களான நண்பர்களான ஒரு மவ்லவி ஸஹாபிடம் காட்டினேன்.

மவ்லவி ஸாஹிப் கூறினார்கள்: நீங்கள் மிகவும் கண்ணியம் மிக்க இயல்பு கொண்டவர். உங்களுக்கு தெரியாது.

எனவே நான் தங்களுக்கு இதனைக் கூறுகின்றேன். அதாவது மிர்ஸா ஸாஹிப் அவர்களின் சிறிய நூல்களில் என்ன கொள்கைகள் இருக்கின்றனவோ அவை இஸ்லாத்திற்கு ஏற்புடையதாகும்.

அன்னார் இந்த நூல்களை துவக்க காலத்தில் எழுதியிருந்தார்கள். ஆனால், பெரிய நூல்கள் பிற்காலத்தில் எழுதப்பட்டிருந்தன. அவற்றில் மிர்ஸா ஸாஹிப் பொய்யான சிந்தனைகளையும், கொள்கைகளையும் எழுதியுள்ளார்கள் என்று அந்த மவ்லவி கூறினார். ஆனால் பராஹீனே அஹ்மதிய்யாவோ துவக்கக் காலத்தில் எழுதப்பட்டிருந்தது. மேலும் அதுவே இஸ்லாத்தின் அசலாக இருந்தது. பிற்காலத்தில் இன்னும் பல நூல்கள் எழுதப்பட்டிருந்தன. எவ்வாறு இருப்பினும், காரீ ஸாஹிப் அவர்களுக்கு தொடர்பு இருந்தது. எனவே பின்னர் காரீ ஸாஹிப் அங்கு சென்றார்கள். மேலும், ஏதாவது பெரிய நூல் ஒன்றை கொடுங்கள் என்று கேட்டார்கள். எனவே அந்த அஹ்மதி சகோதரரும் பெரிய நூலைக் கொடுப்பதற்கு ஏதோ சில சாக்குப் போக்கை கூறினார். உள்ளபடியே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூல்களில் எந்த ஒன்றிலும் எந்த முரண்பாடும் கிடையாது. அது முன்னர் எழுதப்பட்ட புத்தகமாக இருக்கட்டும். அல்லது பின்னர் கடைசிக் காலத்தில் எழுதப்பட்டதாக இருக்கட்டும். அந்த அஹ்மதியின் மதிநுட்பம் என்னவாக இருந்தது? ஏன் அவர் புத்தகங்களைக் கொடுக்கவில்லை என்பதை அல்லாஹ்வே நன்கறிவான். ஆயினும், எவ்வாறு இருந்தாலும், காரீ ஸாஹிப் அவர்கள் அவருடன் தொடர்பை முடித்துக் கொள்ளவில்லை.

இதன் பிறகு, காரீ ஸாஹிப் எழுதியுள்ள அன்னாரின் சுயசரிதையிலிருந்து இந்த விஷயம் தெரிய வருகின்றது: அதாவது, ஒரு சிறப்பான இறை நியதியானது அன்னாரின் இதயத்தில் ஒரு துடிப்பை உருவாக்கி இருந்தது. மேலும், காரீ ஸாஹிப் பல்வேறு சந்தர்ப்பங்களில் ரப்வாவிற்கு சென்று வந்தார்கள். மேலும், உள்ளூர் அளவில் அஹ்மதி சகோதரர்களுடன் தொடர்பு வைத்து வந்தார்கள். துஆக்களும் செய்து வந்தார்கள். இதே துஆவின் நிலையில் அன்னாருக்கு பல்வேறு கனவுகளும் வந்தன. அந்த கனவுகளில் இந்த ஒரு கனவும் வந்தது. அதாவது, மஸீஹ் வந்துவிட்டார் என்ற விண்ணின் ஓசை வந்தது. காரீ ஸாஹிப் கூறுகின்றார்கள்: அந்நேரத்தில் அந்த சொற்களின் மூலம் எனது கவனம் அஹ்மதிய்யத்தின் பக்கம் செல்லவில்லை. ஆனால், அஹ்மதி ஆன பிறகு அந்த கனவு முழுமையடைந்து விட்டது என்ற நினைவு எனக்கு வந்தது. நான் கண்ட பல்வேறு கனவுகளில் இதுவும் ஒன்றாக இருந்தது.

காரீ ஸாஹிப் கூறுகின்றார்கள்: நான் எனது வாழ்க்கையின் சம்பவங்களின் மீது பார்வையை செலுத்தும்போது நான் இவ்வாறு சிந்திக்கின்றேன்; எனது கவனம் மீண்டும், மீண்டும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பக்கம் இருந்து கொண்டே வந்தது. மேலும் எனக்கு நேர்வழியும் கிடைத்து விட்டது. இது அல்லாஹ்வின் தனிப்பெரும் அருளாக இருந்தது.

அடுத்து அன்னார் எழுதுகின்றார்கள்: அன்ஸாருல்லாஹ் இஜ்திமாவின் சந்தர்ப்பத்தின்போது ஸவாத்கர் ஜமாஅத்தின் முரப்பி ஸாஹிப் மதிப்பிற்குரிய ஷேக் அப்துல்காதிர் ஸாஹிப் அவர்களை சந்தித்தேன்.

அன்னார் அன்ஸாருல்லாஹ் இஜ்திமாவிற்கு சென்றிருந்தார்கள். அப்போது வரை அன்னார் பைஅத் செய்திருக்கவில்லை.

கூறுகின்றார்கள்: நான் இஜ்திமாவின் முதல் நாளின் அனைத்து நிகழ்ச்சிகளையும் பார்த்தேன். ஏறக்குறைய இஜ்திமாவின் இரண்டாவது அல்லது மூன்றாவது நாளன்று என்னிடம் பைஅத் வாங்கப்பட வேண்டும் என்ற எனது விருப்பத்தை நான் வெளிப்படுத்தினேன். எனவே நாங்கள் இஸ்லாஹ் வ இர்ஷாத் மர்கஸிய்யாவின் அலுவலகத்திற்கு சென்றோம். மேலும், நான் பைஅத் படிவத்தை நிரப்பி அஹ்மதிய்யத்தின் ஒளியால் ஒளிமயமானேன். (மேரீ தாஸ்தான் மர்தபா ஹாஃபிழ் மஸ்ரூர் அஹ்மத் மஹ்மூத் மக்ஸூத் அஹ்மத், பக்கம் 11 -22, பதிப்பு ஸியாவுல் இஸ்லாம் பிரஸ், ரப்வா, ஜனவரி 2013)

அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்ட பிறகு அன்னாருக்கு சோதனைகளையும் கடந்து செல்ல நேரிட்டது. மற்றொரு பக்கம் ஜமாத்தைச் சாராத அன்னாருடைய மாணவர்கள் மற்றும் தலைவர்கள் புறமிருந்து பல்வேறு வழிமுறைகளில் திரும்ப கொண்டு செல்வதற்கான முயற்சிகளும் செய்யப்பட்டன. பேராசைகளும் ஊட்டப்பட்டன. கடுமைகளும் காட்டப்பட்டன.

காரீ ஸாஹிப் கூறுகின்றார்கள்: அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்ட பிறகு பல கஷ்டங்களை எனது வழியில் எனக்கு சந்திக்க நேர்ந்தன. ஆனால், என்னை அல்லாஹ் உறுதிப்பாட்டுடன் வைத்தான். மேலும், அவன் கூறிய வழிகளில் அவன் என்னை வழிநடத்திக் கொண்டே சென்றான். அல்லாஹ்வின் வழிகாட்டல்கள் இருந்தன. எனவே எந்தவொரு உலகியல் பேராசைகளும் என்னை உண்மையான வழியிலிருந்து அகற்ற முடியவில்லை. நான்

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மீது வெறுப்புக் கொள்வதற்கும், என்னை மீண்டும் அஹ்லே ஹதீஸ் ஜமாத்திற்கு கொண்டு செல்வதற்கும் அதிகம் முயற்சி செய்யப்பட்டது. ஆனால், அல்லாஹ்வின் அருளினால் என்னிடம் ஈமானின் வடிவம் உருவாகியிருந்தது. அதன் காரணமாக பெரும் முயற்சிகளுக்கு மத்தியிலும் அவர்கள் என்னை மீண்டும் தங்களிடம் கொண்டு செல்லும் முயற்சியில் தோல்வியடைந்து விட்டனர். (மேரீ தாஸ்தான் மர்தபா ஹாஃபிழ் மஸ்ரூர் அஹ்மத் மஹ்மூத் மக்ஃஸூத் அஹ்மத், பக்கம் 11 -22, பதிப்பு ஸியாவுல் இஸ்லாம் பிரஸ், ரப்வா, ஜனவரி 2013)

ஏற்கனவே பிள்ளைகள் இருந்த ஒரு விதவையுடன் அன்னாருக்கு திருமணம் நிகழ்ந்திருந்தது. இந்த திருமணத்தின் மூலம் அன்னாருக்கு ஒரு மகள் பிறந்தார். ஜமாஅத் தொண்டுகளைக் குறித்து எழுதியுள்ளார்கள். அன்னார் கூறுகினறார்கள்: சூஃபீ குதா பக்ஷ் ஸோர்வீ ஸாஹிப் ஒருநாள் மஸ்ஜிதில் என்னை சந்தித்தார்கள். மேலும், அந்நேரத்தில் வக்ஃபே ஜதீதின் இன்சார்ஜ் ஆக இருந்த ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மத் ஸாஹிப் அவர்களின் தூதுச் செய்தி என்னவென்றால், தங்களை அன்னாரிடம் ரப்வாவிற்கு நான் அழைத்து வரவேண்டும் என்பதாகும் என்று என்னிடம் கூறினார்கள்.

அப்போது அன்னார் பைஅத் செய்திருந்தார்கள். கூறுகின்றார்கள்: நான் அன்னாரின் சமூகத்தில் ஆஜரானபோது ஹஸ்ரத் மியான் ஸாஹிப் முதலில் அன்னாரின் திலாவத்தை செவிமடுத்தார்கள்.

பின்னர் வக்ஃபே ஜதீத் முஅல்லிம்களுக்கு திருக்குர்ஆனை தஜ்வீதுடன் கற்றுக் கொடுப்பதற்கான டியூட்டியை எனக்கு கொடுத்தார்கள். மேலும், வக்ஃபே ஜதீதின் கீழ் தங்குமிடத்திற்கான ஏற்பாட்டையும் செய்து விட்டார்கள்.

இது 1964-ம் ஆண்டு நிகழ்ந்த விஷயம் ஆகும்.

(மேரீ தாஸ்தான் மர்தபா ஹாஃபிழ் மஸ்ரூர் அஹ்மத் மஹ்மூத் மக்ஃஸூத் அஹ்மத், பக்கம் 27-28 பதிப்பு ஸியாவுல் இஸ்லாம் பிரஸ், ரப்வா, ஜனவரி 2013)

கூறுகின்றார்கள்: வக்ஃபே ஜதீதில் முஅல்லிமாக காரீ ஸாஹிபின் பணி நியமனம் ஜனவரி 1-ம் தேதி 1965-ம் ஆண்டு நிகழ்ந்தது. அதே காலகட்டத்தில் ஜாமிஆ அஹ்மதிய்யாவின் ஷாஹித் வகுப்பு மாணவர்கள் திருக்குர்ஆன் கற்பதற்காக வக்ஃபே ஜதீத் அலுவலகத்திற்கு வந்து சென்றார்கள். மேலும், அதன் பின்னர் அந்த காலத்தில் ஜாமிஆ அஹ்மதிய்யாவின் முதல்வராக இருந்த மதிப்பிற்குரிய மீர் தாவூத் அஹ்மத் ஸாஹிப் அவர்கள் கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் காரீ ஸாஹிப் ஜாமிஆ அஹ்மதிய்யாவிற்கு சென்று பாடம் நடத்தி வந்தார்கள். அத்துடன் ஜமாஅத்தின் காலேஜான ஜாமிஆ நுஸ்ரத் கேர்ல்ஸ் காலேஜிலும் பர்தாவிற்கான ஏற்பாட்டுடன் பெண் பிள்ளைகளுக்கும் திருக்குர்ஆன் கற்றுக் கொடுத்து வந்தார்கள். (மேரீ தாஸ்தான் மர்தபா ஹாஃபிழ் மஸ்ரூர் அஹ்மத் மஹ்மூத் மக்ஃஸூத் அஹ்மத், பக்கம் 35-36 பதிப்பு ஸியாவுல் இஸ்லாம் பிரஸ், ரப்வா, ஜனவரி 2013)

1969-ல் ரப்வா ஹாஃபிழ் வகுப்பு இன்சார்ஜ் ஹாஃபிழ் ஷஃபீக் ஸாஹிப் அவர்கள் மரணமடைந்து விட்ட பிறகு ஜாமிஆ முதல்வர் மீர் தாவூத் அஹ்மத் ஸாஹிப் அவர்கள், வகுப்பிற்கு வந்து செல்லுங்கள்; அவர்களின் வகுப்பை நீங்கள் நடத்தி வாருங்கள் என்று ஹாஃபிழ் ஸாஹிபிடம் கூறினார்கள். அந்த நாட்களில் அந்த வகுப்பு மஸ்ஜித் முபாரக்கில் வைத்து நடைபெற்று வந்தது. எனக்கும் நினைவு உள்ளது. மஸ்ஜித் முபாரக்கில் அமர்ந்து சிறுவர்கள் ஹிஃப்ழ் செய்து கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் காரீ ஸாஹிப் அவர்களை ஹிஃப்ழ் வகுப்பிலும் பணி அமர்த்தி விட்டார்கள். அதற்கு ஒப்புதல் வழங்கினார்கள். மேலும், அத்துடன் வக்ஃபே ஜதீதிலும் பாடம் நடத்துங்கள்; ஹாஃபிழ் வகுப்பிலும் பாடம் நடத்துங்கள் என்று எழுதினார்கள். ஆக, 1969-ம் ஆண்டில் முறையாக ஹாஃபிழ் வகுப்பில் அன்னாரின் பணி நியமனம் நடைபெற்றது.(மேரீ தாஸ்தான் மர்தபா ஹாஃபிழ் மஸ்ரூர் அஹ்மத் மஹ்மூத் மக்ஃஸூத் அஹ்மத், பக்கம் 40-41 பதிப்பு ஸியாவுல் இஸ்லாம் பிரஸ், ரப்வா, ஜனவரி 2013)

1998-ம் ஆண்டு பணி ஓய்வும் ஆகிவிட்டது. (மேரீ தாஸ்தான் மர்தபா ஹாஃபிழ் மஸ்ரூர் அஹ்மத் மஹ்மூத் மக்ஃஸூத் அஹ்மத், பக்கம் 52-பதிப்பு ஸியாவுல் இஸ்லாம் பிரஸ், ரப்வா, ஜனவரி 2013)

ஆனால், இதன் பிறகும் அன்னார் 2019 வரை மத்ரஸத்துல் ஹிஃப்ழ் மற்றும் மத்ரஸத்துஸ் ஸஃபர் ஆகிய இடங்களில் திருக்குர்ஆன் கற்பிக்கும் பணியை தொடர்ந்து வந்தார்கள். 1964-ம் ஆண்டு ஜல்ஸா ஸாலானாவின் அருளுக்குரிய சந்தர்ப்பத்தின்போது அன்னாருக்கு முதல் முறையாக திலாவத் செய்வதற்கான நற்பேறு கிடைத்தது.

காரீ ஸாஹிப் தமது சம்பவத்தை எழுதுகின்றார்கள். கூறுகின்றார்கள்: 1965 பிப்ரவரியில் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களை சந்திக்கும் நற்பேறு கிடைத்தது.

வரலாற்று சந்திப்பிற்கான சூழலை அன்னார் இவ்வாறு எடுத்துரைத்து வந்தார்கள்:

அதாவது, நான் கைகுலுக்குவதற்கான கண்ணியத்தை பெற்றபோது அந்த தருணம் எனக்கு எனது வாழ்க்கையை மாற்றுவதற்கான காரணியாக மாறியது. பிரைவேட் செகரட்டரி ஸாஹிப், ஹுஸூர் (ரலி)அவர்களின் சமூகத்தில், இவர் காரீ முஹம்மது ஆஷிக் ஸாஹிப் ஆவார்கள். இவர் புதிய அஹ்மதி ஆவார்கள் என்று என்னை அறிமுகம் செய்து வைத்தார்கள். அன்னார் என்னை அறிமுகம் செய்து வைத்துக் கொண்டிருந்தபோது ஹுஸூர் அன்வர் அவர்கள் பரிவு மிக்க பார்வையுடன் என்னை பார்த்துக் கொண்டிருந்தார்கள். மேலும், நானும் ஹுஸூர் அன்வர் (ரலி) அவர்களின் அருள் மிகுந்த கரத்தை பற்றிக் கொண்டு அன்னாரை சந்தித்துக் கொண்டிருந்தேன். (மேரீ தாஸ்தான் மர்தபா ஹாஃபிழ் மஸ்ரூர் அஹ்மத் மஹ்மூத் மக்ஃஸூத் அஹ்மத், பக்கம் 28 -30, பதிப்பு ஸியாவுல் இஸ்லாம் பிரஸ், ரப்வா, ஜனவரி 2013)

அருளுக்குரிய ரமலான் மாதத்தில் மஸ்ஜித் முபாரக்கில் 15 வருடங்கள் வரை அன்னாருக்கு தராவீஹ் தொழுகையை தொழ வைப்பதற்கான டியூட்டி கொடுக்கப்பட்டு வந்தது. நாஸிர் ஸாஹிப் இஸ்லாஹ் வ இர்ஷாத் மர்கஸிய்யா மதிப்பிற்குரிய மவ்லானா அப்துல் மாலிக் கான் ஸாஹிப் அவர்கள் ஒருமுறை அன்னாரிடம் இவ்வாறு கூறினார்கள்: அதாவது, மஸ்ஜித் முபாரக்கில் தஹஜ்ஜுத் தொழுகை மற்றும் தராவீஹ் தொழுகையை தொழ வைப்பதற்கு உங்களுக்கு மீண்டும் மீண்டும் ஏன் டியூட்டி கொடுக்கப்படுகின்றது என்றால் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களுக்கு உங்களின் திலாவத் மிகவும் விருப்பத்திற்குரியதாக உள்ளது. (மேரீ தாஸ்தான் மர்தபா ஹாஃபிழ் மஸ்ரூர் அஹ்மத் மஹ்மூத் மக்ஃஸூத் அஹ்மத், பக்கம் 35-37, பதிப்பு ஸியாவுல் இஸ்லாம் பிரஸ், ரப்வா, ஜனவரி 2013)

அன்னாரின் எண்ணற்ற மாணவர்கள் உள்ளனர். மேலும், தற்போதும் உலகின் பல்வேறு இடங்களில் பரவியுள்ளனர். அன்னாரிடம் இருந்து பயன் பெற்ற மற்றும் அன்னாரின் ஞானத்திலிருந்து பயனடைந்தவர்களின் கடிதங்களும் அன்னாரைக் குறித்து எனக்கு வந்துள்ளன. அவர்கள் அனைவரும் இதனைக் குறிப்பிடுகின்றனர். அவர்கள் அனைவரும் இதனைக் குறிப்பிடுகின்றனர். அல்லாஹ் மர்ஹூமின் அந்தஸ்தை உயர்த்துவானாக. மேலும், அவர்களின் பிள்ளைகள் மற்றும் சந்ததியினரிடமும் அன்னாரின் விருப்பத்திற்கு ஏற்ப துஆக்கள் மற்றும் தூய்மையின் நிலையை உருவாக்குவானாக.

இரண்டாவது நற்குறிப்பு, சிரியாவைச் சேர்ந்த மிகவும் பழைய அஹ்மதியான மதிப்பிற்குரிய நூருத்தீன் அல் ஹுஸ்னீ ஸாஹிப் அவர்களுடையதாகும். இன்றைய நாட்களில் சவுதிஅரேபியாவில் இருந்தார்கள். அஹ்மதி ஆகிவிட்டதன் காரணத்தால் சவுதிஅரேபியாவின் ஒரு சிறைச் சாலையில் பல வருடங்களாக அன்னார் கைதியாக இருந்தார்கள். அன்னார் இறைவனின் வழியில் கைதியாக இருந்தார்கள். நோய்கள் மற்றும் கடுமைகளுக்கு மத்தியிலும் உறுதிப்பாட்டுடன் இருந்தார்கள். மேலும், இறுதியில் சிறை பிடிக்கப்பட்ட நிலையிலேயே மே மாதம் 25-ம் தேதி சுமார் 82-வது வயதில் மரணமடைந்து விட்டார்கள்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

அன்னாரின் தந்தை அல்ஹாஜ் அப்துர் ரஊஃப் அல்ஹுஸ்னீ ஸாஹிப்

அவர்கள் 1938-ம் ஆண்டு பைஅத் செய்தார்கள். மதிப்பிற்குரிய முனீர் அல்ஹுஸ்னீ ஸாஹிப் அவர்கள் சிரியாவின் முன்னாள் அமீர் ஜமாஅத் மதிப்பிற்குரிய மர்ஹூம் நூருத்தீன் அல்ஹுஸ்னீ ஸாஹிப் அவர்களின் பெரிய தந்தையார் ஆவார்கள். மர்ஹூம் குழந்தைப் பருவம் முதலே இஸ்லாமிய நற்பண்புகள், அடையாளங்கள் மற்றும் கிலாஃபத்தின் மீதான நேசத்திற்குரிய சூழலில் வளர்ந்து வந்தார்கள். அன்னாருக்கு 13 அல்லது 14 வயது இருந்தபோது அன்னாரின் தந்தையார் மரணமடைந்துவிட்டார்கள். மர்ஹூம் பெரும்பாலும் மதிப்பிற்குரிய முனீர் அல்ஹுஸ்னீ ஸாஹிப் அவர்களின் பராமரிப்பில் இருந்து வந்தார்கள். மேலும், அன்னார் மர்ஹூமிற்கு ஜமாஅத்தைக் குறித்து நிறைய கற்றுக் கொடுத்தார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் 1955-ம் ஆண்டில் தமாஸ்கஸிற்கு சென்றிருந்தபோது மர்ஹூமின் சிறிய தந்தையார் மதிப்பிற்குரிய பத்ருத்தீன் அல்ஹுஸ்னீ ஸாஹிப் அவர்களின் வீட்டில் தங்கினார்கள். அந்த நாட்களில் ஒருமுறை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களுக்கு முன்னால் திலாவத் செய்வதற்கான கண்ணியமும் மர்ஹூமிற்கு கிடைத்தது. திருக்குர்ஆன் திலாவத் செய்வதில் மிகுந்த ஆர்வம் இருந்தது. தஹஜ்ஜுத் தொழுகையை மர்ஹூம் ஒருபோதும் கைவிட்டதில்லை. வாழ்க்கையின் இறுதி நாள் வரை சிறைச் சாலையிலும் தமது ஈமானில் நிலைத்திருந்தார்கள். மேலும் ஜமாஅத்துடனும் உறுதிப்பாட்டுடன் இருந்தார்கள். அல்லாஹ்வின் உதவி அருகில் உள்ளது என்ற விஷயத்தின் மீது அன்னாருக்கு ஈமான் இருந்தது. இந்த விஷயத்தை அன்னார் சிறைச்சாலையில் தம்மை சந்திக்கக் கூடிய ஒவ்வொருவரிடமும் கூறி வந்தார்கள். மர்ஹூம் பின்விட்டுச் சென்றவர்களில் அஹ்மதியான அன்னாரின் மனைவி இருக்கின்றார்கள். அன்னார் தமது கணவருடன் நன்றியுணர்வு மிக்க தொடர்பு வைத்திருந்தார்கள். அன்னாரின் சிறைவாசத்தின் காலத்தில் இந்த பெண்மணி மிகவும் தியாகம் செய்துள்ளார்கள். பிள்ளைகளில், அப்துர் ரஊஃப் ஸாஹிப், முஹம்மது முஆஸ் அல்ஹுஸ்னீ மற்றும் ஃபவாஸ் அல்ஹுஸ்னீ என்ற மூன்று மகன்கள் மட்டுமல்லாமல் ஸைனப் அல்ஹுஸ்னீ என்ற ஒரு மகளும் உள்ளார். மகன்வழிப் பேரர்களும், மகள் வழிப் பேத்திகளும் உள்ளனர். அனைவரும் அல்லாஹ்வின் அருளினால் தூய அஹ்மதிகள் ஆவர்.

மர்ஹூம் அவர்களின் மகன் மஆஸ் அல்ஹுஸ்னீ ஸாஹிப் கூறுகின்றார்கள்: எங்களது சகோதர, சகோதரிகள் அனைவரும் தமது முழு மனநிறைவுடன் ஜமாஅத்தில் இணைய வேண்டும் என்பது எனது தந்தையின் விருப்பமாக இருந்தது. மேலும் அல்ஹம்துலில்லாஹ், நாங்கள் முழுமையான ஈமானுடன் பைஅத் செய்தோம். மேலும் நாங்கள் சவுதி அரேபியாவில் இருந்தபோது ஜமாஅத்தை தேடத் துவங்கினோம். பின்னர் யூ.கேவில் வசித்து வந்த மர்ஹூம் ஹாஷிம் ஸாஹிப் என்பவர் அங்கு பணி செய்து வந்தார்கள். அன்னாரை சந்தித்தோம்.

பின்னர் கூறுகின்றார்கள்: எங்களது தந்தையாருக்கு தொடர்பு கிடைத்தது முதல் இறுதி மூச்சு வரை ஜமாஅத்தின் பணிகளில் மும்முரமாக இருந்தார்கள். மிகவும் பரிவு கொண்டவராகவும், திறந்த உள்ளத்திற்கு சொந்தக்காரராகவும் இருந்தார்கள். மற்றவர்களுக்கு உதவி செய்வது அன்னாருக்கு மிகவும் விருப்பத்திற்குரியதாக இருந்தது. அன்னார் எழுதியுள்ளார்கள்: 2019-ல் அன்னாரை அழைத்து கைது செய்துவிட்டார்கள். மிகவும் அதிகமான முயற்சி மற்றும் கடும் தேடுதல் போன்றவற்றிற்கு பிறகு இந்த விஷயம் தெரிய வந்தது. அதாவது, அஹ்மதியாக இருந்தார். மேலும் சமூக ஊடகங்களில் தப்லீக் செய்தார் என்று அன்னார் மீது குற்றம் சுமத்தப்பட்டு இருந்தது தெரிய வந்தது.

மகன் கூறுகின்றார்: இரண்டு ஆண்டுகள் வரை நாங்கள் அன்னாரின் விடுதலைக்காக எல்லா வகையிலும் முயற்சி செய்தோம். பல வக்கீல்களின் உதவிகளைப் பெற்றோம். அன்னாரை விடுதலை செய்வதற்கும் கட்டளை பிறப்பிக்கப்பட்டது. மேலும், விடுதலையும் செய்யப்பட்டார்கள். ஆனால், விடுதலை செய்யப்பட்டதற்கு சில மணி நேரம் கழித்து காவல்துறை அன்னாரை தொலைபேசியில் காவல் நிலையத்திற்கு அழைத்தது. மேலும், மீண்டும் கைது செய்யப்பட்டு விட்டார்கள். மேலும், இந்த முறை அன்னார் மீது முன்னரை விட அதிகமான கடுமை காட்டப்பட்டது. அன்னாரை சந்திப்பதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. தொலைபேசியில் பேசுவதற்கும் அனுமதி கிடைக்கவில்லை. அன்னாரின் உடல்நிலை மோசமடைந்து இருந்தது. நோய் மற்றும் முதுமையின் காரணமாக நோய்வாய்ப்பட்டிருந்தார்கள். மேலும், மருத்துமனைக்கும் சென்று வந்தார்கள். ஆனால், அன்னாரின் குடும்பத்தினரை அன்னார் சந்திக்கவில்லை.

அன்னாரின் மூத்த மகன் அப்துர் ரஊஃப் அல்ஹுஸ்னீ அவர்கள் கனடாவில் இருக்கின்றார்கள். அன்னாரும் மர்ஹூமைக் குறித்து எழுதியுள்ளார்கள்: அன்னார் ஜமாஅத்தின் மீது மிகுந்த களங்கமற்றத் தன்மையும், நேசமும் கொண்டிருந்தார்கள். தமது கொள்கையின் மீது மிகவும் வலிமையுடன் நிலை பெற்றிருந்தார்கள்.

மேலும், அவர் மர்ஹூமின் இறைவணக்கம் மற்றும் தூய்மையை குறிப்பாக குறிப்பிட்டுள்ளார். அவர் விளக்கமாக இவ்வாறு எழுதியுள்ளார்: 2016-ல் அன்னார் சிறைபிடிக்கப்பட்டபோது அன்னார் நோன்பு நோற்றிருந்தார்கள். மேலும், தமக்கு சிறைவாசத்தில் கடுமையை சகிக்க நேரிடும் என்பதை அன்னார் அறிந்திருந்தபோதும் அன்னார் நோன்பை திறப்பதை விரும்பவில்லை. அதிகாரி தண்ணீர் கொடுத்தபோது நான் நோன்பு நோற்றுள்ளேன் என்று அன்னார் கூறினார்கள். பின்னர், அஸர் தொழுவதற்கு அனுமதி கேட்டார்கள். அதனால் அனுமதி கொடுக்கப்பட்டது. அன்னார் அந்த அதிகாரிக்கு முன்னால் தொழுதார்கள். அதன் பிறகு, நீங்கள் எங்களைப் போன்றே தொழுகின்றீர்கள் என்று அவர் கூறினார். எவ்வாறு இருப்பினும், அதன் தாக்கம் அவர் மீது ஏற்பட்டது. அவர் அவரை அந்த நேரத்தில் விட்டு விட்டார். பின்னர் 2019-ம் ஆண்டு டிசம்பரில் எந்தக் காரணமும் கூறாமலேயே மீண்டும் காவல்துறை அன்னாரை கைது செய்தது. மேலும் சிறையில் அடைத்துவிட்டது. மேலும், அதே சிறை வாசத்தின் நிலையில் அன்னாரின் மரணமும் நிகழ்ந்துவிட்டது. அல்லாஹ் அன்னாருடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அந்தஸ்துகளை உயர்த்துவானாக. அன்னாரின் பிள்ளைகளுக்கும் அன்னாரின் நன்மைகளையும், சிறப்புகளையும் மேற்கொள்வதற்கான நற்பேறை வழங்குவானாக. நான் தொழுகைக்குப் பிறகு ஜனாஸா தொழுகையையும் தொழ வைப்பேன்.

இன்ஷாஅல்லாஹ்.

தமிழாக்கம் :

மவ்லவி A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * *

**உங்களுக்கு வேலையாட்கள் வேண்டுமா?**

உங்களுக்கு டிரைவர், மேஸ்திரி, மெக்கானிக், எலக்ட்ரீசியன் தேவையென்றால் எங்களை தொடர்பு கொள்ளவும்.

**நாங்கள் உங்களுக்கு நம்பிக்கையான, நல்ல வேலையாட்களை ஏற்பாடு செய்துகொடுப்போம்.**

KHAIRUL-ISLAM
JAYGON-WEST BENGAL 97348 44732

**நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்**

**தொலைபேசி எண் : 1800 103 2131**

இந்த *TOLL FREE* எண்ணில்

:.போன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

* * * * *

# அமைதியை நிலைநாட்டுதல் என்ற அம்சத்தின் ஒளியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை

(மவ்லானா முஹம்மத் இனாம் கௌரி, நாஸிர் ஆலா காதியான்)

يَّهۡدِىۡ بِهِ اللّٰهُ مَنِ اتَّبَعَ رِضۡوَانَهٗ سُبُلَ السَّلٰمِ وَيُخۡرِجُهُمۡ مِّنَ الظُّلُمٰتِ اِلَى النُّوۡرِ بِاِذۡنِهٖ وَيَهۡدِيۡهِمۡ اِلٰى صِرَاطٍ مُّسۡتَقِيۡمٍ

அவனது விருப்பத்தை தேடுகின்றவர்களை அல்லாஹ் இதன் மூலம் சமாதான வழியில் நடத்துகின்றான். மேலும் அவன் தனது கட்டளையினால் அவர்களை இருள்களிலிருந்து ஒளியிடத்துக் கொண்டு வருகின்றான். மேலும் நேரான வழியில் அவர்களைச் செலுத்துகிறான். (திருக்குர்ஆன் 5: 17)

இஸ்லாம் என்பதன் பொருள் சாந்தி மற்றும் சமாதானம் ஆகும். மேலும்,இஸ்லாத்தின் தோற்றுனர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் உலகளாவிய அமைதி மற்றும் சமாதானத்தின் தூதுவர் ஆவார்கள். சாந்தி, சமாதானம், மகிழ்ச்சி, மனநிறைவு ஆகியவை இந்த இரண்டு அடிப்படையான விஷயங்களின் மூலமே நிகழ்கிறது என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.

1) தனி மனித அமைதி 2) ஒட்டுமொத்த மக்களின் அமைதி

தனிமனித அமைதி மற்றும் மனநிறைவிற்கான தனித்தன்மையானது மனிதனின் சுய நல்லொழுக்க நிலை, அவனின் உள்ளம், சிந்தனை, உடல் ஆரோக்கியம், அவனுடைய மனைவி மக்கள் மற்றும் குடும்பத்தார்கள் அல்லது அவனுடைய பொறுப்புகளுக்கு ஏற்ப அவனுடைய வட்டத்திற்குள் இருப்பவர்களுடன் தொடர்புடையதாக இருக்கின்றது.

ஒட்டு மொத்த மக்களின் அமைதியானது மனிதனின் சமூக வாழ்க்கை அல்லது அவர்களுடைய சுற்றுப்புறம், அவர்களுடைய நகரம், அவர்களுடைய நாடு அல்லது பூமியில் படர்ந்துள்ள அனைத்து மக்களின் அமைதி மற்றும் பாதுகாப்புடன் தொடர்புடையதாகும்.

தான் அமைதி மற்றும் மனிநிறைவுடன் வாழ்க்கையை கழிக்க வேண்டும்; தன்னுடைய உடல் நலமும் நன்றாக இருக்க வேண்டும்; நல்ல உணவு கிடைக்க வேண்டும்; வசிப்பதற்கு உகந்த நல்ல இடம் கிடைக்க வேண்டும்; நல்ல மனைவி கிடைக்க வேண்டும்; நேர்மையான மற்றும் நல்ல குழந்தைகள் பிறக்க வேண்டும்; தன் குடும்பத்தைச் சேர்ந்த நபர்கள், பெற்றோர்கள், சகோதர, சகோதரிகள் மற்றும் தொலைவிலும் அருகிலும் உள்ள பிற உற்றார் உறவினர்கள் அனைவரும் நன்றாக இருக்க வேண்டும். அவர்களுக்கிடையில் சண்டை சச்சரவுகள் எதுவும் ஏற்படக் கூடாது என்பதை ஒவ்வொரு மனிதனும் விரும்புகின்றான்.

நாகரீகமான சமுதாயத்தில் வாழ்கின்ற ஒவ்வொரு மனிதனும் அவன் படித்தவனாக இருந்தாலும் சரி; அல்லது பாமரனாக இருந்தாலும் சரி; செல்வந்தராக இருந்தாலும் சரி; ஏழையாக இருந்தாலும் சரி; வெள்ளையராக இருந்தாலும் சரி; கருப்பராக இருந்தாலும் சரி; அரேபியராக இருந்தாலும் சரி; அரேபியர் அல்லாதவராக இருந்தாலும் சரி; கிழக்கில் வசிப்பவராக இருந்தாலும் சரி; மேற்கில் வசிப்பவராக இருந்தாலும் சரி; அந்த மனிதன் அமைதியான மனநிறைவான மற்றும் மகிழ்ச்சியான வாழ்க்கையை வாழ வேண்டும் என்றே விரும்புவான். அதற்காக அவன் பிறரை துன்பத்தில் ஆழ்த்தினாலும் சரியே; தன்னுடைய சுயநலத்திற்காக பிறருக்கு இழப்பை ஏற்படுத்துவதிலிருந்து விலகாமல் இருக்கும்போது அந்த அநீதி இழைக்கப்பட்ட நபர் தன்னுடைய அமைதியை நிலை நிறுத்துவதற்காகவும் தன் துயரத்தை நிவர்த்தி செய்தவற்காகவும் தன் இழப்பை ஈடு செய்வதற்காகவும் முதலாம் நபர் இவரிடம் எவ்வாறு நடந்து கொண்டாரோ அந்த நடத்தையையே இவரும் பிறரிடம் வெளிப்படுத்துகிறார். அவ்வாறு நிகழும்போது இரு புறமும் அமைதியின்மையின் தொடர் ஆரம்பமாகி விடுகிறது.

தனி நபரின் நிம்மதியின்மை மற்றும் அமைதியின்மை ஆனது வீட்டிலிருந்து வெளியேறி சுற்றுப்புறம் வரைக்கும் சென்றடைகின்றது. பிறகு அங்கிருந்து மாவட்டம், மாவட்டத்திலிருந்து நகரம், நகரத்திலிருந்து மற்றொரு நகரத்திற்கு சென்றடைந்தவாறு முழு நாட்டையும் தன்னுடைய வளையத்திற்குள் கொண்டு வந்து விடுகிறது. இறுதியில், இந்த சுழற்சியின் நாட்களே உலகளாவிய அமைதியின்மையை ஏற்படுத்துவதற்கான காரணியாக அமைந்து விடுகின்றது. இது ஒரு கதையோ அல்லது கட்டுக் கதையோ அல்ல. இன்றைய உலகின் கிழக்கிலும், மேற்கிலும், வடக்கிலும், தெற்கிலும், பார்வையை செலுத்தி பாருங்கள்! உலகளாவிய அமைதியின்மை மற்றும் நிம்மதியின்மை ஆனது பகலின் மகிழ்ச்சியையும், இரவின் தூக்கத்தையும் அழித்து விட்டது என்பது ஒரு மறுக்க முடியாத உண்மையாக இருக்கின்றது. அதை அனைவரும் ஆமோதிக்கிறார்கள். Print media, Electronic media, Social media வவின் அனைத்து நடை மேடைகளிலும் இதனுடைய கூச்சல் எழுந்து கொண்டே இருக்கிறது.

தற்போது தனிநபர், சமுதாய மற்றும் உலகளாவிய அமைதியை எவ்வாறு நிலை பெறச் செய்வார்? என்ற கேள்வி எழுகின்றது. இதற்கான பதில் என்னவென்றால், வெறும் அறிவிப்புகள் மற்றும் முழக்கத்தினால் மட்டும் இந்த பிரச்சனைக்கு தீர்வு காண முடியாது. மாறாக, செயல் அளவிலான நடவடிக்கையை மேற்கொள்வது அவசியமாகும். மேலும், இந்த பயணத்தை தன்னுடைய வீட்டிலிருந்து தொடங்கி அண்டை வீட்டார், முஹல்லா வாசிகள், நகரவாசிகள் மற்றும் நாடு முதல் சர்வதேச அளவில் எட்ட வைப்பது அவசியமாகும். வாருங்கள்! இது தொடர்பாக மனித இனத்தின் கருணையாளர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் தூய வாழ்க்கையின் மீது ஒரு பார்வையை செலுத்துவோம். மேலும், இஸ்லாமிய போதனைகள் மற்றும் அன்னாரின் அழகிய முன்மாதிரியின் சில சம்பவங்களை நினைவு கூருவோம்.

### வீட்டில் அமைதி

எல்லாவற்றிற்கும் முதலாவதாக வீடுகளில் எவ்வாறு அமைதியை நிலை பெறச் செய்வது? என்பதை நாம் சிந்திக்க வேண்டும். அதற்காக நாம் கணவன் மனைவியின் உரிமைகள் மற்றும் கடமைகளை நினைவிற் கொள்ள வேண்டும். ஒருவர் மற்றவருடைய உணர்வுகள் மற்றும் எண்ணங்களுக்கு மதிப்பளிக்க வேண்டும். நம்முடைய சுகபோகங்களை விட அதிகமாக தன்னுடன் இருப்பவர்களின் சுகபோகங்களை கருத்தில் கொள்வது அவசியமாகும். அவ்வாறு செய்யவில்லை என்றால் தினமும் கணவன் மனைவிக்கு இடையில் ஏற்படுகின்ற சண்டை சச்சரவுகளினால் வீட்டின் அமைதி சீர்குலைந்து போய்விடும். குழந்தைகளின் தர்பிய்யத்தில் மிகவும் தீய தாக்கம் ஏற்படுகின்றது. அதை விளக்கமாக கூறுவதற்கான சந்தர்ப்பம் இல்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அமைதி நிறைந்த குடும்ப வாழ்க்கை தொடர்பான சில ஹதீஸ்களை நான் தற்போது எடுத்து வைக்கின்றேன்.

திர்மிதீயில் உள்ள ஒரு ஹதீஸில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:

உங்களில் எவர் தன் மனைவியுடன் நல்ல முறையில் நடந்து கொள்கின்றாரோ அவரே உங்களில் சிறந்தவர் ஆவார். மேலும், தன் மனைவியுடன் நல்ல முறையில் நடந்து கொள்பவர்களில் நான் உங்கள் அனைவரையும் விட சிறந்தவன் ஆவேன். அன்னாருக்கு தர்பிய்யத் மற்றும் சமுதாய தேவையை கருத்தில் கொண்டவாறு ஒன்றுக்கும் மேற்பட்ட திருமணங்களை செய்ய நேர்ந்தது என்பதில் எந்த ஒரு ஐயமும் இல்லை. மேலும், ஒரே நேரத்தில் அன்னாருடன் வீட்டில் ஒன்பது மனைவி இருந்தார்கள். அன்னார் அவர்களுடன் நன்னடத்தை மற்றும் நீதி நெறியுடன் நடந்து கொண்டதனால் தான் அனைத்து மனைவிமார்களும் மனநிறைவுடனும் மகிழ்ச்சியுடனும் வாழ்வை கழித்தார்கள்.

முஸ்லிமின் ஒரு ஹதீஸை நான் எடுத்து வைக்கின்றேன். அதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தியாக மனப்பான்மையை கருத்தில் கொண்டவாறு கணவன், மனைவியாகிய இருவரும் ஒருவர் மற்றவரின் நற்குணங்களை கண்டறிய வேண்டும் என இவ்வாறு அறிவுரை கூறியுள்ளார்கள்: கணவன் மனைவியாகிய உங்கள் இருவருக்குள் ஒருவருடைய குறை தென்பட்டாலோ அல்லது ஏதாவது அவருடைய ஒரு செயல் உங்களுக்கு பிடிக்கவில்லை என்றாலோ அவரிடத்தில் நீங்கள் விரும்பக் கூடிய உங்களுக்குப் பிடித்த பல விஷயங்கள், செயல்கள் இருக்கும்; அதைக் கருத்தில் கொண்டு அந்தக் குறையை கண்டும் காணாமல் இருந்தவாறு இணக்கத்தின் சூழலை ஏற்படுத்த வேண்டும்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வீட்டில் என்ன செய்வார்கள்? என ஒருவர் கேட்டார். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனைத்து மனிதர்களைப் போன்று ஒரு மனிதராகத் தான் இருந்தார்கள். அவர்கள் சுயமே தன்னுடைய துணியை தைப்பார்கள். ஆட்டின் பாலை கரப்பார்கள். அவர்களுடைய சொந்த வேலையை சுயமே செய்து வந்தார்கள். இரவு நேரத்தில் வீட்டிற்கு அவர்கள் தாமதமாக வர நேர்ந்தால் யாரையும் தொந்தரவு செய்யாமல், எவரையும் எழுப்பாமால் உணவு அல்லது பாலை சுயமே உட்கொள்வார்கள் என அன்னார் (ரலியல்லாஹு அன்ஹா) பதில் அளித்தார்கள்.

அதேபோன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் குடும்ப வாழ்க்கை தொடர்பாக ஹஸ்ரத் ஆயிஷா (ரலியல்லாஹு அன்ஹா) அவர்களின் மற்றொரு சான்று என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனைத்து மக்களையும் விட மிகவும் மென்மையாக நடந்து கொள்பவராகவும், அனைவரையும் விட மிகவும் கண்ணியத்திற்கு உரியவராகவும் இருந்தார்கள். அதேநேரத்தில் சாதாரண மனிதனைப் போன்றே வீட்டில் இருந்து வந்தார்கள். அன்னாரை ஒருபோதும் கோபத்துடன் பார்த்ததில்லை. எப்பொழுதும் சிரித்த முகத்துடன் இருப்பார்கள். மேலும், ஹஸ்ரத் ஆயஷா (ரலி) அவர்கள்

கூறுகிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தன்னுடைய முழு வாழ்நாளில் ஒருபோதும் எந்த மனைவியின் மீதும் அடிப்பதற்காக கையை உயர்த்தியதே இல்லை. மேலும், எந்த ஒரு பணியாளர்களையும் அடித்ததில்லை.

நம்முடைய எஜமானரும் பின்பற்ற தகுதி உடையவருமான ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களின் கருணை மற்றும் உன்னதமான உபகாரத்தின் காட்சியானது அன்னாரின் இல்லற வாழ்க்கையை மிகவும் அமைதி நிறைந்த மற்றும் சொர்க்கத்தின் தோற்றமாக மாற்றி விட்டது என்பதில் எந்த ஓர் ஐயமும் இல்லை. இதன் காரணமாகவே அன்னாரின் அனைத்து மனைவிகளும் எந்நேரமும் அன்னாருடன் அர்ப்பணிப்புடன் வாழ்க்கை கழித்தார்கள்.

அல்லாஹும்ம ஸல்லி அலா
முஹம்மதி(ன்)வ் வ ஆலி முஹம்மதி(ன்)வ்
வ பாரிக் வ ஸல்லிம்.

### சுற்று வட்டாரத்தில் உள்ளவர்களின் அமைதி

வீட்டிற்கு அடுத்தபடியாக வலது புறம் இடது புறம் முன்னால் பின்னால் உள்ள அக்கம் பக்கத்து வீட்டாருடன் தொடர்பை மேற்கொள்வதற்கான நிலை வருகிறது. திருக்குர்ஆனில் இவ்வாறு மிகவும் வலியுறுத்தி கூறப்பட்டுள்ளது.

பெற்றோர்களுடன் (மிக்க) நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். மேலும், உறவினர்கள் அனாதைகள், ஏழைகள், உறவினர்களான அண்டை வீட்டுக்காரர்கள், அந்நியர்களான அண்டை வீட்டுக்காரர்கள், உங்களுடன் இருப்பவர்கள், வழிப்போக்கர்கள், உங்கள் வலக்கரங்கள் சொந்தமாக்கிக் கொண்டவர்கள் ஆகியவர்களுடன் (நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள்). (திருக்குர்ஆன் 4:37)

இது தொடர்பாக சில ஹதீஸ்களை நான் இங்கே எடுத்து வைக்கின்றேன்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு நபர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் நான் செய்வது நன்மையா? தீமையா? என்று எவ்வாறு நான் அறிவேன்? எனக் கேட்டார். அதற்கு அன்னார் (ஸல்), உன்னுடைய அண்டை வீட்டார்கள் நீ மிகவும் நல்லவர் என்று கூறக் கேட்டால், உன்னுடைய நடைமுறை மிகவும் சிறந்ததாக இருக்கின்றது என்று நீ அறிந்து கொள். மேலும், உன்னுடைய அண்டை வீட்டார் நீ மிகவும் தீயவர் என்று கூறக் கேட்டால் உன்னுடைய நடைமுறை மிகவும் மோசமானதாக இருக்கின்றது என்பதை நீ அறிந்து கொள் எனக் கூறினார்கள். (இப்னு மாஜா)

ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஆயிஷா (ரலியல்லாஹு அன்ஹா) ஆகிய இருவரும் அறிவிக்கின்றார்கள்:

இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அண்டை வீட்டார் குறித்து என்னிடம் (வானவர்) ஜிப்ரீல் (அவ்வப்போது) அறிவுறுத்திக் கொண்டேயிருந்தார். எந்த அளவிற்கென்றால் (எங்கே) அண்டை வீட்டாரை எனக்கு வாரிசாக்கிவிடுவாரோ என்று கூட நான் எண்ணினேன். (புகாரி)

ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

அல்லாஹ்வின் மீது ஆணையாக! அவர் இறை நம்பிக்கையாளர் அல்ல. அல்லாஹ்வின் மீது ஆணையாக! அவர் இறை நம்பிக்கையாளர் அல்ல. அல்லாஹ்வின் மீது ஆணையாக! அவர் இறை நம்பிக்கையாளர் அல்ல என்று (மூன்று முறை) ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது இறைத் தூதர் (ஸல்) அவர்களே! அவர் யார்? என்று கேட்கப்பட்டது. அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எவருடைய நாசவேலைகளிலிருந்து அவருடைய அண்டை வீட்டார் பாதுகாப்பு உணர்வைப் பெறவில்லையோ அவர் தான் என்று பதிலளித்தார்கள். (புகாரி)

பல வழிகளின் மூலமாக எதிர்பாராத தாக்குதல்கள் நடந்து கொண்டே இருக்கின்றன. சில சமயம் இரவின் நேரத்தில் ரேடியோ, டிவியில் அதிகமான ஓசையுடன் நிகழ்ச்சிகள் கேட்கப்படுகிறது. அதன் காரணமாக அண்டை வீட்டார் நிம்மதியாக உறங்க முடியாமல் போய்விடுகிறது. சிலநேரம் வீட்டின் குப்பை அண்டை வீட்டின் வாசல் அருகே வீசப்படுகிறது போன்றவை.....

ஹஸ்ரத் அபூதர்(ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அபூதர் அவர்களே! நீர் குழம்பை தயார் செய்தால் அதில் தண்ணீரை அதிகப்படுத்துவீராக! அதனைக் கொண்டு உம் பக்கத்து வீட்டாரையும் கருத்தில் கொள்வீராக! என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

சுற்று வட்டாரத்தில் உள்ள அனைவரும் தத்தமது அண்டை வீட்டாருடன் இவ்வாறாக நல்ல முறையில் நடந்து கொண்டும் மேலும், அவர்களுக்கு துன்பத்தை ஏற்படுத்தக் கூடிய அனைத்து விதமான விஷயங்களிலிருந்து விலகி இருந்தாலே சுற்றுவட்டாரம் முழுவதுமாக அமைதி மற்றும் பாதுகாப்பானதாக இருக்கும் என்பது வெளிப்படையான ஒன்றாகும்.

### நகரத்தின் அமைதி

பொதுவாக நகரவாசிகளின் உரிமைகள் மற்றும் கடமைகள் தொடர்பாக சரியான ஞானம் இருக்க வேண்டும். மேலும், அதற்கு ஏற்ப அந்த உரிமைகளை செலுத்துவதற்கு முயற்சி செய்வது ஆகியவை நகரத்தை அமைதியின் மையமாகவே உருவாக்குவதற்கு காரணமாக திகழ்கிறது. இது தொடர்பாக சில வழிகாட்டல்கள் மற்றும் கட்டளைகளை சமர்ப்பிக்கின்றேன். அதை செவியேற்கவும்;

அதில் ஒன்று ஒருவர் மற்றவரை சந்திக்கும்போது அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூற வேண்டும். அதன் பொருள் உங்கள் மீது அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக என்பதாகும். இங்கு நம்முடைய இந்தியாவில் பல மார்க்கத்தை பின்பற்றக் கூடியவர்கள் தத்தமது நடைமுறைக்கு ஏற்ப நமஸ்தே, வணக்கம், குட், மார்னிங் போன்ற வார்த்தைகளை ஒருவர் மற்றவரின் நலன் விரும்பி என்ற புது செய்தியை கொடுக்கின்றார்கள். அதன் பிறகு ஒருவர் மற்றவரை கட்டித் தழுவி கொள்கிறார்கள். இதன் மூலமாக அறிமுகம் மற்றும் நேசம் அதிகரிக்கின்றது. மேலும், வெறுப்பு மற்றும் காழ்ப்புணர்ச்சி விலகிச் செல்கின்றது.

இரண்டாவதாக, வழிப்பாதைகளில் குப்பையை கொட்டுவதற்கு பகரமாக வழிப்போக்கர்களுக்கு தீங்கை விளைவிக்க கூடிய பொருட்களை அப்புறப்படுத்துவதற்கும் அகற்றுவதற்கும் முயற்சி செய்யுங்கள். வழிப் பாதையில் இருந்து தொல்லை தரக்கூடிய பொருட்களை அகற்றுவதும் தர்மம் ஆகும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

பிறகு, இந்த வழிகாட்டலும் உள்ளது அதாவது பொது இடங்களில் உரத்த குரலில் சண்டை சச்சரவு பொருத்தமானது அல்ல. அவ்வாறு செய்வதன் மூலம் மக்களின் அமைதி மற்றும் மகிழ்ச்சியில் இடையூறு ஏற்படுகிறது. குழந்தைகள் மற்றும் பெண்கள் வசிக்கின்ற இடங்களில் இப்படிப்பட்ட சம்பவங்கள் அவர்களை மிகவும் பதற்றத்திற்கு உள்ளாக்குகிறது.

சாலையின் நடுவில் இடையூறு செய்யும் விதமாக அணி வகுத்தும் கூட்டமாக நிற்பதிலிருந்தும் தவிர்ந்து கொள்ள வேண்டும்.

நீங்கள் சாலையில் அமர்வதைத் தவிருங்கள் என்று இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். எங்களுக்கு அங்கு அமர்வதைத் தவிர வேறு வழியில்லை ; அவைதாம் நாங்கள் பேசிக் கொள்கிற எங்கள் சபைகள் என்று மக்கள் கூறினர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அப்படியென்றால் நீங்கள் அந்தச் சபைகளுக்கு வந்(து அம)ரும்போது, பாதைக்கு அதன் உரிமையைக் கொடுத்து விடுங்கள் என்று கூறினார்கள். வழிப் பாதையின் உரிமை என்ன? என்று மக்கள் கேட்டார்கள். அதற்கு, (அந்நியப் பெண்களைப் பார்க்காமல்) பார்வையைத் தாழ்த்திக் கொள்வதும் (வழிப்பாதையில் செல்வோருக்குச் சொல்லாலோ, செயலாலோ) துன்பம் தராமலிருப்பதும், ஸலாமுக்கு பதிலுரைப்பதும், நன்மை புரியும்படி கட்டளையிடுவதும் தீமையிலிருந்து தடுப்பதும் (அதன் உரிமைகள்) ஆகும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள்.

மற்றொரு வழிகாட்டல் என்னவென்றால், நோயாளிகளை சந்தித்து நலம் விசாரிக்க வேண்டும். அவர்களுக்கு மன தைரியத்தை ஏற்படுத்தக் கூடிய சிறந்த ஆலோசனைகளை வழங்குவதுடன் அவர்களின் பூரண உடல் சுகத்திற்காக துஆவும் செய்ய வேண்டும்.

மற்றொரு வழிகாட்டல் என்னவென்றால், எவர்கள் மரணித்து விடுகின்றார்களோ அவர்களின் இறுதிச் சடங்கு மற்றும் அடக்கம் செய்வதில் உதவி செய்ய வேண்டும். தத்தமது வழிமுறைக்கு ஏற்ப ஜனாஸாவிற்கு கண்ணியத்துடனும், மரியாதையுடனும் இறுதிச் சடங்கு செய்ய வேண்டும். ஒரு யூதரின் ஜனாஸா கடந்து சென்றபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரியாதை நிமித்தமாக எழுந்து நின்றார்கள். அதைப் பார்த்த ஸஹாபா பெருமக்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இது ஒரு முஸ்லிம் அல்லாத யூதரின் ஜனாஸா தானே? எனக் கேட்டார்கள். இதன் பொருள், மனித நேயத்தின் அடிப்படையில் அனைத்து மனிதர்களும் சமமானவர்களே என்பதாகும். நகரவாசிகளுக்கு இதுபோன்ற மனநிறைவை உருவாக்கக் கூடிய எண்ணற்ற வழிகாட்டல்கள் உள்ளன. அதன் மூலம் அமைதி மற்றும் பாதுகாப்பின் சூழலை ஏற்படுத்துவது அவசியமாகும். நான் நேரத்தை கருத்தில் கொண்டவாறு ஒருசில சம்பவங்களை குறிப்பிட்டுள்ளேன். இது தொடர்பாக சில ஹதீஸ்களை எடுத்து வைக்கின்றேன்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒருவருக்கொருவர் பொறாமை கொள்ளாதீர்கள்! நீங்கள் பொருளை வாங்கும் எண்ணமில்லாமல் பிறரை வாங்கச் செய்வதற்காக விலையை உயர்த்தி விடாதீர்கள். ஒருவருக்கொருவர் பகைமை கொள்ளாதீர்கள்! ஒருவருக்கொருவர் முகம் திருப்பிக் கொள்ளாதீர்கள்! இன்னும், ஒருவரின் வியாபாரத்தில் மற்றவர் (இடையே புகுந்து) வியாபாரம் செய்யாதீர்கள்! நீங்கள் அல்லாஹ்வின் அடியார்களாகவும் (உங்களுக்குள்) சகோதரர்களாகவும் இருங்கள். (ஹதீஸ் நூல் -முஸ்லிம்)

ஹஸ்ரத் அம்ர் பின் ஷுஐப் (ரலி) அவர்கள் தன்னுடைய தந்தையிடமிருந்தும், அவர் தம்முடைய பாட்டனாரிடமிருந்தும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக அறிவிக்கின்றார்கள்: எவர் சிறுவர்கள் மீது கருணை புரிய மாட்டாரோ

மேலும், பெரியவர்களுக்கு கண்ணியம் அளிக்க மாட்டாரோ அந்த நபருடன் நமக்கு எந்த ஒரு தொடர்பும் இல்லை. (ஹதீஸ் நூல் - திர்மிதீ)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் அப்துல்லாஹ் இப்னு மசூத் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அனைத்து படைப்பினங்களும் அல்லாஹ்வின் குடும்பமாகும். எனவே அல்லாஹ்விற்கு தன்னுடைய படைப்பினங்களில் எவர் தன்னுடைய குடும்பத்தாருடன் நல்ல முறையில் நடந்து கொள்கிறாரோ மேலும் அவர்களுடைய தேவையை கருத்தில் கொள்கிறாரோ அவரே மிகவும் விருப்பமானவராக இருக்கின்றார். (மிஷ்காத்)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா(ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: முஸ்லிம் யாரெனில், எவருடைய நாவிலிருந்தும் கரத்திலிருந்தும் மற்ற முஸ்லிம்கள் பாதுகாப்புப் பெற்றிருக்கிறார்களோ அவர் தான். முஃமின் (இறை நம்பிக்கையாளர்) யாரெனில், தங்கள் உயிர்கள் மற்றும் உடைமைகள் விஷயத்தில் மனிதர்கள் எவரைக் குறித்து அச்சமற்று இருக்கிறார்களோ அவர் தான். (திர்மிதீ)

மனிதர்களுக்கு மட்டுமல்ல விலங்குகளுக்கும் துன்பம் கொடுப்பதிலிருந்து தவிர்ந்து கொள்ள வேண்டும் என்று கூறியுள்ளார்கள். ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அறிவிக்கின்றார்கள்: பூனையின் காரணத்தால் ஒரு பெண் தண்டனைக்குள்ளாக்கப்படுவதை நான் கண்டேன். அவள் தனது பூனைக்கு தீனி போடாமல் கட்டிப்போட்டு வைத்திருந்தாள். அவள் அந்த பூனையை நிலத்தில் உள்ள புழுப் பூச்சிகளை தின்னும் பொருட்டு அதனை அவிழ்த்து விடவில்லை. இந்த அநீதியின் காரணத்தினால் அவள் நரகத்தில் இடப்பட்டாள். (முஸ்லிம்)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் இப்னு மஸுஊத் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் ஒரு பயணத்தில் நாங்கள் இருந்தோம். அவர்கள் ஒரு தேவைக்காக வெளியே சென்றார்கள். அப்போது நாங்கள் ஹும்ரா என்ற பெயருடைய குருவியையும், அதன் இரு குஞ்சுகளையும் கண்டோம். நாங்கள் இரு குஞ்சுகளையும் எடுத்துக் கொண்டோம். தாய்ப் பறவை சிறகடித்துக் கொண்டு வந்தது. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வந்து விட்டார்கள். இந்தத் தாய்ப் பறவையைப் பதறச் செய்தது யார்? என்று கேட்டு விட்டு அதன் குஞ்சுகளை அதனிடம் விட்டு விடுங்கள் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். மேலும், ஒரு எறும்புப் புற்றை நாங்கள் எரித்தருந்ததையும் அன்னார் (ஸல்) கண்டார்கள். யார் இதை எரித்தார்? என்று கேட்ட போது நாங்கள் தான் கூறினோம். அதற்கு, நெருப்பின் எஜமானனான அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் நெருப்பின் மூலம் தண்டிக்கக் கூடாது என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

வெளிப்படையாக பார்க்கும்போது இது சிறிய மற்றும் ஒரு சாதாரண வழிகாட்டல் போல தோன்றுகிறது. ஆனால், பிற மனிதர்கள் மற்றும் உயிரினங்களை துன்புறுத்துவதிலிருந்து காப்பாற்றுவது மற்றும் அவர்களுக்கு மன நிறைவையும் நிம்மதியையும் ஏற்படுத்தி அவர்களுக்கான அமைதியை நிலை நாட்டுவதற்கு இது மிகவும் அடிப்படையான மற்றும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கின்றது.

**ஆட்சியாளர்களின் உரிமைகள் மற்றும் கடமைகள்**

தற்போது வரை பொது மக்களின் பரஸ்பர தொடர்புகள் உரிமைகள் மற்றும் கடமைகள் குறித்து விளக்கினோம். இனி இஸ்லாமிய போதனைகளின் ஒளியில் ஆட்சியாளர்கள் மற்றும் குடிமக்களின் கடமைகள் மற்றும் உரிமைகள் தொடர்பாக சிலவற்றை கூறுவது அவசியம் என்று எண்ணுகிறேன்.

எந்த ஒரு அரசாங்கமாக இருந்தாலும் சரி; அது செய்ய வேண்டிய அனைத்தையும் விட முதல் கடமை என்னவென்றால், குடிமக்களுக்கு அடிப்படை தேவையான உணவு, உடை மற்றும் அரசாங்கத்தின் தகுதிக்கேற்ப அவர்கள் வசிப்பதற்கு ஏற்ற இடத்தை ஏற்பாடு செய்வதே ஆகும். எனவே மனிதனின் இந்த அடிப்படை தேவையை ஏற்பாடு செய்வது தொடர்பாக திருக்குர்ஆன் நமக்கு இவ்வாறு வழிகாட்டல் வழங்கியுள்ளது: إِنَّ لَكَ أَلَّا تَجُوعَ فِيهَا وَلَا تَعْرَىٰ

وَأَنَّكَ لَا تَظْمَأُ فِيهَا وَلَا تَضْحَىٰ

நிச்சயமாக, இதில் நீர் பசித்தவராகவும், ஆடையற்றவராகவும் இருக்கலாகாது (என்பது உமக்கு விதிக்கப்பட்டுள்ளது)

மேலும், நீர் இதில் தாகமுடையவராகவும், வெயிலில் காய்பவராகவும் இருக்கலாகாது. (20:119-120)

உணவு மற்றும் ஆடையின் தேவைக்கேற்ப உதவியை தனிப்பட்ட மனிதர்கள் பரஸ்பரம் ஒருவர் மற்றவரை கருத்தில் கொண்டு உதவி செய்கின்றார்கள். மேலும், பல அமைப்புகள் மற்றும் NGO போன்ற நிறுவனங்களும் மனித இனத்தின் உதவியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள் என்றாலும் இது அரசாங்கத்தின் முக்கியப் பொறுப்பாகும். அதாவது, அவர்கள் தன்னுடைய அரசாங்கத்தின் கீழ் வாழ்கின்ற குடிமக்களுக்காக அவர்களின் தேவைக்கேற்ப உணவு, உடை மற்றும் வீடு ஆகியவை அவர்களுக்கு கிடைக்கின்ற வகையிலான நிரந்தர வழிமுறைகளையும் ஏற்பாடுகளையும் செய்ய வேண்டியது அவசியமாகும். மேலும், எந்த அரசாங்கம் இந்த முக்கியமான பொறுப்பை செலுத்துவதில் கவனமற்றதாகவும் அல்லது தவறான நிர்வாகத்தின் காரணமாக தோல்வி அடைகிறதோ அவ்வாறே அந்த அரசாங்கத்தின் கீழ் உள்ள குடிமக்களிடமும் நிம்மியின்மை மற்றும் அமைதியின்மை ஏற்பட்டு விடுகிறது. மேலும், அதன் விளைவாக பல குற்றங்கள் உருவெடுக்கின்றன.

இது தொடர்பாக இந்த விஷயமும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அது என்னவென்றால், மக்களுக்கு அவர்களின் நிலைமைக்கு ஏற்ப தொழிலுக்கான ஏற்பாட்டை செய்வது அவர்களின் தகுதிக்கேற்ப தன்னுடைய சொந்த காலில் நிற்பதற்கான முயற்சி செய்வது, மேலும் அவர்களை அடுத்தவரிடம் யாசகம் கேட்பதிலிருந்தும், பிறரிடம் தேவையை கேட்பதிலிருந்தும் விலக்கி வைக்க வேண்டும். இது தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சில வழிகாட்டல்கள் மற்றும் அன்னாரின் செயல் வடிவிலான முன்மாதிரியையும் உங்களுக்கு முன்னால் எடுத்து வைக்கின்றேன்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் இப்னு மஸுஊது (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக அறிவிக்கின்றார்கள்: உழைத்து ஊதியம் பெறுவதும் அல்லாஹ்வால் நிர்ணயிக்கப்பட்ட கடமைகளை போன்ற ஒரு கடமையாகும். (மிஷ்காத்)

ஹஸ்ரத் மிக்தாத் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக அறிவிக்கின்றார்கள்: தன் கையினால் உழைத்து பெறுகின்ற சம்பாத்தியத்தை விட சிறந்த சம்பாத்தியம் வேறு எதுவும் இல்லை. (புகாரி)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிறரிடம் யாசிப்பதையும் கேட்பதையும் விரும்பியது இல்லை தான். கொடுக்கின்ற கை வாங்குகின்ற கையை விட சிறந்தது என அன்னார் (ஸல்) கூறியுள்ளார்கள். அவ்வாறு கூறியிருந்தும், உண்மையான தேவையுடையவர் எவரேனும் அன்னாரிடம் யாசகம் கேட்டு வந்தால் வெறுங்கையுடன் அந்த நபர் அன்னாரின் தர்பாரிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டதில்லை. ஆனால், யாசகம் கேட்டு வந்த ஏதாவது ஒரு நபரை அன்னார் திருப்பி அனுப்பி விட்டால் அந்த நபருக்கு அதை விட சிறந்த மாற்று ஏற்பாட்டை செய்து விடுவார்கள். இது தொடர்பான ஒரு ஹதீஸ் இவ்வாறு உள்ளது:

ஹஸ்ரத் அனஸ் இப்னு மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அன்ஸாரி ஸஹாபிகளைச் சேர்ந்த ஒருவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து யாசகம் கேட்டார். அப்போது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த நபருக்கு ஏதேனும் கொடுப்பதற்கு உம் வீட்டில் என்ன இருக்கிறது? என்று கேட்டார்கள். ஒரு போர்வையும் ஒரு தோலினால் ஆன நீர் பையும் உள்ளது என அந்த நபர் கூறினார். அந்த இரண்டு பொருட்களையும் கொண்டு வாருங்கள் என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அந்த நபர் அந்த இரண்டு பொருள்களையும் கொண்டு வந்தார். அதன் பிறகு, ஸஹாபிகளுக்கு மத்தியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த இரண்டு பொருட்களையும் ஏலத்தில் விட்டார்கள். அப்போது, இந்த இரண்டு பொருள்களையும் நான் ஒரு திர்ஹமிற்கு வாங்குகிறேன் என ஒரு நபர் கூறினார். மற்றொருவர் நான் அவற்றை இரண்டு திர்ஹம்களுக்கு வாங்குகிறேன் என்று கூறினார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த நபரிடம் இரண்டு பொருட்களையும் கொடுத்து விட்டார்கள். அதன் பிறகு, அந்த அன்ஸாரி ஸஹாபியிடம், ஒரு திர்ஹமை கொடுத்து உணவிற்கு தேவையான பொருட்களை வாங்கி வீட்டில் கொடுத்து விடுங்கள்; மற்றொரு திர்ஹமை வைத்து கோடாரி வாங்கி வீட்டில் கொடுத்து விடுங்கள் என கூறினார்கள். அவர் கோடாரியை வாங்கி வந்ததும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தம் கைகளால் அதில் ஒரு கைப்பிடியைப் பொருத்தி, சென்று விறகுகளை வெட்டி விற்கவும்; மேலும் பதினைந்து நாட்களுக்கு நீர் இங்கு தென்படக் கூடாது என்றும் கூறினார்கள். அந்த நபரும் விறகை வெட்டி அதை வியாபாரம் செய்து வந்தார். எதுவரை என்றால், அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வரும்போது பத்து திர்ஹம் சம்பாதித்து இருந்தார். நீங்கள் வீடு வீடாகச் சென்று யாசகம் கேட்பதை விட சுயமே சம்பாதித்து உண்பது உங்களுக்கு மிகச் சிறந்ததாகும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அபூதாவூத்)

உழைப்பாளியின் கூலி தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கட்டளை என்னவென்றால், உழைப்பாளியின் வியர்வை உலர்வதற்கு முன் அவருடைய கூலி அவருக்கு கொடுக்கப்பட வேண்டும் என்பதாகும். (இப்னு மாஜா)

அதுமட்டுமல்ல ஒரு தொழிலாளியை அமர்த்தி, வேலையை வாங்கிவிட்டு அவருடைய கூலியைக் கொடுக்காதவருடன் நான் மறுமையில் வாதாடுவேன் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். இவ்வாறாக, ஏதாவது ஒரு முதலாளி தன் தொழிலாளியிடம் அவருடைய கூலியை கொடுக்கவில்லை என்றால் அந்தக்

கூலியை அவருக்கு பெற்றுக் கொடுப்பது அரசாங்கத்தின் கடமையாகும்.

கண்ணியத்திற்குரிய அவையோர்களே! அரசாங்கத்தின் அடிப்படை கடமை என்னவென்றால், அரசாங்கத்தின் கீழ் உள்ள மக்களுடன் நீதி மற்றும் நேர்மையுடன் நடந்து கொள்ள வேண்டும். மேலும், அனைத்து விதமான அநீதி மற்றும் கொடுமைகளை அழிப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். தற்போதைய காலகட்டத்தில் அநீதி மற்றும் நேர்மையின்மை அழிந்து போனதே அனைத்து விதமான அமைதியின்மை மற்றும் நிம்மதியின்மைக்கு காரணமாகவும் உலகளாவிய பதற்றமான சூழலுக்கு காரணியாகவும் உள்ளது. இது தொடர்பாக ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மீண்டும், மீண்டும் உலகின் ஆட்சி அதிகாரம் படைத்த மக்களுக்கு கவனமூட்டிக் கொண்டே இருக்கின்றார்கள். அன்னார் Capital Hill Washington DC - யில் 2012 ஆம் ஆண்டு ஆற்றிய உரையில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

அனைத்து மக்களும் பிறப்பால் சமமானவர்களே என திருக்குர்ஆன் தெளிவாக கூறுகிறது. மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது இறுதி பேருரையில் அனைத்து முஸ்லிம்களிடமும் நினைவில் கொள்ளுமாறு கூறிய போதனை என்னவென்றால், ஓர் அரேபியர் அரேபியர் அல்லாதவரை விட எவ்விதத்திலும் உயர்ந்தவர் அல்லர்; அவ்வாறே ஓர் அரேபியர் அல்லாதவர் அரேபியரை விட எவ்விதத்திலும் உயர்ந்தவர் அல்லர் என்பதாகும். ஒரு வெள்ளையர் கருப்பரை விடவும் உயர்ந்தவர் அல்லர்; கருப்பர் வெள்ளையரை விடவும் உயர்ந்தவர் அல்லர் என்றும் அன்னார் (ஸல்) போதித்துள்ளார்கள். எனவே எல்லா நாட்டினரும், அனைத்து இன மக்களும் சமமானவர்களே என்பது இஸ்லாத்தின் தெளிவான போதனையாகும். மேலும், எவ்வித பாராபட்சமும் விருப்பு, வெறுப்பும் இல்லாமல் அனைத்து பிரிவைச் சேர்ந்த மக்களுக்கும் சம உரிமை வழங்கப்பட வேண்டும் என்பதும் தெளிவாக கூறப்பட்டுள்ளது. இதுவே பல்வேறு தரப்பினர்களுக்கிடையிலும் நாடுகளுக்கு இடையிலும் இணக்கத்தை ஏற்படுத்தவும் அமைதியை நிலைநாட்டவும் தேவையான உன்னதமான போதனையாகும்.

**நாடுகளுக்கு இடையில் உள்ள தொடர்புகள்**

சமுதாய மற்றும் நாட்டின் உரிமைகள் மற்றும் கடமைகளுக்கு பிறகு தற்போது நாடுகளுக்கு இடையில் உள்ள தொடர்புகள் குறித்து சுருக்கமாக சிலவற்றை கூற விரும்புகிறேன். குறிப்பாக தற்போதைய சூழ்நிலையில் ஒவ்வொரு பெரிய சக்தியும் சிறிய சக்திகளை தனது ஆதிக்கத்தின் கீழ் நசுக்கிக் கொண்டே செல்கிறது. மேலும், பல யுக்திகள் மற்றும் திட்டங்களின் மூலம் சிறிய சக்திகளின் வாழ்க்கையில் தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்தி

அடக்குமுறையை கையாள்கிறது. இந்த அனைத்து சண்டை சச்சரவுகள் போர்கள் ஆகியவற்றிற்கான காரணம் என்ன? என்பதன் பக்கம் நாம் கவனம் செலுத்தினால் நமக்கு தென்படுகின்ற மிகப் பெரிய காரணம், ஒருவர் மற்றவரின் நாட்டின் மீது பொறாமையின் பார்வையை செலுத்துவது பரஸ்பரம் ஒருவர் மற்றவரிடமிருந்து தவறாக அனுமதிக்கப்படாத ரீதியில் பலன் பெறுவது அல்லது அந்த நாட்டை பணிய வைத்து தன்னுடைய ஆளுமையை நிலை நிறுத்துவதற்கு முயற்சி செய்வது தான் என்பது தெரிய வருகின்றது.

இஸ்லாம் இந்த சுயநலத்தின் அடித்தளத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்காகவே திருக்குர்ஆனில் ஸூரா தாஹாவின் 132-ஆம் வசனத்தில் இவ்வாறு கட்டளையிட்டுள்ளது;

அவர்களுள் சில பிரிவினருக்கு நாம் வழங்கியுள்ள இவ்வுலக வாழ்க்கையின் அலங்காரங்களாகத் தற்காலிகப் பலன் தரும் பொருள்களின் பால் நீர் உமது பார்வையைச் செலுத்தாதீர். அவற்றின் மூலம் நாம் அவர்களைச் சோதிப்பதற்காகவே (அவை அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன). உம்முடைய இறைவனால் வழங்கப்பட்ட உணவு மிகச் சிறந்தததும், நிலைத்திருக்கக் கூடியதுமாகும். (20: 132)

இரண்டாவது அடிப்படை கட்டளையானது திருக்குர்ஆனின் ஸூரா அல்மாயிதா 9 வது வசனத்தில் இவ்வாறு உள்ளது;

நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வுக்காக நீங்கள் நேர்மையான சாட்சி கூறுபவர்களாக நிலைத்து நில்லுங்கள். ஒரு சமுதாயத்தின் மீதான பகைமை உங்களை நீதியுடன் நடக்காதவாறு தூண்ட வேண்டாம். நீங்கள் நீதியுடன் நடந்து கொள்ளுங்கள். இதுதான் இறையச்சத்திற்கு மிக நெருங்கியது. அல்லாஹ்விற்கு அஞ்சுங்கள். நிச்சயமாக, அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கறிகின்றான். (5:9)

இன்று பாருங்கள்! உலகின் மேற்கு கிழக்கு தெற்கு மற்றும் வடக்கிலுள்ள சக்திகள் ஒருவர் மற்றவரின் பொருள்கள் மற்றும் உடைமைகளின் மீது பொறாமை மற்றும் பேராசையுடன் நாட்டை ஆக்கிரமித்தும், பிறரை பணிய வைத்தும், ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்து விட்டு தன்னுடைய நலனில் மட்டும் கவனமாகவும் எச்சரிக்கையாகவும் இருக்கின்றன. அதன் விளைவாக மற்ற சமுதாயங்களிலும் நாடுகளிலும் எந்த அளவிற்கு பாதிப்பு ஏற்பட்டாலும் சரியே ; மேலும் அந்த நாடும், சமுதாயங்களும் எப்படி அழிந்து போனாலும் சரியே ; அதை பற்றி எவருக்கும் கவலை இல்லை.

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் நான்காவது இமாம் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மத் (ரஹி) அவர்கள் இன்றிலிருந்து பல ஆண்டுகளுக்கு முன்பு இவ்வாறு கூறினார்கள்:

இன்றைய நிகழ்கால அரசியல் மிகவும் சீர்குலைந்துவிட்டது. நீதி மற்றும் இறையச்சத்திலிருந்து வெற்றிடமாக உள்ளது. எந்த முஸ்லிம் ஆட்சிகள் இஸ்லாத்தின் பெயரால் தன்னுடைய நல்லொழுக்கத்தில் மேன்மை அடைந்துவிட்டதாக பறைசாற்றுகின்றதோ அவர்களின் நம்பிக்கையும் இன்று நல்லொழுக்கத்தின் படி இல்லை. மேலும், இஸ்லாத்தின் உயர்ந்த மற்றும் உன்னதமான நேர்மறையான கோட்பாடுகளுக்கு ஏற்புடையதாக இல்லை. அதற்கு மாறாக, தன்னுடைய அற்பமான சுயநல குறிக்கோள்களை மட்டும் கருத்தில் கொண்டுள்ளதாக இருக்கின்றது. எனவேதான் இன்றைய முஸ்லிம் உலகத்தில் நாம் நிலையற்ற மற்றும் சுய முரண்பாடுகளைக் கொண்ட செயல்பாடுகளை காண்கிறோம்.

மறுபுறம், முஸ்லிம் அல்லாத நாடுகளும் நீதியின் பெயரால் மிகப் பெரிய வாதங்கள் செய்வதில் மும்முரமாக உள்ளனர். இது என்னவோ இவர்கள் மட்டும் தான் உலகில் நீதியின் குத்தகையாளர்களாக நியமிக்கப்பட்டதை போன்றும் இவர்களுடைய சக்தி இல்லை என்றால், உலகில் நீதி இல்லாமல் போய் விடும் என்பதைப் போன்றும் இருக்கின்றது. இன்னொரு பக்கம் முஸ்லிம்களும் இஸ்லாத்தின் பெயரால் மிக உயர்ந்த வாதங்களை செய்கிறார்கள். ஆனால், இந்த இரு தரப்பினரும் செய்யக் கூடிய வாதங்களை சீர்தூக்கி பார்த்தால் இவை இரண்டுமே திருக்குர்ஆன் கூறக்கூடிய நீதியின் பண்புகளை விட்டும் வெறுமையாக இருக்கிறது என்பதனை கண்டு கொள்வீர்கள். (The Gulf Crisis - page 14)

**மார்க்கத் தொடர்புகள்**

அதன் பிறகு அமைதியை நிலைநாட்டுவதில் மார்க்க தொடர்புகளின் முக்கிய பங்களிப்பும் உள்ளது. இன்றைய நாட்களில் மார்க்க போதனைகளை சரியான முறையில் அறியாததன் காரணமாகவும் புரியாததன் விளைவாகவும் மார்க்கத்தின் தோற்றுனர்களின் உண்மையான போதனைகளை முதுகுக்கு பின்னால் எறிந்து விட்டு பெயர் தாங்கி மார்க்க அறிஞர்களின் சுய கருத்துகள் மற்றும் சிந்தனைகளை கண்மூடித்தனமாக பின்பற்றுவதனால் பல்வேறு மார்க்கங்களை பின்பற்றுபவர்களுக்கு இடையில் வெறுப்புகளை பரப்பிக் கொண்டே செல்கிறார்கள். மேலும் மார்க்க சுதந்திரம் மற்றும் மத நல்லிணக்கம் அழிந்துவிட்டதால் மக்களின் அமைதி மற்றும் சமாதானம் எந்த அளவிற்கு சீர்குலைந்து விட்டது என்றால் மக்கள் மார்க்கத்தை வெறுத்து வெருண்டோடுகிறார்கள். மார்க்கத்துடன் இணைந்து இருக்கின்ற மக்களில் அதிகமானோர் சடங்கு சம்பிரதாயம் என்ற ரீதியிலேயே மார்க்கத்துடன் இணைந்து இருக்கின்றார்கள். மாறாக, அவர்களுக்கு தன் மார்க்கத்தின் சரியான போதனைகள் மற்றும் அடிப்படை கோட்பாடுகள் தொடர்பான எந்த ஒரு ஞானமும் இல்லை. இது தொடர்பாக இஸ்லாத்தின் அமைதி நிறைந்த போதனைகள் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியின் ஒளியினால் நிறைந்த ஒரு அத்தியாயம் உள்ளது. அதன் விளக்கத்தில் செல்வதற்கு தற்போது நேரம் இல்லை. சுருக்கமாக சிலவற்றை எடுத்துக் கூறுகின்றேன்.

திருக்குர்ஆனின் போதனை என்னவென்றால், அல்லாஹ் என்பவன் ரப்புல் ஆலமீனாக (அனைத்து உலகங்களுக்கும் இறைவனாக) இருக்கின்றான். மாறாக, அவன் ரப்புல் முஸ்லிமாக (முஸ்லிமாக இறைவனாக) மட்டும் இருக்கவில்லை. இதற்கான சான்று என்னவென்றால் எல்லாம் வல்ல அல்லாஹ் ஒவ்வொரு சமுதாயத்திலும் தன்னுடைய நேர்வழி காட்டி மற்றும் தூதரை அனுப்பியுள்ளான். அதனால் தான் எந்த மார்க்கமாக இருந்தாலும் சரி அதனுடைய உண்மை நிலையில் சில மாற்றங்கள் ஏற்பட்டு இருக்கலாம். ஆனால், முற்றிலும் அந்த மார்க்கம் சீர்குலைந்து விட்டது என்று கூற முடியாது.

அடுத்த போதனை என்னவென்றால் தன்னுடைய மார்க்கம் மற்றும் கோட்பாடுகளை பரப்புவதற்காக எவரையும் நிர்பந்திக்கவோ அல்லது போர் புரிவதோ ஒருபோதும் ஆகுமானது அல்ல. மார்க்கத்தில் எவ்வித பலவந்தமும் (ஆகுமானது) இல்லை என்பது திருக்குர்ஆனின் தெளிவான கட்டளை ஆகும். இவ்வாறு இருக்கும்போது இஸ்லாம் தன் மார்க்கத்தை வாளைக் கொண்டு பரப்புவதற்கான அனுமதி அளித்துள்ளது என்று அவதூறு மிகவும் தவறானதாகும். இஸ்லாமிய போர்கள் தற்காப்பு போர்களாகவே இருந்து குழப்பத்தையும் கலகத்தையும் அகற்றுவதற்காகவும் அமைதி மற்றும் பாதுகாப்பை நிலை நிறுத்துவதற்காகவும் செய்யப்பட்டன. எல்லாம் வல்ல அல்லாஹ் இந்த அவதூறை செயல் வடிவில் அகற்றுவதற்காக இக்காலத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஓர் உண்மை பேரன்பரான வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் உறுதி மொழி வழங்கப்பட்ட

மஹ்தியுமான ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி (அலை) அவர்களை வாளின்றி உலகில் அனுப்பினான். இதன் மூலம் அன்னார் மற்றும் அன்னாரின் கலீஃபாக்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மூலமாக இஸ்லாத்தை உலகில் பரவச் செய்து இஸ்லாம் தன்னுடைய அமைதி நிறைந்த போதனைகளின் மூலமாகவே உலகில் பரவ முடியும் என்றும் அதற்கு எந்த ஒரு வாளோ அல்லது போருக்கான அவசியமோ இல்லை என்றும் நிரூபிப்பதே அன்னாரின் வருகையின் நோக்கமாகும்.

எல்லாம் வல்ல அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை முழு உலகிற்கும் வழிகாட்டியாகவும், தூதராகவும் அனுப்பியுள்ளான். அந்தஸ்தின் அடிப்படையில் அன்னாரை காத்தமுன்னபிய்யீனாவும் அனுப்பியுள்ளான். அவ்வாறு இருந்தும் அன்னார் தன்னுடைய உம்மத்தை சார்ந்தவர் பிற நபிமார்களை விட தன்னை சிறந்தவராக கருதி அமைதியின் சூழலை சீர்குலைப்பதை ஒருபோதும் பொறுத்துக் கொண்டதில்லை. இது தொடர்பாக புகாரியில் ஓர் அறிவிப்பு வருகிறது:

யூதர் ஒருவர் (சந்தையில்) தம் பொருளை எடுத்துக் காட்டியபோது மிகக் குறைந்த விலை அவருக்கு கொடுக்கப்பட்டது. அதை அவர் விரும்பவில்லை. உடனே அவர், (நான் இதை வாங்கிக் கொள்ள) மாட்டேன்; மனிதர்கள் அனைவரையும் விட (சிறந்தவராக) மூஸாவைத் தேர்ந்தெடுத்தவன் மீது ஆணையாக! என்று கூறினார். இதைக் கேட்ட அந்த முஸ்லிமுக்கு கோபம் வந்து அந்த யூதரின் முகத்தில் அறைந்து விட்டார். உடனே அந்த யூதர், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்று, அபுல் காஸிம் அவர்களே! (என் உயிர்) உடைமை, மானத்தை பாதுகாப்பதாக) எனக்கு நீங்கள் பொறுப்பேற்று ஒப்பந்தம் செய்து தந்திருக்கின்றீர்கள். என் முகத்தில் அறைந்தவரின் நிலை என்ன? என்று கேட்டார். அதற்கு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அந்த முஸ்லிமை நோக்கி, நீ ஏன் இவரின் முகத்தில் அறைந்தாய்? என்றுக் கேட்டார்கள். அவர் விஷயத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கூறினார். உடனே, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முகத்தில் கோபக் குறி தென்படுகிற அளவிற்கு அவர்கள் கோபமடைந்தார்கள். பிறகு, அல்லாஹ்வின் நேசர்களுக்கிடையே (ஒருவர் மற்றவரை விடச் சிறப்பானவர் என்று) ஏற்றத் தாழ்வு பாராட்டாதீர்கள் என்று கூறினார்கள். (புகாரி)

எவ்வாறு இருப்பினும் இது உறுதியான மற்றும் தீர்க்கமான விஷயமாகும். அதாவது மனிதர்களில் தனிப்பட்ட மற்றும் சமுதாய அடிப்படையிலான பொறுமை மற்றும் சகிப்புத் தன்மையின் பண்பானது மிகுதியாக காணப்படாதவரை பிறருக்கு துன்பத்தை ஏற்படுத்தாமல் இருப்பது மற்றும் அமைதிக்கான சூழலை ஏற்படுத்துவதற்கான உணர்வு பிறக்காது. மேலும், ஒருவர் மற்றவருக்கு நன்மை பயக்கும் விதத்தில் தன்னுடைய சுயநலனை அர்ப்பணித்து தியாக மனப்பான்மையை வெளிப்படுத்துவதற்கான அந்த உணர்வும் தோன்றாது. அனைத்தையும் விட மிக முக்கியமான ஒன்று என்னவென்றால் எதுவரை நீதி மற்றும் நேர்மையை கையாளவில்லையோ அதுவரை வீட்டிலும் அமைதி நிலை பெற முடியாது. சுற்று வட்டாரத்திலும் அமைதியை நிலை பெறச் செய்ய முடியாது. நகரத்திலும் அமைதியை நிலை பெறச் செய்ய முடியாது. நாட்டிலும் அமைதியை நிலை பெறச் செய்ய முடியாது. சமுதாயங்களுக்கிடையிலும் அமைதியை நிலை பெற செய்ய முடியாது. இதற்காக இன்று இல்லை என்றால் நாளை நாளை இல்லை என்றால் நாளை, மறுநாள் உலகிற்கு கண்டிப்பாக இஸ்லாத்தின் அமைதி நிறைந்த போதனைகள் மற்றும் மனித குலத்தின் கருணையாளரான அனைத்து உலகிற்கும் அருட்கொடையாக வந்த ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களின் தூய அறிவுரைகள் மற்றும் அழகிய முன்மாதிரியை பின்பற்றியே ஆக வேண்டும். அவ்வாறு இஸ்லாமிய போதனைகளை பின்பற்றாமல் உலகம் அமைதி மற்றும் பாதுகாப்பிற்கான முகத்தை ஒருபோதும் காண முடியாது.

இந்தத் தூதுச் செய்தியை தான் நம்முடைய தற்போதைய இமாம் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் உலகில் உள்ள நாடாளுமன்றங்களிலும், பெரிய பெரிய நாட்டின் தலைவர்களுக்கும் எட்ட வைத்துக் கொண்டிருக்கின்றார்கள். மேலும், வாசல் அருகே வந்து நிற்பது மட்டும் அல்லாமல் சமுதாயங்கள் மற்றும் நாட்டிற்குள் புகுந்துவிட்ட அந்த உலகளாவிய அழிவிலிருந்தும் எச்சரிக்கை செய்கின்றார்கள். எனவே சில மாதங்களுக்கு முன்னர் ஜெர்மனியில் நடந்த அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஆண்டு மாநாட்டின் நிறைவுரையில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

அமைதி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த விஷயம் என்பதை நாம் பார்க்கின்றோம். புரிகின்றோம். அமைதிக்கான விஷயங்கள் பேசப்படுகின்றன. அமைதி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த விஷயம் ஆகும் என்று ஒவ்வொருவரும் கூறுகின்றார். மேலும் அமைதியின் நிலையில்தான் குடும்பத்தின் நிம்மதி மற்றும் சமாதானத்திற்கான உத்திரவாமும் ஆகும். மேலும் உலகளாவிய மட்டத்திலும் அமைதி மற்றும் சமாதானத்திற்கான உத்திரவாதம் ஆகும். எல்லா மட்டத்திலும் அமைதி நிலைபெற வேண்டும் என்று ஆசையும் கொள்ளகின்றனர். ஆனால், ஆசை கொள்வதால் மட்டும் அமைதி உருவாகி விட முடியாது. ஏனெனில், இங்கும் அமைதிக்கான ஆசை என்பது சுயநலம் கொண்டதாக இருக்கின்றது. உலகில் நாம் இதையே பார்க்கின்றோம்.

சுயநலம் இல்லாவிட்டால், சண்டையே நடக்க முடியாது. பொதுவாக ஒருவர் அமைதிக்கான விஷயத்தை பேசுகின்றார் என்றால் அமைதிக்கான ஆசை தமக்கானதாக இருக்கின்றது. இன்னும்கூறப்போனால், பொதுவாக மனிதன் துஆ செய்கின்றபோதும், ஒருவேளை துஆ செய்யவில்லை-யென்றாலும் கூட மனிதன் இவ்வாறே கூறுகின்றான். அதாவது சில முறை விருப்பத்தின் வெளிப்பாடு நாவிலும் வந்துவிடுகின்றது. அல்லாஹ் என்னையும், எனது மனைவி மக்களையும் எனது உறவினர்களையும் பாதுகாப்பாக வைப்பானாக என்று மனிதன் கூறுகின்றான். மற்றவர்கள் பாதுகாப்பாக இருப்பதற்காக இந்த வேதனை இருப்பதில்லை அல்லது மனிதன் தனது வாழ்க்கையை நிம்மதியாக கழிப்பதற்காக செல்வத்தை விரும்புகின்றான். மேலும், அதனை நல்லதாக கருதுகின்றான். அதன் பொருள் அவர் எதிரிக்காகவும் செல்வத்தை நல்லதாக கருதுகின்றான் என்பது அல்ல. இன்னும் கூறப்போனால், செல்வம் தமக்கு மட்டுமே இருக்க வேண்டும் என்று கருதுகின்றார். உடல் ஆரோக்கியத்தை நல்லதாக கருதுகின்றார் என்றால், அவர் தனது எதிரிக்காகவும் நல்ல உடல் ஆரோக்கியத்தை விரும்புகின்றார் என்பது அதன் பொருள் அல்ல. எதிரி அழிந்து விடவேண்டும். மேலும் தனக்கு அந்த எதிரி மீது மேன்மை கிடைத்து கொண்டிருக்க எதிரி பலவீனமடைந்து விட வேண்டும் என்றே அவர் எதிரிக்காக விரும்புகின்றார். அதேபோன்று கண்ணியம் மற்றும் அந்தஸ்தை மக்கள் விரும்புகின்றனர் என்றால் தமக்காகவே விரும்புகின்றனர். எல்லாருக்காவும் விரும்புவதில்லை. தமக்கு கிடைக்கும் கண்ணியமும் அந்தஸ்தும் மற்றவர்களுக்கும் கிடைக்க வேண்டும் என்று அவர்கள் ஒருபோதும் விரும்பமாட்டார்கள். பொது மக்களிடமும், தலைவர்களிடமும் இந்தக் காட்சிகளே உலகில் நமக்கு காணக் கிடைக்கின்றன. அரசியல்வாதிகளுக்கிடையிலான பரஸ்பர சண்டைகளும், அதிகாரத்திற்கு வருவதற்காக ஒருவர் மற்றவர் மீது இழைக்கும் அநீதிகளையும் நாம் நமது நாட்டிலேயே பார்த்துக் கொண்டிருக்கின்றோம். ஒருவர் மற்றவர் மீது என்ன செய்து கொண்டு இருக்கின்றார்களோ அது இதே சிந்தனையின் விளைவாகும். எனவே அமைதிக்கான விருப்பம் மட்டுமே இருக்கின்றதென்றால் பின்னர் அது குழப்பத்திற்கான வழிமுறையாக இருக்கும். ஏனெனில், அதில் சுயநலமே அடங்கியுள்ளது. ஏனெனில், எந்த மக்கள் அமைதியை விரும்புகின்றார்களோ அவர்கள் இந்த வடிவில் அமைதியை விரும்புகின்றனர். அதாவது அவர்கள் தங்களுக்கும், தங்களது உறவினர்களுக்கும் அல்லது தமது சமுதாயத்திற்கும் மட்டுமே அமைதி கிடைத்து கொண்டிருக்க வேண்டும் என்று விரும்புகின்றனர். ஏனெனில் அவர்கள் மற்றவர்களுக்காவும் எதிரிகளுக்காகவும் அவர்கள் இதனையே விரும்புகின்றனர். அதாவது அவர்களின் அமைதியை அழித்து விட வேண்டும் என்றே விரும்புகின்றனர். எனவே தங்களுக்கு ஒரு அளவுகோலும் மற்றவர்களுக்கு வேறோர் அளவு கோலும் என்ற விதிமுறை உலகில் செயல்படுத்தப்பட்டால் பின்னர் உலகில் நிலைபெறும் அமைதி என்பது சில மக்களுக்கான அமைதியாக இருக்கும். முழு உலகத்திற்குமான அமைதியாக இருக்காது. எது முழு உலகத்திற்குமான அமைதியாக இருக்காதோ அது உண்மையான அமைதி என்று கூறப்பட முடியாது. தனிப்பட்ட, குடும்பம், இனம், சமுதாயம் மற்றும் நாட்டின் முன்னுரிமைகளுக்கு அப்பாற்பட்டு அமைதியை நிலைநாட்டுவதற்கு முயற்சி செய்யப்படுவதே உண்மையான அமைதியாக இருக்கும். தனக்கு மேல் ஓர் உயர்ந்த இருப்பு உள்ளது. அது எனக்காக மட்டும் அமைதியை விரும்புவதில்லை. மாறாக, முழு உலகிற்கும் அமைதியை விரும்புகின்றது. அது எனது குடும்பம் மற்றும் நாட்டிற்காக மட்டும் அமைதியை விரும்புவதில்லை. மாறாக, அனைத்து நாடுகளுக்காகவும் அமைதியை விரும்புகின்றது என்ற விஷயத்தை மனிதன் புரிந்து புரிந்து கொள்ளும்போதும் அதன் புரிதலையும், ஞானத்தையும் உருவாக்கிக் கொள்ளும்போதும் தான் உண்மையான அமைதி நிலைபெறமுடியும். எனவே ஓர் இருப்பு என்னை பார்த்துக் கொண்டிருக்கின்றது. அந்த இறைவனுக்காக நான் எனது சொல்லையும், செயலையும் ஒன்றாக்கிக் கொள்ள வேண்டும் என்ற விஷயமே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அமைதிக்கான போதனையின் மையப்புள்ளி ஆகும். எப்போதும் அந்த விதிமுறையின்படி நடப்பதற்கு, ஒருவர் தமக்காக எதை விரும்புகின்றாரோ அதையே மற்றவர்களுக்காகவும் விரும்ப வேண்டும் என்ற ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பொன்னான விதிமுறையை கருத்தில் கொள்ள வேண்டும்.

எனவே இந்த போதனையை கருத்தில் கொண்டவாறு எப்போதும் இந்த சிந்தனை இருக்க வேண்டும். அதாவது, ஒருவேளை நான் எனக்காக மட்டுமோ அல்லது எனது சமுதாயத்திற்காக அல்லது எனது நாட்டிற்காக மட்டுமோ அமைதி நிலை பெற வேண்டும் என்று விருப்பம் கொண்டால் பின்னர் அந்நிலையில் எனக்கு இறைவனின் உதவியும் அவனது ஆதரவும் அவனது திருப்தியும் ஒருபோதும் கிடைக்க முடியாது என்ற எண்ணம் இருக்க வேண்டும்.

அல்லாஹ்விற்காகவே எல்லாவற்றையும் செய்ய வேண்டும் என்ற கொள்கையில் மனிதன் நிலைபெற்றுவிடும்போதுதான் உண்மையான அமைதி நிலை பெற முடியும். இல்லையென்றால் முடியாது.

எனவே, உங்களது இம்மையையும், மறுமையையும் சீர்படுத்த வேண்டும் என்றால், மேலும் அமைதியுடனும், நிம்மதியுடனும் வாழ வேண்டும் என்றால், பின்னர் நாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது இறங்கிய அல்லாஹ்வின் அந்த வேதத்தை கருத்தில் கொள்ள வேண்டும். அந்த வேதம் கூறுகின்றது:

يَّهۡدِیۡ بِهِ اللّٰهُ مَنِ اتَّبَعَ رِضۡوَانَهٗ سُبُلَ السَّلٰمِ

பொருள்: அந்த ஒளிமயமான வேதத்தின் வழிகாட்டல்களை எப்போதும் உங்கள் கருத்தில் கொள்ளுங்கள். அந்த ஒளிமயமான வேதத்தின் வழிகாட்டலை ஓதுங்கள். மேலும் அதனை உங்கள் கருத்தில் கொள்ள வேண்டும். அப்போதுதான் அமைதியின் வழியில் செல்லக்கூடியவர்களாக நீங்கள் திகழ்வீர்கள்.

மனிதகுலத்தின் அமைதியை சீர்குலைக்கக்கூடிய எந்தவொரு போதனையும் அந்த வேதத்தில் இல்லை. எனவே இதுவே தூதுச் செய்தியாகும். இதனை நம்மவர்களுக்கும், அந்நியர்களுக்கும் எட்ட வைப்பது நமது பணியாகும். இன்று இதுவே உலகின் அமைதிக்கான உத்திரவாதம் ஆகும்.

இன்று இந்தப் பணி வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஜமாஅத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வீடுகளிலிருந்து சர்வதேச அளவு வரை நாமும் அதற்கேற்ப செயல்படவில்லையென்றால் பின்னர் நாம் அமைதியுடனும், பாதுகாப்புடனும் வசிப்பதற்கு எந்த உத்திரவாதமும் இல்லை. நமது சந்ததிகள் அமைதி மற்றும் பாதுகாப்புடன் வசிப்பதற்கும் எந்த உத்திரவாதமும் இல்லை. மேலும் உலகின் அமைதி மற்றும் பாதுகாப்பிற்கும் எந்த உத்திரவாதமும் இல்லை. அல்லாஹ் நம்மை இருள்களிலிருந்து ஒளியின் பக்கம் கொண்டு செல்வதற்கான வழிமுறையாக நம்மை ஆக்குவானாக. அல்லாஹ் அழகிய முறையில் நமது கடமைகளை நிறைவேற்றுவதற்கான நற்பேறை நமக்கு வழங்குவானாக.

(ஜெர்மனியில் நடைபெற்ற ஆண்டு மாநாட்டின் நிறைவுரை - 2022)

தமிழாக்கம் :
மவ்லவி அபுல்ஹஸன் ஆபித்

* * * * *

## 24-ம் பக்கத்தொடர்ச்சி...

மதீனாவை நோக்கிய ஹிஜ்ரத்தின் சந்தர்ப்பத்திலும் மேலும், அன்னாரது மரணத்தின் சந்தர்ப்பத்திலும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் அவர்களுடனான தொடர்பு ஆழ்ந்த நேசரைப் போன்றே இருந்தது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மீது அந்நஸ்ர் என்ற அதிகாரம் இறங்கிய போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஸஹாபிகளை நோக்கி அல்லாஹ் தனது ஓர் அடியானுக்கு தனது நேசம் மற்றும் பௌதீக முன்னேற்றம் ஆகியவற்றுள் ஒன்றிற்கான அனுமதி வழங்கியிருக்கின்றான். மேலும் நான் இறைவனது நேசத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளேன் என்று கூறினார்கள். அனைத்து நபித் தோழர்களும் இது கேட்டு மகிழ்ச்சி அடைந்தார்கள். ஆனால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு அழுகை வந்துவிட்டது. மேலும், அன்னார் (ரலி) நிம்மதி இழந்து அழ ஆரம்பித்தார்கள். மேலும், இறைத் தூதர் (ஸல்) அவர்கள் தங்கள் மீது எங்களது தாய் தந்தையார் மனைவி மக்கள் அனைவரும் அர்ப்பணம் ஆவர். தங்களுக்காக நாங்கள் எல்லாப் பொருட்களையும் தியாகம் செய்ய தயாராக இருக்கின்றோ என்று கூறினார்கள். நெருக்கத்திற்குரிய ஒருவர் நோய்வாய்ப்பட்டதும் அவருக்காக ஆடு அறுக்கப்படுகிறது. அதேபோன்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தமது மற்றும் தமக்கு நெருக்கமான அனைவரது குர்பானியையும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்காக வழங்கிவிட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் முதற்கொண்டு அனைத்து ஸஹாபிகளுக்கும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இவ்வாறு அழுவதை பார்த்து வியப்படைந்தார்கள். அப்போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அபூபக்ர் (ரலி) எனக்கு எவ்வளவு நேசத்திற்குரியவர் என்றால் ஒருவேளை இறைவனை அன்றி வேற யாரையும் நண்பனாக ஆக்குவது ஆகுமானதாக இருந்தால் நான் அவரை நண்பராக ஆக்கி இருப்போன். ஆனால், இப்போதும் இவர் எனது நண்பனாவார் என்று கூறினார்கள். அடுத்து, நான் ஆணையிடுகின்றேன்: இன்றிலிருந்து பள்ளிவாயிலில் திறக்கின்ற அனைத்து மக்களது ஜன்னல்களும் மூடப்பட வேண்டும். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களது ஜன்னலை தவிர என்று கூறினார்கள். இவ்வாறாக, அன்னார் (ஸல்) தம் மீதான ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களது அன்பை பாராட்டினார்கள். ஏனெனில், அந்த முழுநேசம் முழுமையானதாக இருந்தது. அதுவே அவர்களுக்கு இந்த வெற்றியின் செய்திக்கு பின்னால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது மரணத்தின் செய்தி உள்ளது என்று கூறியது. மேலும், அன்னார் (ரலி) தமது மற்றும் தமது நேசத்திற்குரியவர்களின் உயிரை அர்ப்பணித்து விட்டார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்; நபிமொழிகளில் வருகின்றது. ஒருமுறை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி)ஆகியோருக்கு இடையில் ஒரு விஷயத்தில் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. மேலும், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களோ, மேற்கொண்டு சண்டை பெரிதாகிவிடும் என்ற காரணத்தால் அங்கிருந்து செல்லத் தொடங்கிவிட்டார்கள். இதனால், என் விஷயத்திற்கு பதில் தாருங்கள் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களது மேலங்கியை பிடித்துக் கொண்டார்கள். அதனால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களது மேலங்கி கிழிந்து விட்டது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடத்தில் சென்று தமது தவறை ஒப்புக் கொண்டார்கள். அதற்கு முழு உலகமும் என்னை மறுத்து வந்த நேரத்தில் அபூபக்ர் (ரலி) என் மீது ஈமான் கொண்டார்கள். மேலும் எல்லா விதத்திலும் எனக்கு உதவி புரிந்தார்கள் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

அதேநேரத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் வந்தடைந்தார்கள். மேலும், ஹஸ்ரத் இறைத் தூதர் (ஸல்) அவர்களது கோபத்தைக் கண்டு தமது தவறை ஒப்புக் கொள்ள முனைந்தார்கள். இதுவே ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களது நேசமாக இருந்தது. மேலும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வேதனையை தாங்கிக் கொள்ள முடியாதவர்களாக இருந்தார்கள்.

செவியேற்பவர்களே! ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் அனைத்து போர்களிலும் கலந்து கொண்டார்கள். எந்தப் போரும் அன்னாரிடமிருந்து விடுபடவில்லை. மேலும் உஹது தினத்தன்று எல்லா மக்களும் ஓடிவிட்டார்கள். அன்னார் (ரலி) ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் நிலைத்து நின்றார்கள். மேலும் தபூக்கின் சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமது பெரிய கொடியை அன்னாரிடம் வழங்கினார்கள். தூதுத்துவத்தின் ஆரம்பத்தில் இருந்து ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது மரணம் வரை உயிரினும் மேலான நட்பைக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது இந்த தொண்டுகள் மற்றும் தியாகங்கள் எந்த அளவிற்கு தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தன என்றால் உயிர் மற்றும் பொருள் அளவில் என் மீது அபூபக்ர் (ரலி) அவர்களை விட வேறெவரும் பேருபகாரம் செய்யவில்லை என்று கூறுகின்றார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது மரணத்திற்குப் பிறகு சிதறுண்ட சமுதாயத்தை கட்டுக்குள் கொண்டு வரும் பணியையும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களே செய்தார்கள். அன்னார் (ரலி) அவர்கள் குழப்பங்களை சீர் செய்தார்கள். சிதறுண்டவர்களை ஒன்றிணைத்தார்கள். கோணலானவர்களை நேராக்கினார்கள். (தாரிகுல் குலஃபா- பக்கம் 51- 52)

அன்னாரது கிலாஃபத் காலகட்டத்திலேயே இஸ்லாம் அரேபியாவின் பெரும், பெரும் அரசாங்கங்களின் கண்காணிப்பாளராக ஆக்கப்பட்டுவிட்டது. சிரியாவின் வெற்றிகளாக இருக்கட்டும்; ஈரானின் வெற்றிகளாக இருக்கட்டும்; அல்லது மார்க்கப் புறக்கணிப்பு கொள்கையின் மேலோங்கும் ஓசையின் முடிவாக இருக்கட்டும்; திருக்குர்ஆனை ஒன்று திரட்டும் மாபெரும் பணியாக இருக்கட்டும். இவ்வனைத்து பணிகளும் அன்னாரது கிலாஃபத் காலகட்டத்திலேயே நடந்தது.

செவியேற்பவர்களே! அந்த அன்பின் வடிவம் தமது அனைத்தையும் அல்லாஹ் மற்றும் அவனது தூதர் (ஸல்) மீது அர்ப்பணித்த பிறகு தமது இறைவனை திருப்திபடுத்தியவாறு கிலாஃபத்தின் இரண்டேகால் வருடங்களுக்குப் பிறகு தமது நேசரை சென்று சேர்ந்தது.

اِنَّا لِلّٰهِ وَاِنَّاۤ اِلَيۡهِ رٰجِعُوۡنَ

(தொடரும்.........)

ஆக்கம் : மவ்லவி ஃபிரோஸ் அஹ்மத் நதீம்
அமீர் ஜமாஅத், டெல்லி.
தமிழாக்கம்: மவ்லவி: சுல்தான் முஹய்யிதீன்

## உலகத்திற்கு சுதந்திரம் வழங்கக் கூடியவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்

(ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள்)

### உலகத்திற்கு சுதந்திரம் வழங்கக்கூடியவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்

அல்ஃபஸ்ல் பத்திரிகையின் சிறப்பிதழிற்காக கட்டுரை எழுதுமாறு நான் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய உயர்ந்த அந்தஸ்தையும், மேலான கண்ணியத்தையும் வெளிப்படுத்துவதற்காக வெளியிடக் கூடிய இந்த சிறப்பிதழிற்காக கட்டுரை எழுதுவது நற்கூலிக்கான பணியாகும் என்று நான் கருதுகின்றேன். இன்றைய நாட்களில் எனக்கு மிகவும் வேலைப் பளு உள்ளது. மேலும் நான் நோய்வாய்ப்பட்டிருக்கின்றேன். இவ்வாறு இருந்த பிறகும் ஒரு சிறு கட்டுரை எழுதுவது அவசியம் என நான் நினைக்கின்றேன்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சமும் எதனை எடுத்துரைப்பது எதனை விடுவது என்ற அளவிற்கு மிகவும் அற்புதமானதாகும். மேலும் தேர்ந்தெடுக்கக் கூடிய கண்கள் பிரமிப்பில் உறைந்து விடும். ஆனால், நான் இக்காலத்தின் அவசியத்தைக் கருத்தில் கொண்டவாறு என்னுடைய கட்டுரைக்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கையின் மிகச் சிறந்த அம்சத்தை எடுத்துரைக்கின்றேன். அதாவது, உலகத்தின் கழுத்தில் பின்னப்பட்டிருந்த பெண்களின் அடிமைத்தனத்திலிருந்து உலகை அன்னார் (ஸல்) எவ்வாறு விடுவித்தார்கள் என்று பார்ப்போம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வருகைக்கு முன்னர் பெண்கள் எல்லா நாட்டிலும் அடிமைகளாகவும், சொத்துகளாகவும் இருந்தனர். அவர்களின் அடிமைத்தனம் ஆண்களையும் பாதிக்காமல் இருக்கவில்லை. ஏனென்றால், அடிமைப் பெண்களின் பிள்ளைகள் முழுமையாக சுதந்திரமானவர்களாக இருக்க முடியவில்லை.

ஒரு பெண் தன்னுடைய அழகு அல்லது நல்ல குணத்தின் ஆதிக்கத்தால் சில ஆண்கள் மீது ஆதிக்கம் செலுத்தி வந்துள்ளார் என்பதில் சந்கேமில்லை. இந்த சுதந்திரம் என்பது முழுமையான சுதந்திரம் கிடையாது. ஏனெனில், அது ஓர் உரிமையாகப் பெறப்படவில்லை. மாறாக, ஒரு விதிவிலக்காகப் பெறப்பட்டது. மேலும், அத்தகைய விதிவிலக்கு சுதந்திரம் ஒருபோதும் சரியான உணர்வுகளை உருவாக்க வழிவகுக்காது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இன்றிலிருந்து 1350 வருடத்திற்கு முன்பு அனுப்பப்பட்டார்கள். அதுவரை எந்த மதத்திலும், சமுதாயத்திலும் பெண்கள் எதையும் உரிமையாக பயன்படுத்தக் கூடிய சுதந்திரம் இருக்கவில்லை. சட்டம் இல்லாத எல்லா வகையான கட்டுப்பாடுகளிலிருந்தும் விடுபட்ட சில நாடுகளும் இருந்தன என்பதில் சந்தேகமில்லை. ஆனால், அது சுதந்திரம் அல்ல.

சுதந்திரம் என்பது கலாச்சாரம் மற்றும் நாகரீகத்தின் விதிகளை கொண்டுள்ள இடத்திலிருந்து பெறப்படுகிறது. இந்த விதிகள் இல்லாத நிலைமைகளை சுதந்திரம் என்று அழைக்க முடியாது. ஏனெனில், அது உயர்ந்த தைரியத்தை உருவாக்காது. மாறாக, குறைந்த தைரியத்தை உருவாக்குகின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய காலத்திலும் அதற்கு முன்னரும் பெண்ணின் நிலைமை எவ்வாறு இருந்தது என்றால் அவள் தன்னுடைய சொத்துகளுக்கு உரிமையாளராக இருந்ததில்லை. அவளுடைய கணவரே அவளுடைய சொத்துக்கு உரிமையாளர். அவளுடைய தந்தையின் சொத்தில் இருந்து அவளுக்கு எந்தப் பங்கும் கொடுக்கப்படாமல் இருந்தது. அவள் அவளுடைய கணவரின் சொத்திற்கும் வாரிசாக கருதப்படாமல் இருந்தாள். அவள் ஓர் ஆண் மகனை மணக்கும்போது நிரந்தரமாக அவனுடையதாகவே ஆக்கப்பட்டு எந்த சூழ்நிலையிலும் அவனை விட்டு தனியாக பிரிய முடியாதவளாக ஆகிவிடுவாள். அவளுடைய கணவருக்கு அவளை விட்டு பிரிய அதிகாரம் இருந்தது. ஆனால், எந்த அளவு இன்னல்கள் இருந்தாலும் அவள் அவனை விட்டு பிரிய எந்த உரிமையும் பெற்று இருக்கவில்லை. கணவர் அவளை கைவிட்டு விட்டால் அவளுடன் தொடர்பு வைக்கவில்லை என்றால் அல்லது எங்கேயாவது ஓடிவிட்டால் இவளுடைய உரிமைகளை பாதுகாக்க எந்த சட்டமும் இயற்றப்பட்டிருக்கவில்லை. மாறாக, தன்னையும் தன்னுடைய பிள்ளைகளையும் வளர்ப்பது அவளுடைய கடமையாக கருதப்பட்டு வந்தது. கணவர் அவளிடம் வெறுப்புக் கொண்டு அவளை அடித்தால் அவனுக்கு எதிராக குரல் எழுப்ப இயலாது. இது கணவருடைய உரிமையாகக் கருதப்பட்டு வந்தது. சில நாடுகளில் கணவன் இறந்துவிட்டால் அவள் கணவனின் உறவினர்களின் சொத்தாகக் கருதப்பட்டாள். அவர்கள் அவளைத் தங்களுக்கு விருப்பமானவருக்கு வெகுமதியாகவோ அல்லது விலைக்கு விற்றோ திருமணம் செய்து வைத்து விடுவார்கள். இன்னும் சொல்வதாயின், சில இடங்களில் அவள் கணவரின் சொத்தாக கருதப்பட்டு வந்தாள். சில கணவன்மார்கள் தங்களுடைய மனைவிகளை விற்று விடுவார்கள் அல்லது சூதாட்டத்தில் அல்லது பந்தயங்களில் இழந்து விடுவார்கள். முற்றிலுமாக ஆணுடைய ஆதிக்கத்தின் கீழ் உள்ளவளாக பெண் கருதப்பட்டு வந்தாள். கணவருடன் இருக்கும் பொழுதும், அவனை விட்டு பிரிந்து விட்ட நிலையிலும் பெண்களுக்கு தங்களுடைய பிள்ளைகளின் மீது எந்த அதிகாரமும் இருக்காது. மேலும், மார்க்க விஷயத்திலும் அவளுக்கு எந்த அதிகாரமும் கிடையாது என்றே கருதப்பட்டு வந்தது. நிரந்தரமான அருள்களில் அவளுக்கு எந்தப் பங்கும் இல்லை. இதன் விளைவு பெண்களின் சொத்தில் ஆதிக்கம் கொண்ட கணவர் ஒருபோதும் இவ்விவகாரத்தில் ஒப்புதல் அளிப்பதில்லை. மிகவும் ஆழமான மற்றும் அன்பான உறவைக் கொண்ட பெற்றோரின் செல்வத்திலிருந்து அவள் இழப்பிற்கு உள்ளாக்கப்பட்டாள். மாறாக, ஆண் பிள்ளைகள் பெற்றோர்களின் அன்பிற்கு உரிமையைப் பெற்றிருப்பது போன்று பெண் பிள்ளைகளும் பெற்றிருக்கின்றார்கள். பெற்றோர்கள் தங்களுடைய வாழ்நாளில் பெண் பிள்ளைகளின் பலவீனத்தைக் கண்டு ஏதேனும் கொடுத்து விட்டால் அவர்களுடைய குடும்பத்தில் மிகப் பெரிய குழப்பம் ஏற்பட்டு விடும். ஏனெனில், ஆண் பிள்ளைகள் பெற்றோர்கள் மரணித்த பிறகு பெற்றோர்களுடைய அனைத்து சொத்துகளுக்கும் அவர்களே வாரிசாவார்கள் என்று யோசிப்பதில்லை. மாறாக, தங்களுடைய பெற்றோர்கள் தங்களை விட பெண் பிள்கைளுக்கு அதிகமாக கொடுக்கின்றார்கள் என்று உணர்கின்றார்கள். இவ்வாறே பரிபூரணமான உறவைக் கொண்ட கணவனின் சொத்துகளிலிருந்தும் மனைவி இழப்பிற்குரியவளாக ஆக்கப்பட்டாள். கணவனின் தூரத்து உறவினர்கள் அவனுடைய சொத்துகளுக்கு வாரிசுகளானார்கள். ஆனால், அவனுடைய தோழியும் வாழ்நாள் முழுவதும் உடனிருக்கக் கூடிய மற்றும் அவனுடைய உழைப்பிலும், சம்பாத்தியத்திலும் அதிக உரிமை கொண்டுள்ள அந்தப் பெண் அவனுடைய சொத்திலிருந்து

இழப்பிற்குரியவளாக ஆக்கப்பட்டாள். அவ்வாறில்லையென்றால், அவள் தனது கணவரின் அனைத்து சொத்துக்களுக்கும் பாதுகாவலராக ஆக்கப்பட்டாள். ஆனால், அவள் அதன் எந்தப் பகுதியையும் தனது உடைமையாக ஆக்கிக் கொள்ள முடியாது. கணவருடைய வருமானத்தை செலவிட முடியும். ஆனால், அதன் எந்தப் பகுதியையும் பயன்படுத்த முடியாது. இவ்வாறே தங்கள் விருப்பப்படி அதிக ஸதகா செய்வதிலிருந்தும் அவள் இழப்பிற்குரியவளாக ஆக்கப்பட்டாள். கணவன் அவள் மீது எவ்வகையான அநீதி இழைத்தாலும் அவள் அவனிடமிருந்து விலக முடியாமல் இருந்தது. ஏனெனில், எந்த சமுதாயத்தில் விலக முடியுமோ அங்கு நிபந்தனைகள் இருந்தன. பல உன்னதமான பெண்கள் இந்தப் பிரிவைக் காட்டிலும் மரணத்திற்கே முக்கியத்துவம் அளித்தார்கள்.

உதாரணத்திற்கு நிபந்தனை என்னவாக இருந்தது? என்றால் கணவன் அல்லது மனைவியினுடைய தீய நடத்தை நிரூபணமாகிவிட்டால் அத்துடன் அநீதியும் நிரூபணமாகிவிட்டால் மேலும், கொடுமையான விஷயம் என்னவென்றால், பல சமயங்களில் ஒரு பெண் தன் கணவனுடன் சேர்ந்து வாழ முடியாவிட்டால் முழுமையான பிரிவிற்குப் பதிலாக தனத்தனியாக இருப்பதற்கான உரிமை மட்டுமே வழங்கப்பட்டிருந்தது. அதுவும் ஒரு தண்டனையாகும். ஏனெனில், இந்த வழியில் அவள் தன் வாழ்க்கையை இலக்கின்றி வாழ நிர்பந்திக்கப்பட்டாள் அல்லது கணவன் எப்போது வேண்டுமானாலும் பெண்ணைப் பிரியலாம். ஆனால், அந்தப் பெண்ணிற்கு பிரிந்து செல்லக் கோரும் அதிகாரம் கிடையாது. கணவன் அவளை தனியாக விட்டுச் சென்றாலோ அவளின் நலன் கருதாமல் இருந்தாலோ வாழ்நாள் முழுவதும் அவனுக்காக காத்திருக்க அவள் நிர்பந்தத்திற்கு ஆளாக்கப்பட்டாள்.

மேலும், அவள் தன்னுடைய வாழ்வை நாட்டிற்கோ அல்லது சமுதாயத்திற்கோ பயனுள்ளதாக கழிப்பதற்கு அவளுக்கு அதிகாரம் இருந்ததில்லை. திருமண வாழ்க்கை சுகபோகங்களுக்கு பகரமாக அவளுக்கு துன்பமாக அமைந்து விடுகின்றன. கணவன் மற்றும் மனைவி ஆகிய இருவருடைய பணிகளை செய்வதே அவளுடைய பணியாக இருந்தது. மேலும், கணவனுக்காக காத்திருக்கவும் வேண்டும். கணவனின் கடமையான வீட்டுச் செலவிற்காக சம்பாதிப்பதும் அவளுடைய பொறுப்பாகவே இருந்தது. பெண்களின் கடமையான குழந்தைகளைக் கண்காணிப்பதும் அவர்களை வளர்க்கும் பொறுப்பும் அவளிடமே இருந்தது. ஒருபுறம் மனவலி, மற்றொரு புறம் உடல் சார்ந்த பொறுப்புகளும் சுமத்தப்பட்டன.

பெண்களை அடிப்பதும், உதைப்பதும் கணவனுடைய முறையான உரிமை என்று கருதப்பட்டு வந்தது. கணவன் மரணித்த பிறகு மனைவிகளை பலவந்தமாக கணவனின் உறவுக்காரர்களுடன் திருமணம் நடத்தி வைக்கப்பட்டது அல்லது ஒரு நபரிடம் தொகை பெற்று விற்கப்பட்டு வந்தாள். இன்னும்சொல்வதாயின், கணவன்மார்கள் தங்களுடைய மனைவிகளை விற்று வந்தார்கள். பாண்டு போன்ற பேரரசர்கள் தங்களுடைய மனைவியை சூதாட்டத்தில் தோற்று விட்டார்கள். மேலும், நாட்டின் சட்டத்திற்கு முன்னால் திரௌபதி போன்ற ஒழுக்கமான அரசியால் கூட எதுவும் பேச முடியவில்லை.

குழந்தைகளின் கல்வியில் மற்றும் வளர்ப்பில் தாய்மார்களுடைய கருத்து ஏற்கப்படவில்லை. குழந்தைகள் மீது அவர்களுக்கு எந்த உரிமையும் இருந்ததில்லை. கணவன் மனைவியைப் பிரிந்துவிட்டால் குழந்தைகள் தந்தையிடமே ஒப்படைக்கப்பட்டு வந்தனர். பெண்கள் கணவனுடன் இருக்கும்பொழுதும் சரி; அதற்குப் பிறகும் சரி; பெண்களுக்கு தமது வீட்டாருடன் எந்த தொடர்பும் இருக்கக் கூடாது என்று கருதப்பட்டு வந்தது. கணவன் விரும்பும்பொழுது அவளை வீட்டை விட்டு வெளியேற்றி வந்தான். அவளோ தங்குமிடமின்றி அங்கும், இங்கும் திரிந்து வந்தாள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலம் இந்த அனைத்து அநீதிகளுக்கும் முடிவு கட்டப்பட்டன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பெண்களின் உரிமைகளை சிறப்பாக கவனிக்கும் பொறுப்பை இறைவன் என்னிடம் ஒப்படைத்துள்ளான் என்று கூறினார்கள். மேலும் கூறினார்கள்: ஆண்களும், பெண்களும் மனிதநேயத்தின் அடிப்படையில் சமமானவர்கள் என்றும், அவர்கள் ஒன்றாகச் செயல்படும்போது ஆண்களுக்கு பெண்கள் மீது சில உரிமைகள் இருப்பதைப் போன்று ஆண்களின் மீது பெண்களுக்கும் சில உரிமைகள் உள்ளன என்பதை எல்லாம் வல்ல இறைவனின் சார்பாக நான் அறிவிக்கின்றேன். ஓர் ஆண் சொத்திற்கு உரிமையாளராக இருப்பதைப் போன்று பெண்ணும் தனது சொத்திற்கு உரிமையாளராக இருக்க முடியும். மேலும் பெண் தனது சொத்தை தனது விருப்பத்துடன் அவனுக்கு அன்பளிப்பாகக் கொடுக்காத வரை கணவனுக்கு அதைப் பயன்படுத்த உரிமை கிடையாது. அவளிடமிருந்து பணத்தை வலுக்கட்டாயமாக (திருப்பி) வாங்கிக் கொள்வது அல்லது நாணத்தால் பெண் மறுக்க முடியாமல் இருக்கின்றாளோ என்ற ஐயம் இருக்கும்போது ஆகிய நிலைகளில் வாங்கிக் கொள்வது சரியானதல்ல. ஆண் ஒன்றை பெண்ணிற்கு அன்பளிப்பாகக் கொடுத்துவிட்டால் பின்னர் அது அவளுடைய செல்வமாகும். அதனை கணவன் திரும்ப வாங்கிக் கொள்ள இயலாது.

எவ்வாறு ஆண் பிள்ளைகள் பெற்றோரின் சொத்திற்கு வாரிசாவார்களோ அவ்வாறே மகள்களும் தனது பெற்றோரின் சொத்துக்கு வாரிசாவார்கள். குடும்ப பொறுப்புகள் ஆண்கள் மீது இருப்பதனாலும், பெண்ணிற்கு சொந்த சுமை மட்டுமே இருப்பதனாலும் அவளுக்கு ஆணை விட பாதிப் பங்குதான் கிடைக்கும். தந்தை தனது மகனின் சொத்திலிருந்து பங்கு பெறுவதைப் போல தாயும் பங்கு பெறுகின்றாள். இருப்பினும் வெவ்வேறான சூழ்நிலைகள் மற்றும் பொறுப்புகளைப் பொறுத்து சில நேரங்களில் அவர் தந்தைக்கு சமமான பங்கையும், சிலநேரங்களில் குறைவாகவும் பெறுவார். அவளுடைய கணவன் இறந்து விட்டால் அவள் பிறரைச் சார்ந்து இருக்கக் கூடாது என்பதற்காக அவளுக்கு குழந்தை இருந்தாலும், இல்லாவிட்டாலும் கணவனின் சொத்திற்கு வாரிசாவாள். அவருடைய திருமணம் நிச்சயமாக ஒரு தூய மற்றும் புனிதமான உடன்படிகையினால் ஆகும். ஆணும், பெண்ணும் ஒருவருக்கொருவர் தீவிரமான நேர்மையற்றத் தன்மையை உருவாக்கி அதை முறிப்பது மிகவும் வெட்கத்திற்குரிய விஷயமாகும். ஆனால், ஆண் மற்றும் பெண்ணின் இயல்பில் ஆபத்தான வேறுபாடு இருப்பின் அல்லது மத, உடல், நிதி, கலாச்சார மற்றும் உடல்ரீதியான சிரமங்கள் இருப்பின் இந்த உடன்படிக்கைகாக அவர்கள் தங்கள் வாழ்க்கையை வீணாக்கி பிறப்பின் நோக்கத்தை தொலைத்து விட வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. இதுபோன்ற கருத்துவேறுபாடுகள் ஏற்பட்டு ஆணும், பெண்ணும் இனி சேர்ந்து வாழ முடியாது என்று ஒப்புக் கொண்டால் பின்னர் அவர்கள் இந்த உடன்படிக்கையை சம்மதத்துடன் முறித்துக் கொள்ளலாம். ஆண் இந்த எண்ணத்தில் இருக்கின்றார். ஆனால் பெண் அவ்வாறு இல்லை என்றால் ஆண் சார்பாக ஒருவரும், பெண் சார்பாக ஒருவரும் என்று இரண்டு உறுப்பினர்களைக் கொண்ட கமிட்டி ஒன்று அவர்களுக்கிடையில் தீர்மானம் எடுக்கட்டும். பிறகு, இன்னும் சிலகாலம் ஆணும், பெண்ணும் சேர்ந்து வாழ வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டால் அவர்கள் சொன்ன முறைப்படி ஆணும், பெண்ணும் சேர்ந்து வாழலாம். ஆனால் அதன் பிறகும் உடன்பாடு ஏற்படவில்லை என்றால் ஆண் பெண்ணை விட்டு விலகிக் கொள்ளலாம்.

ஆனால், அந்நிலையில் அவளுக்கு கொடுத்த செல்வத்தை திரும்பப் பெற இயலாது. இன்னும் சொல்வதாயின் மஹர் தொகையை முழுவதுமாக கொடுக்க வேண்டும். மறுபுறம், ஒரு பெண் ஆணிடமிருந்து பிரிந்து செல்ல விரும்பினால் அவள் காஸியிடம் கோரிக்கை வைக்க வேண்டும்; அதற்குப் பிறகு, எந்த தார்மீக நோக்கமும் இல்லை என்று காஸி உணர்ந்தால், அவர் அவளைப் பிரிக்க உத்திரவிட வேண்டும். இந்த வழக்கில் அவள் தன்னிடம் பாதுகாப்பாக இருக்கும் கணவனின் சொத்தையோ அல்லது சீராக கொடுத்தவற்றையோ திருப்பி ஒப்படைத்து விட வேண்டும். மேலும், அந்தப் பெண்ணின் கணவன் அவளுக்குக் குறிப்பிட்ட உரிமைகளைச் செலுத்தாவிட்டாலோ அல்லது அவளுடனான பேச்சை முறித்து விட்டாலோ அல்லது அவளது படுக்கையை தனியாக்கினாலோ இதற்கு காலகட்டம் நிர்ணயிக்கப்பட வேண்டும். நான்கு மாதங்களுக்கு மேல் இந்தச் செயலை செய்திருந்தால் அவனைச் சீர்திருத்தவோ அல்லது விவகாரத்து செய்யவோ கட்டாயப்படுத்த வேண்டும். மேலும், அவர் அவளுக்குச் செலவுகள் போன்றவற்றை வழங்குவதை நிறுத்தினாலோ அல்லது எங்காவது சென்றுவிட்டாலோ அவளுடைய நலனைக் கருத்தில் கொள்ளாமல் இருந்தாலோ அவரது திருமணம் ரத்து செய்யப்படும். (மூன்று ஆண்டுகள் வரையிலான காலக்கெடு இஸ்லாமிய சட்ட வல்லுநர்களால் முடிவெடுக்கப்பட்டுள்ளது.)

மேலும், அவர் வேறோர் இடத்தில் திருமணம் செய்து கொள்ள விடுவிக்கப்பட வேண்டும். மேலும், அவரது மனைவி மற்றும் குழந்தைகளின் செலவுகளுக்கு கணவர் எப்போதும் பொறுப்பேற்க வேண்டும். கணவனுக்கு தன் மனைவியை சரியான முறையில் எச்சரிக்கும் அதிகாரம் உள்ளது. ஆனால், எச்சரிக்கை தண்டனையின் வடிவத்தை அடையும்போது அதற்கு சாட்சிகளாக ஆட்களை நியமிப்பது அவசியம் ஆகும். மேலும், குற்றத்தை வெளிப்படுத்தி சாட்சியத்தின் அடிப்படையில் (தண்டனை) இருக்க வேண்டும். நீடித்த தாக்கத்தை ஏற்படுத்தும் தண்டனையாகவும் இருக்கக் கூடாது. கணவன் தன் மனைவிக்கு எஜமானன் அல்ல. அவளை விற்கவோ, வேலைக்காரியாக வைத்திருக்கவோ முடியாது. அவனுடைய மனைவி அவனுடன் உண்பதிலும், பருகுவதிலும் பங்கு பெறுகிறாள். தன்னுடைய தகுதிக்குச் சரிசமமாக அவளை வைக்க வேண்டும். கணவனுடைய தகுதி என்னவோ அவ்வாறே நடத்த வேண்டும். அதற்குக் குறைவாக நடத்தக் கூடாது. கணவன் இறந்த பிறகு அவனது உறவினர்களுக்கு அவள் மேல் எந்த அதிகாரமும் கிடையாது. அவள் சுதந்திரமானவள் ஆவாள். அவளுடைய நல்லியல்பைப் பார்த்து திருமணம் செய்து கொள்ளலாம். அப்படிச் செய்வதைத் தடுக்க யாருக்கும் உரிமை கிடையாது. குறிப்பிட்ட இடத்தில் தான் திருமணம் முடிக்க வேண்டும் என்று அவளை வற்புறுத்தவும் முடியாது. அவளுடைய மற்றும் அவளுடைய கணவரின் மற்ற உறவினர்களின் உரிமைகளில் தாக்கத்தை விளைவிக்கக் கூடிய அந்த அனைத்து சூழ்நிலைகளும் வெளிவரவேண்டும் என்பதற்காக நான்கு மாதம் பத்து நாட்கள் மட்டுமே அவள் கணவனின் வீட்டில் இருக்க வேண்டும்.

குழந்தைகளின் தர்பிய்யத்தில் பெண்ணிற்கும் பங்கு உள்ளது. அவளிடம் ஆலாசனை கேட்கப்பட வேண்டும். அவளுக்கு குழந்தைகள் தொடர்பாக எந்தத் துன்பமும் கொடுக்கக் கூடாது. தாய்ப்பால் கொடுப்பது, குழந்தைகளை கவனிப்பது மற்றும் குழந்தைகள் தொடர்பான அனைத்து விஷயங்களிலும் அவர்களிடம் ஆலோசனை கேட்க வேண்டும்.

ஆணும், பெண்ணும் பரஸ்பரம் தங்களுக்குள் உடன்படுவதை சாத்தியமற்றதாக கருதி விலக விரும்பினால் சிறிய குழந்தைகள் தாயிடமே இருக்க வேண்டும். குழந்தைகள் வளர்ந்த உடன் கல்விக்காக தந்தையிடம் ஒப்படைத்து விடுங்கள். குழந்தை தாயுடன் இருக்கும் வரை அவர்களுடைய செலவுகளை தந்தை கொடுக்க வேண்டும். இன்னும் சொல்வதாயின் தாய் அவர்களுக்காக நேரத்தை செலவிடுகின்றாள். வேலை செய்கின்றாள். அதற்காகவும் அவளுக்கு கணவர் பொருளுதவி செய்ய வேண்டும். ஒரு பெண்ணுக்கு சுதந்திரமான நிலை உள்ளது. அவள் எல்லா வகையான மார்க்க அருட்களையும் பெற முடியும். இறந்த பிறகும், அவள் உயர்தர அருட்களைப் பெறுவாள். மேலும், அவள் இந்த உலகத்திலும், அரசாங்கத்தின் பல்வேறு துறைகளில் பங்கேற்க முடியும். இந்நிலையில் அவளுடைய உரிமைகள் ஆண்களின் உரிமைகளைப் போன்றே கருத்தில் கொள்ளப்படும்.

இதற்கு முற்றிலும் எதிர் கருத்துகள் உலகில் பரவியிருந்த காலத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வழங்கிய போதனையாகும் இது. எதில் அவள் ஆயிரக்கணக்கான வருடங்களாக பிடிபட்டிருந்தாலோ எதில் அவள் ஒவ்வொரு நாட்டின் கட்டுப்பாடுடன் நடத்தப்பட்டாலோ எதனுடைய ஆதிக்கத்தை ஒவ்வொரு மார்க்கமும் அவளுடைய கழுத்தில் வைத்ததோ அந்த அடிமைத்தனத்திலிருந்தும் அன்னார் (ஸல்) இந்த போதனைகளின் மூலம் பெண்களை விடுவித்தார்கள். ஒரு மனிதர் ஒரேப் பொழுதில் இந்த நீண்ட கால அடிமைத்தனத்தை துண்டித்து, உலகப் பெண்களை விடுவித்து தாய்மார்களை விடுவித்து, அடிமைத்தனத்தின் எண்ணங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாத்து உயர்ந்த எண்ணங்களையும் உயர்ந்த உணர்வுகளையும் ஏற்படுத்தக்கூடிய விஷயங்களை உருவாக்கினார். ஆனால், உலகம் இந்தத் தொண்டை மதிக்கவில்லை. கருணையாக காட்டப்பட்ட விஷயத்தை அநீதியாக கருதிவிட்டது. (ஆண் மணவிலக்கு கொடுக்கும் முறையான) தலாக் மற்றும் (பெண் மணவிலக்கு பெறும் முறையான) குலாவை குழப்பத்திற்குரியதாக கருதிவிட்டது. உயிலை குடும்ப அழிவின் ஆதாரம் என்றும், இல்லற வாழ்க்கையில் பெண்களின் நிரந்தர உரிமைகளை அழிக்கக் கூடியவர் என்றும் உலகம் கருதி வந்தது. 1300 வருடங்களாக தன்னுடைய குருட்டுத்தனத்தால் இந்த ஞானக் கண் கொண்டவரின் கூற்றுகளை ஏளனம் செய்து கொண்டே சென்றது. மேலும், அவருடைய போதனை இயல்புக்கு எதிர்மறையானது என்றும் கருதிவிட்டது.

ஆனால் நாகரீகம் மற்றும் கண்ணியம் என்று கூறிக் கொள்பவர்கள் நாகரீகத்தை போதித்த ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போதனைகளைப் பின்பற்றினார்கள். அதில் ஒவ்வொரு அரசாங்கமும் ஒவ்வொன்றாக தன்னுடைய சட்டங்களை மாற்றினார்கள். மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறிய கொள்கையைப் பின்பற்றினார்கள்.

ஆங்கிலேயச் சட்டம் விவகாரத்து அல்லது குலாவிற்கு ஒரு தரப்பினரால் விபச்சாரம் அல்லது அநீதி அல்லது தாக்குதல் போன்றவை நிரூபணம் ஆக வேண்டும் என்கின்றது. 1923-ல் வெறும் விபச்சாரம் மட்டுமே விவகாரத்து அல்லது குலாவிற்கு போதுமானதாகும் என்று சட்டம் மாற்றப்பட்டுவிட்டது.

நியூஸிலாந்தில் 1912-ல் ஏழு வருட பைத்தியக்காரனின் மனைவி திருமணத்தை முறிக்கலாம் என்றும் சட்டம் இயற்றப்பட்டது. 1925-ல் கணவன் மனைவி அல்லது ஆண் மற்றும் பெண் உரிமைகளை நிறைவேற்வில்லை என்றால் விவகாரத்து அல்லது குலா கொடுக்க இயலும். மேலும் மூன்று வருடம் வரை (கணவன் மனைவி பற்றி) எந்த செய்தியும் கிடைக்கவில்லை என்றால் தலாக் செய்வதை முறையாக்கியது. (ஆனால் 1300 வருடங்களாக இஸ்லாத்தின் மீது ஆட்சேபனை செய்த பிறகு இது

முற்றிலும் இஸ்லாமிய சிறப்புகளை நகல் எடுத்ததற்கு சமமாகும்).

ஆஸ்திரேலியாவின் குயின்லாந்து மாநிலத்தில் ஐந்து வருட பைத்தியத்தின் காரணமாக தலாக் கொடுப்பதை ஏற்றுக் கொண்டுள்ளார்கள். தீய நடத்தை, நான்கு வருடம் வரை நலன் கருதாமல் இருப்பது,போதை மற்றும் மூன்று வருடம் வரை கவனிக்காமல் இருப்பது சிறையகம், அடிப்பது, உதைப்பது மற்றும் பைத்தியம் போன்ற காரணங்களால் தலாக் கொடுக்கலாம் என்று 1919-ல் சட்டம் இயற்றப்பட்டது.

1923-ல் விக்டோரியாவின் பகுதியில் கணவன் மூன்று வருடமாக மனைவியை கவனிக்கவில்லை. தீய நடத்தை மற்றும் செலவினங்களுக்கு பணம் கொடுக்காதது அல்லது கடுமையாக நடத்தல், சிறைபிடித்தல்,அடிப்பது உதைப்பது அல்லது பெண்ணின் தரப்பிலிருந்து தீய நடத்தை அல்லது பைத்தியம் அல்லது கடுமை அல்லது குழப்பம் விளைவித்தல் போன்றவை இருந்தால் தலாக் மற்றும் குலா கொடுக்கலாம் என்று சட்டம் இயற்றப்பட்டது.

மேற்கு ஆஸ்திரேலியாவில் மேற்கண்ட சட்டங்களுடன் கூடுதலாக கர்ப்பிணிப் பெண்ணின் திருமணமும் ரத்து செய்யப்பட்டுள்ளது. (இதை இஸ்லாமும் தடை செய்துள்ளது)

கியூபா தீவில் 1918-ம் ஆண்டில் தீய நடத்தைக்கு வற்புறுத்துதல், தாக்குதல், துஷ்பிரயோகம், குற்றவாளி, அநாகரீகம், சூதாட்டம், உரிமைகளைச் செலுத்தாமை, செலவுகளை வழங்காமை, தொற்று நோய் அல்லது பரஸ்பர சம்மதம் ஆகியவை விவாகரத்துக்கான போதுமான காரணங்களாக அங்கீகரிக்கப்பட்டன.

இத்தாலியில் 1919-ல் ஒரு பெண் தனது சொத்துக்களுக்கு உரிமை படைத்தவள் ஆவாள். மேலும் அதை தனது விருப்பப்படி நன்கொடையாக வழங்கலாம் அல்லது அதை விற்கலாம் என்று சட்டம் இயற்றப்பட்டது. (ஐரோப்பாவில் அதுவரை ஒரு பெண் தனது சொத்துக்களுக்கு உரிமையாளராக கருதப்படவில்லை)

மெக்ஸிகோ மற்றும் அமெரிக்காவில் மேலே குறிப்பிட்ட காரணங்கள் விவகாரத்து அல்லது குலாவிற்கு போதுமான காரணங்களாக அங்கீகரிக்கப்பட்டன. மேலும் பரஸ்பர சம்மதமும் இதற்கு போதுமானதாகக் கருதப்பட்டது. இந்தச் சட்டம் 1917-ல் நிறைவேற்றப்பட்டது.

1915-ல் போர்ச்சுகலிலும், 1909-ல் நார்வேயிலும், 1920-ல் ஸ்வீடனிலும், 1920ல் சுவிட்சர்லாந்திலும் விவாகரத்துக்கான சட்டங்கள் இயற்றப்பட்டன. ஸ்வீடனில் தந்தை 18 வயது வரை குழந்தையின் செலவினங்களைச் செலுத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளார்.

அமெரிக்காவில் குழந்தை மீது தந்தைக்கு உரிமை உண்டு என்று இன்றும் சட்டம் சொல்கிறது. ஆனால், செயல்வடிவில் இஸ்லாமிய வழியில் சீர்திருத்தம் தொடங்கி விட்டது. மேலும், நீதிபதிகள் பெண்களின் உணர்வுகளைப் புரிந்த வண்ணம் ஆண்களை கட்டாயப்படுத்தி செலவுகளைப் பெற்றுத் தருகின்றனர். ஆனால், இன்றும் இந்தச் சட்டத்தில் பல குறைபாடுகள் உள்ளன. ஆணின் உரிமைகள் இன்றும் கடுமையாக பாதுகாக்கப்படுகின்றன. பெண்ணிற்கு அவளுடைய செல்வத்தில் ஆதிக்கம் வழங்கப்படுகின்றது. ஆனால் அதேநேரத்தில் சில மாகாணங்களில் கணவன் மாற்றுத்திறனாளியாக இருந்தால் அவனது செலவினங்களை மனைவி கொடுப்பது அவசியம் ஆகும் என்ற சட்டம் இயற்றப்பட்டு விட்டது.

பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமை வழங்கப்படுகின்றன. மேலும் சமுதாய விவகாரங்களில் அவர்களிடம் கலந்தாலோசிப்பதற்கான வழிகளும் திறக்கப்படுகின்றன. ஆனால், இவை அனைத்தும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போதனைகளுக்கு ஏற்ப 1300 ஆண்டுகள் கழிந்த பிறகு நடக்கின்றன. இன்னும் சில நடக்க வேண்டியுள்ளது. பல நாடுகளில், பெண்கள் தங்கள் தந்தை, தாய் மற்றும் கணவரின் சொத்துகளுக்கு இன்னும் வாரிசுகளாக அறிவிக்கப்படவில்லை. மேலும் இதுபோன்று இன்னும் பல உரிமைகள் உள்ளன. இதில் இஸ்லாம் இன்னும் மீதமுள்ள உலகிற்கு வழிகாட்டுகிறது. ஆனால் உலகம் இஸ்லாத்தினுடைய வழிகாட்டலை ஏற்பதில்லை. எனினும், இந்த விவகாரங்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய வழிகாட்டலை உலகம் ஏற்கக் கூடிய காலம் வெகுதூரமில்லை. எவ்வாறு உலகம் மற்ற விஷயங்களை ஏற்றதோ அதைப்போன்று பெண்களின் சுதந்திரம் தொடர்பான அன்னாருடைய முயற்சி தன்னுடைய முழு தாக்கத்தையும், விளைவையும் வெளிப்படுத்தும்.

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِ مُحَمَّدٍ

كَمَا صَلَّيْتَ عَلٰى اِبْرَاهِيْمَ

وَعَلٰى اٰلِ اِبْرَاهِيْمَ اِنَّكَ حَمِيْدٌ مَّجِيْدٌ

மிர்ஸா மஹ்மூத் அஹ்மத்

(அல்ஃபஸ்ல் காதியான், 12 ஜுன், 1928)

தமிழாக்கம்: மவ்லவி: ஜாஹிர் ஹுஸைன்

## (தலையங்கம்) 2-ம் பக்கத்தொடர்ச்சி...

கொண்டிருப்பதைப் போன்று எந்த ஒரு நபரும் வேறு ஒருவர் மீது அன்பு கொண்டிருப்பதை நான் கண்டதில்லை. அதன் பிறகு நஸ்தாஸ் ஸைது (ரலி) அவர்களை ஷஹீதாக்கிவிட்டான். (ஸீரத் காத்தமுன்னபிய்யீன், பக்கம் 513 -516)

அன்பு மற்றும் நேசத்திற்கான மேலும் ஒரு விநோதமான சம்பவத்தை படியுங்கள்! ஹஸ்ரத் உஸைர் பின் ஹுழைர் அன்ஸாரி (ரலி) அவர்களைக் குறித்து அறிவிப்பில் வருகின்றது.அன்னார் மிகவும் நகைச்சுவை உணர்வு கொண்டவர்களாக இருந்தார்கள். ஒரு நாள் அன்னார் மக்களுடன் அமர்ந்து நகைச்சுவையான விஷயங்களை பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாரின் ஒரு பக்கத்தில் தமது ஒரு குச்சியைக் கொண்டு தொட்டார்கள். அப்போது அவர் ஹுஸுர் (ஸல்) அவர்களே! நான் இதற்கு பழிவாங்க வேண்டும் என்று கூறினார். அப்போது, சரி! ஆகட்டும் வாருங்கள்! வந்து பழிவாங்கிக் கொள்ளுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது அவர், ஹுஸுர் (ஸல்) அவர்களே! தாங்கள் (ஸல்) மேலங்கி அணிந்தள்ளீர்கள். நானோ மேலங்கி அணியாமல் இருக்கின்றேன் என்று கூறினார். அப்போது, ஹுஸுர் (ஸல்) அவர்கள் அவர் பழிவாங்குவதற்கு ஏதுவாக தமது மேலங்கியை களைந்து விட்டார்கள். அப்போது, உஸைது பின் ஹுழைர் (ரலி) அவர்கள் ஹுஸுர் (ஸல்) அவர்களை தழுவிக் கொண்டார்கள். மேலும், அன்னாரின் அருளுக்குரிய உடலை முத்தமிட்டார்கள். மேலும், ஹுஸுர் (ஸல்) அவர்களே! எனது நோக்கம் இதுதான் ஆகும் என்று அவர் கூறினார். (நான் அருளைப் பெற வேண்டும் என்ற எண்ணத்தில் உள்ளத்தில் இந்தத் திட்டத்தை வகுத்திருந்தேன் என்று அவர் கூறினார்)

(ஹதீக்கத்துஸ் ஸாலிஹீன், ஹதீஸ் எண்: 72, நூலாசிரியர் மலிக் ஸைஃபுர் ரஹ்மான் ஸாஹிப்)

உஸைத் பின் ஹுழைர் (ரலி) அவர்கள் அவ்ஸ் கோத்திரத்தைச் சேர்ந்த குடும்பமான பனூ அப்துல் அஷ்ஹலைச் சேர்ந்தவராக இருந்தார்கள். மேலும், பெரும் ஸஹாபிகளைச் சேர்ந்தவராக இருந்தார்கள். அன்னாரின் தந்தையார் புஆஸ் போரில் அவ்ஸ் கோத்திரத்தின் தலைவராக இருந்தார்கள். உஸைது (ரலி) அவர்கள் மிகவும் தூய மனிதராகவும், மிகவும் புரிதல் கொண்ட நபராகவும் இருந்தார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள்: அன்ஸார் ஸஹாபிகளில் மூன்று நபர்கள் மிகுந்த சிறப்பு பெற்றவர்களாக உள்ளனர். அதாவது, உஸைத் பின் ஹுழைர், ஸஅத் பின் மஆஸ் மற்றும் அப்பாத் பின் பிஷ்ர் ஆகியோர் ஆவர். உஸைது (ரலி) அவர்கள் பெரும் அந்தஸ்து பெற்ற ஸஹாபியாக இருந்தார்கள் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உஸைத் பின் ஹுழைர் (ரலி) அவர்களுக்கு மிகுந்த கண்ணியம் வழங்கி வந்தார்கள். (ஸீரத் காத்தமுன்னபிய்யீ, பக்கம் 229)

அல்லாஹ் ஸஹாபிகளின் அந்தஸ்துகளை உயர்த்தவானாக! ஈமான் கொண்டதற்கான கடமையை அவர்கள் முழுமையாக செலுத்தி விட்டனர். நாமும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் செய்துள்ள பைஅத்திற்கான உரிமைகளை செலுத்துவதற்கான நற்பேறை அல்லாஹ் நமக்கும் வழங்குவானாக.!

(ஆமீன்)

* * * * *

நபித்தோழர்களின் வரலாறு

## ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் - ஹஸ்ரத் மவ்லானா ஹக்கீம் நூருத்தீன் (ரலி) அவர்கள்

காதியான் ஆண்டு மாநாடு 2022ல் நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவு

مِنَ الْمُؤْمِنِيْنَ رِجَالٌ صَدَقُوْا مَا
عَاهَدُوا اللّٰهَ عَلَيْهِ ۚ فَمِنْهُمْ مَّنْ قَضٰى نَحْبَهٗ
وَمِنْهُمْ مَّنْ يَّنْتَظِرُ ۖ وَمَا بَدَّلُوْا تَبْدِيْلًا

பொருள்: நம்பிக்கை கொண்டவர்களுள் தாங்கள் அல்லாஹ்விடம் செய்திருந்த வாக்குறுதியினை உண்மைப்படுத்திய மனிதர்கள் உள்ளனர். அவர்களுள் சிலர் (தாங்கள் போர் செய்து மரணமடைய வேண்டும் என்ற) தங்கள் எண்ணத்தை நிறைவேற்றியுள்ளனர். மேலும் அவர்களுள் மற்றுஞ்சிலர் (இன்னும் அதனை) எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் (தங்கள் எண்ணத்தில்) சிறிதும் மாற்றம் ஏற்படுத்தவில்லை. (திருக்குர்ஆன் 33: 24)

கண்ணியத்திற்குரிய கூட்டத்தின் தலைவர் அவர்களே! வருகை தந்திருப்போரே செவியேற்பவர்களே! உங்கள் அனைவருக்கும் அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மத்துல்லாஹி வ பரக்காதஹு

எனது சொற்பொழிவின் தலைப்பு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் மவ்லானா ஹக்கீம் நூருத்தீன் (ரலி) அவர்களின் வாழ்க்கை ஆகும்.

மக்களே! எல்லா காலகட்டத்திலும் எப்போதெல்லாம் அல்லாஹ் தனது அன்பிற்குரியவர்களை இந்தப் பூமியில் அனுப்புகின்றானோ அவர்களுக்கு உதவ ஒத்துழைக்க வானம் மற்றும் பூமியின் அடையாளங்களை வெளிப்படுத்துகின்றான். மேலும், அவர்களுக்கு பிரதிபிம்பமாக இருக்கக் கூடிய தோழர்களை வழங்குகின்றான். அதுபோன்று எங்கு அல்லாஹ் ஆரம்ப காலத்தில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு ஸித்தீகே அக்பர் எனும் மாபெரும் உண்மையாளரை வழங்கினானோ இறுதி காலகட்டத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு ஹஸ்ரத் ஹக்கீம் நூருத்தீன் (ரலி) அவர்களை வழங்கினான்.

நபித்துவத்திற்கு நன்கொடையாக வழங்கப்பட்ட அந்த இருவருடைய வாழ்க்கையின் சில விஷயங்கள் மீது ஒளியூட்ட இந்த எளியவன் முறையே முயற்சி செய்வேன். வ பில்லாஹி தவ்ஃபீக்.

நபிமார்களுக்கு பிறகு மனிதர்களுள் அனைவரையும் விட சிறந்தவர் ஹஸ்ரத் ஸித்திகே அக்பர் (ரலி) அவர்கள் ஆவார்கள். அன்னாரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது நண்பராக ஆக்கிக் கொண்டார்கள். அன்னாரை திருக்குர்ஆனில் அல்லாஹ் உண்மையின் ஆதரவாளராகவும், உண்மையின் மறு வடிவமாகவும் ஆக்கியிருக்கின்றான். அன்னார் அறியாமையின் காலகட்டத்திலும் மது, சூதாட்டம் மற்றும் இதேபோன்று தடுக்கப்பட்ட மற்ற விஷயங்களிலிருந்தும் தவிர்ந்திருந்தார்கள்.

அன்னாரைப் பற்றி ஹஸ்ரத் உமர் ஃபாரூக் (ரலி) அவர்கள் என்னால் அன்னாரது அந்தஸ்து மற்றும் படித்தரத்தை ஒருபோதும் அடையவே முடியாது என்று கூறினார்கள். எவரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முஸ்லிம்களுக்கு தலைமை தாங்கக் கூறினார்களோ மேலும், சொர்க்கத்தின் அனைத்து கதவுகளிலும் நுழைவதற்கு எவருக்கு அழைப்பு விடுக்கப்படுமோ, அவர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களே ஆவார்கள். அன்னார் இஸ்லாம் மற்றும் இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்கு எந்த அளவிற்கு உதவி புரிந்தார்கள் என்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சுயமே ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களது பேருபகாரத்திற்கான கைமாறு அல்லாஹ்வே செய்வான் என்று கூறினார்கள்.

செவியேற்போரே! ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது அவையின் கவிஞர் ஹஸ்ஸான் பின் ஸாபித் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களைப் பற்றி இவ்வாறு கூறுகின்றார்கள்: உங்களது உள்ளத்தில் எப்போதாவது ஏதேனும் ஒரு நல்ல சகோதரர் தொடர்பாக வேதனை உருவாகினால் அச்சமயம் நமது சகோதரர் அபூபக்ர் (ரலி) அவர்களையும் நினைவிற் கொள்ளுங்கள். நினைவில் கொள்ளத்தக்க அன்னாரது சிறப்புகளின் காரணத்தால் (நினைவிற் கொள்ளுங்கள்). அன்னார் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு பிறகு இறையச்சத்தில் மேலோங்கியவராகவும், அனைவரையும் விட அதிகமாக நீதியை விரும்பும் இயல்புடையவராகவும் இருந்தார்கள். மேலும் தன் மீது சுமத்தப்பட்ட பொறுப்புகளை அனைவரையும் விட அதிகமாக முழுமை செய்யக்கூடியவராகவும் இருந்தார்கள். ஆம்! ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தவ்ர் குகையில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் இருந்த அந்த இரண்டாவது மனிதர்தான். அன்னார் தம்மை சுயமே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கட்டுப்பாட்டில் முழுமையாக அர்ப்பணித்து இருந்தார்கள். அன்னார் எந்தப் பணியை மேற்கொண்டாலும் அதனை அழகாக்கிவிடுவார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொண்ட அனைத்து மக்களிலும் அன்னார் (ரலி) முதன்மையானவர் ஆவார்கள்.

கண்ணியத்திற்குரிய செவியேற்பவர்களே! இந்த ஸித்தீகே அக்பர் இஸ்லாத்தின் எப்படிப்பட்ட கண்ணியத்திற்குரிய மனிதராக இருந்தார் என்றால் அன்னார் மூலமாகவே அல்லாஹ் உலகிற்கு இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மீதான நேசம், தூதருக்கு கட்டுப்படுதல், மென்மை, மன்னித்தல், வீரம், இஸ்லாத்தின் மீதான தன்மானம், ஏழைகளை பராமரித்தல், நன்னடத்தை, பேருபகாரம் போன்ற மாபெரும் உதாரணங்களை நிலைநாட்ட வேண்டி இருந்தது.

கண்ணியத்திற்குரிய செவியேற்பவர்களே! ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தனது அரபிக் கவிதையில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் புகழ்ந்து கூறியுள்ளார்கள். அதன் உருது மொழியாக்கத்தை தங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன்.

அன்னார் (ரலி) அல்லாஹ்வின் தூதரிடத்தில் உண்மையான உள்ளத்துடன் வந்ததனால் ஒளியூட்டப்பட்டார்கள். மேலும் துன்பம் இழைக்கக் கூடிய இருளின் எவ்வித தாக்கமும் எஞ்சி இருக்கவில்லை. அன்னார் (ரலி) கீழ்படிந்தவாறு ஆர்வத்தின் இறகுகளால் பறந்தார்கள். மேலும், கண்ணியத்திற்குரிய நபியின் கரங்களாக ஆகிவிட்டார்கள். நானும், நீங்களும் இன்று தோட்டங்களில் இன்பமடைகின்றோம். இத்தனைக்கும் அன்னர் போர்களத்தில் ஒன்று கூட்டப்படும் நாளைப் போன்று வந்திருந்தார்கள். மேலும் அன்னார் (ரலி) தூய உள்ளத்துடன் அல்லாஹ்வுக்காக (தமது) தேசத்தின் மீதான நேசத்தை விட்டு விட்டார்கள். மேலும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடத்தில், ஓர் அன்பில் மாய்ந்தவரைப் போன்று வந்தார்கள். (ஸிர்ருல் கிலாஃபத் - பக்கம் 182)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களது பெயர் அப்துல்லாஹ் ஆகும். மேலும், உஸ்மான் பின் ஆமீர் என்பது அன்னாருடைய தந்தையின் பெயராகும். அன்னாரது சுட்டுப் பெயர் அபூபக்ர் ஆகும்.மேலும் அன்னாரது பட்டப் பெயர் அத்தீக் மற்றும் ஸித்தீக் ஆகும். அன்னார் 573-ம் ஆண்டில் பிறந்தார்கள். அன்னாரது தாயார் பெயர் ஸல்மா பின்த் ஸஹர் பின் ஆமிர் ஆகும். அன்னாரது சுட்டுப் பெயர் உம்முல் கைர் ஆகும்.

இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்கு முன்பு ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்களது தொழில் மற்றும் அந்தஸ்தைக் குறித்து தபரீயின் வரலாற்று நூலில் எழுதப்பட்டுள்ளது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தமது சமுதாயத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட மற்றும் நேசத்திற்குரிய மனிதர் ஆவார்கள். மென்மையான இயல்புடைய மனிதராக இருந்தார்கள். சமுதாயத்தில் குலம் கோத்திரம் மற்றும் நன்மை தீமைகளை அனைவரையும் விட அதிகம் அறிந்தவர்களாக அன்னார் இருந்தார்கள். அன்னார் வியாபாரம் செய்து வந்தார்கள். ஏராளமான நற்குணங்கள் மற்றும் நன்மைகளுக்கு அன்னார் (ரலி) சொந்தக்காராக இருந்தார்கள். அன்னாரது சமுதாய மக்கள் அன்னாரது நற்குணங்களின் காரணத்தால், அன்னாரது அனுபவத்தின் காரணத்தால் அன்னாரிடம் வந்தார்கள். மேலும், அன்னாரின் மீது நேசம் கொண்டிருந்தார்கள். (தாரீகே தபரீ, பாகம் 1, பக்கம் 540)

கண்ணியத்திற்குரிய செவியேற்பவர்களே! அன்னார் (ரலி) இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டது தொடர்பான பல சம்பவங்கள் அறிவிப்புகளில் இடம் பெற்றிருக்கின்றன. அவற்றில் சிலவற்றை நான் எடுத்துரைக்கின்றேன்:

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட சம்பவத்தை எடுத்துரைத்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நபித்துவ வாதம் புரிந்த போது அச்சமயம் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வெளியில் எங்கோ சென்றிருந்தார்கள். திரும்பி வரும்பொழுது அன்னாரது ஓர் அடிமைப் பெண் அன்னாரிடம், தங்களது நண்பரோ பைத்தியமாகிவிட்டார். (நவூதுபில்லாஹ்). மேலும், அவர் விந்தையான விஷயங்களைக் கூறுகின்றார். தன்னிடம் விண்ணில் இருந்து வானவர்கள் இறங்குகின்றார்கள் என்று அவர் கூறுவதாக

கூறினாள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அக்கணமே எழுந்து ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களது வீட்டை அடைந்து அன்னாரது கதவைத் தட்டினார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வெளியே வந்ததும் ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்கள், தாங்கள் விளக்கம் அளிக்க வேண்டாம்;இறைவனின் வானவர்கள் உங்கள் மீது இறங்குகின்றார்கள்; மேலும் தங்களுடன் பேசுகின்றார்கள் என்று தாங்கள் கூறினீர்களா? என்று மட்டும் எனக்கு தாங்கள் கூறுங்கள் என்றார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அனனாருக்கு புரிதலில் தவறு ஏற்பட்டு விடக் கூடாது என்ற எண்ணத்துடன் விளக்கம் கொடுக்க விரும்பினார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்னுரை வடிவில் சில விஷயங்களை கூற விரும்பினார்கள். ஆனால், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களோ, இல்லை! தாங்கள் இந்த விஷயம் சரியானதா? என்று மட்டும் கூறுங்கள் எனக் கேட்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஆம்! அது சரியானது தான் என்று கூறினார்கள். உடனே ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் நான் தங்கள் மீது ஈமான் கொள்கின்றேன் என்று கூறினார்கள். நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஆதாரங்களை எடுத்துக் கூறுவதில் இருந்தும் தடுத்ததற்கு காரணம் என்னவென்றால், என்னுடைய ஈமான் கண்ணால் கண்டதனால் இருக்க வேண்டும்; ஆதாரங்களின் அடிப்படையில் இருக்கக் கூடாது என்பதனால் மட்டுமே ஆகும். ஏனெனில், தங்களை நல்லவராகவும், உண்மையாளராகவும் ஏற்றுக் கொண்ட பிறகு எவ்வித ஆதாரத்திற்கும் அவசியம் எஞ்சியிருக்கவில்லை என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

இவ்வாறாக, எதனை மக்கத்து வாசிகள் மறைத்தார்களோ அதனை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தமது செயலின் மூலமாக வெளிப்படுத்திக் காட்டினார்கள். (தஃப்ஸீரே கபீர், தொகுதி 2, பக்கம் 251-252)

மேலும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சுயமே கூறுகின்றார்கள்: நான் எவரையெல்லாம் இஸ்லாத்தின்பால் அழைத்தேனோ நிச்சயமாக அவர்கள் சிறிதளவேனும் நிராகரிப்பை வெளிப்படுத்தியுள்ளார்கள். ஆனால், அபூபக்ரைத் தவிர. நான் அவரிடம் இஸ்லாத்தை எடுத்துரைத்தபோது சிறதளவு கூட அன்னார் நிராகரிக்கவில்லை. (இப்னு ஹஷ்ஷாம், பாகம் 1, பக்கம் 267)

செவியேற்பவர்களே! இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பிறகு, அன்னார் (ரலி) மீது அநீதிகளின் காலகட்டம் ஆரம்பமானது. மேலும் பல விதத்திலும் அன்னார் அநீதிக்கு இலக்காக ஆக்கப்பட்டார்கள். நேர்வழியில் செல்லக்கூடியவர்களுக்கு சோதனைகள் மற்றும் துன்பங்கள் ஏற்படுவது என்பது தொடர் நடைமுறையாகும். நபித்தோழர்களுடனும் இந்த இறை நடைமுறை நிலைபெற்றிருந்தது. எந்த அளவிற்கு சோதனைகள் மற்றும் துன்பங்களினால் துயருற்றார்கள் என்றால் மாபெரும் மலையும் அவற்றை பொறுத்துக் கொள்ள முடியாது. ஆனால், அந்த தூய ஆன்மாக்கள் தங்களுடைய உயிரையும், செல்வத்தையும் அல்லாஹ்வின் வழியில் தியாகம் செய்து விட்டன. மக்கத்து நிராகரிப்பாளர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்கள் மீது பல்வேறு விதமான அநீதிகளை இழைத்தனர். பலவீனமான மற்றும் அடிமை முஸ்லிம்கள் மட்டும் அவர்களின் அநீதி மற்றும் கொடுமைகளுக்கு இலக்காக ஆகவில்லை. மாறாக, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் கூட மக்கத்து இணை வைப்பாளர்களின் அநீதிகளில் இருந்து பாதுகாப்பாக இருக்கவில்லை. அவர்களும் கூட பல்வேறு அநீதிகளுக்கும் துன்பங்களுக்கும் இலக்காக ஆக்கப்பட்டார்கள் என்பதற்கு வரலாறு சாட்சியாக உள்ளது. ஓர் அறிவிப்பில் வருகின்றது: ஒருமுறை இணை வைப்பாளர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் நீர், எங்களது கடவுளர்களை பற்றி இந்த விஷயங்களை கூறுவதில்லையா? என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், ஆம்! என்று கூறினார்கள். எனவே அவர்கள் அன்னாரைச் சுற்றி ஒன்றுகூடினர். மேலும், அச்சமயம் ஒருவர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் உங்களது நண்பரை கவனித்துக் கொள்ளுங்கள் என்று கூறினார். ஹஸ்ரத் அபூபகர் (ரலி) அவர்கள் வெளியே வந்து மஸ்ஜிது ஹராமை அடைந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைச் சுற்றி மக்கள் ஒன்று கூடி இருந்த நிலையில், அன்னாரை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கண்டார்கள். உங்கள் மீது நாசம் உண்டாகட்டும்! என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள். أَتَقْتُلُوْنَ رَجُلًا أَنْ يَّقُوْلَ رَبِّيَ اللهُ

وَقَدْ جَاءَكُمْ بِالْبَيِّنَاتِ مِنْ رَبِّكُمْ

(அல்முஃமின்: 29)

என் இறைவன் அல்லாஹ் என்று கூறுகின்ற ஒரே காரணத்திற்காக நீங்கள் ஒரு மனிதரைக் கொலை செய்யப் போகின்றீர்களா? மேலும், அவர் உங்கள் இறைவனிடமிருந்து உங்களிடம் தெளிவான சான்றுகளையும் கொண்டு வந்துள்ளார். அதைக் கேட்ட பிறகு, நிராகரிப்பாளர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட்டு விட்டார்கள். மேலும், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம், அவர்கள் வந்தனர். மேலும், அன்னாரை அடிக்கத் தொடங்கினர். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களது மகள் ஹஸ்ரத் அஸ்மா (ரலி) கூறுகின்றார்கள்:

அன்னாரது முடியில் கைவைத்தால் அது கையோடு வந்துவிடும் நிலையில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எங்களிடம் வந்தார்கள். அன்னார் (ரலி) تَبَارَكْتَ يَا ذَا الْجَلَالِ وَالْإِكْرَامِ என்று கூறிக் கொண்டே இருந்தார்கள்.

செவியேற்பவர்களே! ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதும் பித்து பிடித்தவரைப் போன்று இஸ்லாத்தின் தப்லீஃக்கை ஆரம்பித்தார்கள். இதன் மூலம் ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்பான் (ரலி), ஹஸ்ரத் தல்ஹா பின் அப்தில்லாஹ் (ரலி), ஹஸ்ரத் ஸஅது பின் அபீ வகாஸ் (ரலி), ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) மற்றும் ஏராளமான இதர முக்கிய ஸஹாபிகளும் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டனர். அன்னாரது நன்மை மற்றும் இறையச்சமானது சந்திக்கின்ற ஒவ்வொருவரையும் நிச்சயம் தாக்கத்திற்கு ஆளாக்கி வந்தது. அன்னாரது வாழ்க்கை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) மற்றும் ஏழை முஸ்லிம்களுக்காக அர்ப்பணிக்கப்பட்டிருந்தது. எஜமானர்களால் கடுமையாக துன்புறுத்தப்பட்டு வந்த பல அடிமை ஆண்கள் மற்றும் பெண்களின் வாழ்க்கை அன்னாரது உபகாரத்தால் விடுதலை எனும் பரிசால் ஈடேற்றம் பெற்றனர். அந்த அடிமைகளில் ஹஸ்ரத் பிலால் (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஆமிர் பின் ஃபஹ்மீரா ஆகியோரும் அடங்குவர். இறைவனிடம் மன்றாடுவதற்காக அன்னார் (ரலி) தம்முடைய வீட்டின் முன்புறத்தில் ஒரு சிறிய மஸ்ஜிதை கட்டியிருந்தார்கள். அன்னாரது இறை வணக்கத்தின் காட்சி எந்த அளவிற்கு உள்ளத்தை கொள்ளை கொள்வதாக இருந்தது என்றால் மக்கள் குறிப்பாக அன்னாரை பார்க்க வந்து தாக்கத்திற்கு உள்ளாகி வந்தனர். மேலும், இறைவனது வழிகாட்டலாகிய

قُلْ اِنَّ صَلَاتِيْ وَنُسُكِيْ وَمَحْيَايَ وَمَمَاتِيْ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ

என்பதற்கு ஏற்ப தமது வாழ்வின் ஒவ்வொரு மணித்துளியையும் அன்னார் (ரலி) தியாகம் செய்திருந்தார்கள்.

செவியேற்பவர்களே! ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் செல்வத்தை செலவு செய்தல் மற்றும் வள்ளல் குணத்தில் அனைத்து கண்ணிய மிக்க ஸஹாபிகளை விட மேலோங்கி இருந்தார்கள். திர்மிதீயின் ஒரு நபிமொழி உள்ளது. ஒருமுறை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எங்களுக்கு அல்லாஹ்வின் வழியில் ஸதகாக்களை வழங்க கட்டளையிட்டார்கள். எனவே இன்றைய தினம், நான் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை விட முந்திச் செல்வேன் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். எனவே அன்னார் (ரலி) தமது வீட்டின் பாதி செல்வத்தை எடுத்துக் கொண்டு வந்துவிட்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், உமது வீட்டினருக்காக எதனை பாக்கி வைத்துள்ளீர்கள்? என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! பாதி செல்வத்தை என்று கூறினார்கள். பின்னர், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஒரு மூட்டையை கொண்டு வந்து ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அவையில் வைத்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அபூபக்ரே! உமது வீட்டினருக்காக எதனை விட்டு விட்டு வந்துள்ளீர்கள் என்று கேட்டார்கள். அதற்கு, அல்லாஹ் மற்றும் அவனது தூதரை நான் விட்டு வந்துள்ளேன் என்று கூறினார்கள். (மிஷ்காத் - ஹதீஸ் எண் 554)

ஓர் அறிவிப்பில் வருகின்றது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களது செல்வம் எந்த அளவிற்கு எனக்கு பலன் அளித்ததோ அந்த அளவிற்கு (வேறு) எவரது செல்வமும் பலனளிக்கவில்லை என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள். அன்னார் (ஸல்) கூறுகிறார்கள்: நான் உலகில் உபகாரம் செய்த அனைவருடைய உபகாரத்திற்கான நன்றி கடனை அடைத்து விட்டேன். ஆனால் ஸித்திகே அக்பரின் பேருபகாரங்களுக்கான நற்கூலியை அல்லாஹ் வழங்குவான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு ஸித்தீக் என்ற பட்டப் பெயரைச் சூட்டியுள்ளார்கள். அல்லாஹ் நன்கு அறிபவன் ஆவான். அன்னாரிடம் என்னென்ன அற்புதங்கள் இருந்தன என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ்

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 8 Thursday 27 July-03 August 2023 Issue No. 30 & 31

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

(ஸல்) அவர்கள் இவ்வாறும் கூறியுள்ளார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களது மேன்மை அன்னாரது உள்ளத்தில் இருக்கின்ற விஷயத்தின் காரணத்தினால் தான். ஒருவேளை சிந்தித்துப் பார்த்தோமே என்றால், உண்மையில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வெளிப்படுத்திய நன்றியுணர்விற்கு முன்னுதாரணம் கிடைப்பது கடினமாகும். மேலும், உண்மையாதெனில், ஒவ்வொரு கட்டத்திலும் எவரொருவர் ஸித்தீகின் அற்புதங்களை பெறுவதற்கு நாட்டம் கொண்டுள்ளாரோ அவர் அபூபக்ர் (ரலி) அவர்களது பண்புகள் மற்றும் இயல்புகளை தன்னகத்தே உருவாக்குவதற்காக இயன்வரை போராட வேண்டியது அவசியமாகும். மேலும், இயன்ற அளவு துஆவினால் பயன் பெற்றுக் கொள்ள வேண்டும். எப்போது வரை அபூபக்ர் (ரலி) அவர்களின் இயல்புகளின் நிழலை தம் மீது ஏற்படுத்திக் கொள்வதில்லையோ மேலும் அவரது வண்ணத்தில் வண்ணமயமாக ஆகுவதில்லையோ அதுவரை ஸித்தீகிய மேன்மைகளை பெற முடியாது.

கண்ணியத்திற்குரிய செவியேற்பவர்களே! ஹஸ்ரத் ஸித்தீகே அக்பர் (ரலி) அவர்களது இயல்பானது ரஸூல்லாஹ் (ஸல்) அவர்களது நடைமுறையின் அச்சில் வார்க்கப்பட்டிருந்தது. அன்னாரது ஒவ்வொரு செயலும் ரஸூல் (ஸல்) அவர்களைப் பின்பற்றியும் அவர்களது கட்டுப்படுதலின் வெளிப்பாடாகவுமே இருந்தது. ஓர் அறிவிப்பில் வருகின்றது: ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உங்களில் இன்று யார் நோன்பு வைத்துள்ளார்? என்று கேட்டார்கள். அதற்கு நான் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள். பின்னர், உங்களில் இன்று யார் ஜனாஸாவில் கலந்து கொண்டார் ? என்று கேட்டார்கள். அதற்கு நான் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள். பிறகு உங்களில் இன்று யார் ஏழைகளுக்கு உணவளித்தார்கள்? என்று கேட்டார்கள். அதற்கு நான் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள். எனவே எந்த மனிதரிடத்தில் இவ்வனைத்து சிறப்புகளும் ஒன்றிணைந்துள்ளனவோ அவர் நிச்சயமாக சுவர்க்கத்தில் நுழைவார் என்று கூறினார்கள். (முஸ்லிம்: ஹதீஸ் எண் - 1028)

செவியேற்போரே! மதீனாவின் ஹிஜ்ரத்தின் அருளுக்குரிய பயணத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வெளிப்படுத்திய விசுவாசம் மற்றும் அர்ப்பணிப்பின் முன்னுதாரணம் காணக் கிடைக்கின்றது. ஹிஜ்ரத் செய்வதற்காக முன்னரே ஆயத்தப்படுத்தி வைத்திருந்த தம்முடைய இரண்டு பெண் ஒட்டகங்களில் ஒரு பெண் ஒட்டகத்தை ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களுக்கு எந்தக் கூலியும் இல்லாமல் சமர்பித்துவிட்டார்கள். ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதனை விலைக்கு வாங்கிக் கொண்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் 5000 திர்ஹமையும் வழிச் செலவுக்காக தம்முடன் வைத்திருந்தார்கள். பிறகு, தவ்ர் குகையில் இறைத் தூதர் (ஸல்) அவர்களுடைய நெருக்கத்தைப் பெறும் நல்வாய்ப்பு கிடைத்தது.

அது குறித்த குறிப்பு திருக்குர்ஆனில் நிரந்தரமாக பாதுகாக்கப்பட்டுள்ளது. அல்லாஹ் கூறுகின்றான்:

ثَانِيَ اثْنَيْنِ اِذْهُمَا فِي الْغَارِ اِذْيَقُوْلُ لِصَاحِبِهٖ لَا تَحْزَنْ اِنَّ اللّٰهَ مَعَنَا

(அத்தவ்பா: 40) அதாவது இருவருள் அந்த ஒருவராக இருந்த நிலையில் வெளியேற்றிய நேரத்திலும் அவ்விருவரும் குகையில் இருந்த நேரத்தில் அவர் தன்னுடைய நண்பரிடம் கவலைப்படாதீர்! நிச்சயமாக அல்லாஹ் நம்முடன் இருக்கின்றான் என்று கூறினார்.

ஹிஜ்ரத் பயணத்தில் அரேபியாவின் மன்னரது இந்த தனித்ததொரு சிப்பாய் அன்னாரது பாதுகாப்பிற்காக சிலநேரம் முன்னே வந்தார்கள்; சில சமயம் பின்னால் வந்தார்கள்; சிலசமயம் வலது புறம் வந்தார்கள் என்றால் சில சமயம் இடது புறம் வந்தார்கள். இவ்வாறாக, தமது தலைவரை பாதுகாப்புடன் மதீனா கொண்டு சேர்த்தார்கள். (அஸ்ஸீரத்துல் ஹல்பியா, பக்கம் 45, பெய்ரூத் பதிப்பு)

இதே ஹிஜ்ரத்தின் பயணத்தின் ஒரு சம்பவம் இவ்வாறு உள்ளது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஸூராக்கா என்ற ஒரு இணை வைப்பாளர் பின் தொடர்ந்து வருவதைக் கண்டு அழ ஆரம்பித்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் காரணம் கேட்டபோது, எனது உயிர் மீதான அச்சம் எனக்கு இல்லை. தங்களின் காரணத்தால்,(அதாவது) என்னுடைய தலைவருக்கு எவ்வித இழப்பும் ஏற்பட்டு விடக் கூடாது என்பதனால் அழுகின்றேன் என்று அன்னார் (ரலி) கூறினார்கள். (முஸன்னத் அஹ்மது, பாகம் 1, பக்கம் 2, எகிப்து பதிப்பு)

செவியேற்போரே! தவ்ர் குகையில் நுழைந்தபோது ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்கள் குகை முழுவதையும் சுத்தம் செய்தார்கள். பாம்பு அல்லது தேள் ஏதும் இருக்கக் கூடாது என்பதற்காக அனைத்து துளைகளையும் அடைத்தார்கள். ஒரு துளை மீதமிருந்தது. எனவே தமது காலை அதில் வைத்து விட்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமது அருளுக்குரிய தலையை ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்களது மடியில் வைத்து ஓய்வு எடுக்க ஆரம்பித்தார்கள். துளையிலிருந்து ஒரு பாம்பு ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்களது காலில் தீண்டி விட்டது. ஆனால் அந்த அன்பின் வடிவமானவர் அந்த வேதனையை தமது நேசத்தின் மீது ஆதிக்கம் செலுத்த விடவில்லை. வேதனை மற்றும் அன்பின் சங்கமத்தின் காரணத்தினால் அன்னாரது கண்களில் கட்டுப்படுத்த முடியாமல் கண்ணீர் வழிந்தோடியது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீதான நேசம் எந்தக் கொடியின் முடிச்சினை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இட்டார்களோ ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அந்த முடிச்சினை அவிழ்க்க தயாராக இருக்கவில்லை.

செவியேற்போரே! சந்தேகத்திற்கு இடமின்றி பல நேசர்கள் வந்து சென்றிருக்கின்றார்கள். அவர்களில் நேசத்திற்குரியவருக்காக ஆட்சி கிரீடத்தையும் விட்டுக் கொடுத்தவர்களும் இருப்பார்கள். மேலும் நேசத்திற்குரியவருடைய திருப்தியை பெறுவதற்காக அவர் சன்னிதானத்திலேயே வீழ்ந்து கிடந்தவர்களும் இருப்பார்கள். மேலும், நொடிப் பொழுதில் கண் அசைவில் அடுத்த நொடியிலேயே உயிரை சிலுவையில் அர்ப்பணித்தவர்களும் இருப்பார்கள். ஆனால் முழு அறிவுடன் முழுமையான நம்பிக்கையுடன் பாதங்கள் நிலைத்திருந்து முழுமையான உறுதித் தன்மையுடன், நம்பிக்கை உடன்படிக்கையை நிறைவேற்றுவது ஸித்தீகே அக்பர் (ரலி) அவர்களுடைய பண்பின் சிறப்பம்சம் மட்டுமே ஆகும். அதற்கு முன் உலகின் அனைத்து நன்றி விசுவாச கதைகளும் ஒன்றுமற்றதாக ஆகிவிடுகின்றன. மேலும், அன்னார் (ரலி) அன்பு மற்றும் நேசத்தின் வெளிப்பாட்டின் எப்படிப்பட்டதொரு முன்னுதாரணத்தை ஏற்படுத்தி உள்ளார்கள் என்றால் மறுமை வரை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது நேசர்கள், நேசம் கொள்வதில் ஸித்தீகே அக்பர் (ரலி) அவர்களைப் பின்பற்றி வருவார்கள்.

கண்ணியத்திற்குரிய செவியேற்பவர்களே! ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடனான ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களது அன்பு மற்றும் நேசத்தை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: மக்காவிலிருந்து

இதன் தொடர்ச்சி : 17ம் பக்கம்...

**National Watch Company**

**Sales & Service**




**B. Mohamed Adil**
93632 06679
99433 38000

196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172

**O.A.N. Doors & Steels**

V.A. SAIT
99430 30230



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad